
கல்கி
விஜய
KALKI ஏப்ரல் 12, 1953
4 அண


ஏன் கிப்ஸ்
உபயோகிக்கும் குழந்தைகள்
அதிருஷ்டமுடையவர்கள் ?
அதிருஷ்டமுடையவர்கள் ஏனென்றால்
அவர்களுடைய பெற்றோர்கள் கிப்ஸ் டென்டிபிரிஸ் வாங்குகிறார்கள் !
அதிருஷ்டமுடையவர்கள் ஏனென்றால்
அவர்கள் அதன் சுவையை அனுபவிக்கிறார்கள் !
அதிருஷ்டமுடையவர்கள் ஏனென்றால்
கிப்ஸ் டென்டிபிரிஸ் பற்களை வெண்மையாகவும் ஈறுகளை ஆரோக்கியமாகவும் இருக்கச்செய்கிறது !
நீலம், சிவப்பு, பச்சை டப்பிகளில்
Gibbs
கிப்ஸ் டென்டிபிரிஸ்
பற்களுக்கு சீரிய குணமளிக்கிறது—குறைந்த செலவில்!
G.D. 33-50 TM
டி. அன்டு டபிள்யு. கிப்ஸ் லிட்., லண்டனுக்காக இந்தியாவில் தயாரித்தது

# கல்கி பொருளடக்கம்


மலர் 12 | இதழ் 37

1953 ஏப்ரல் 12

நந்தன ஸு | பங்குனி 30உ



| | | | |
|---|---|---|---|
| புது ஆண்டும் தமிழ் நாடும் | (தலையங்கம்) | ... | 3 |
| புதிய வருடத்தில் குட்டிக் கலகமா? | ... | ... | 4 |
| இது என்ன வேஷம்? | (கார்ட்டூன்) | ... | 5 |
| அருமையான புது வருஷப் பரிசு (அட்டைப்படம்) | ... | ... | 6 |
| வைகாசி அனுடம் வள்ளுவர் திருநாள் | ... | ... | 7 |
| பொன்னியின் செல்வன் | கல்கி | ... | 9 |
| வண்ணான் சின்னசாமி | ராஜாஜி | ... | 18 |
| அதிர்ஷ்டக் குழந்தை (பாப்பா மலர்) | விஜயம் | ... | 23 |
| சேகர்-என் குழந்தை | எஸ். வி. எஸ். | ... | 27 |
| நார்ஜஹான் | ரா. கி. | ... | 30 |
| வாழ வைத்தவன் | கி. ரங்கராஜன் | ... | 33 |
| வாழ்வின் ரகசியம் | பி. எஸ். மணி | ... | 37 |
| வேதனைச் சங்கிலி | கௌசிகன் | ... | 42 |
| பஞ்சம் அறியாத பாலி மக்கள்! | ஸ்ரீமதி லோகநாதன் | ... | 50 |
| ஒலிம்பியா எக்ஸ்பிரஸ் | எச். ஷ்மிட் ஹென்னர்—வாஞ்சி | ... | 52 |
| யாருடைய பிள்ளை? | புஷ்யன் | ... | 59 |
| சிட்டுக் குருவி | கடகம் | ... | 65 |
| வட்டமேஜை | ... | ... | 68 |
| கரடி வேட்டையும் கல்யாணமும் | சிவசிதம்பரம் | ... | 71 |


"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.





ஜூபிடர்-
லாவண்யா
ஏப்ரல்
17ல்
முதல்
சென்னை
ஸ்ரீகிருஷ்ணா
சித்ரா
நூர்ஜஹான்
மற்றும்
தென்னிடெங்கும் ஆரம்பம்
டைரக்ஷன்:
K.ராம்நாத்
ஸ்டுடியோ:
நெப்ட்யூன்
மனிதன்
மேடையிலே உலாவி மனித உள்ளங்களுக்கு
இன்பமூட்டிய உணர்ச்சி ஓவியம்.....

கல்கி

மலர் 12

தமிழ்த் திருநாடு தன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா.
—பாரதியார்.

இதழ் 37

# புது ஆண்டும் தமிழ் நாடும்

புதிய தமிழ் ஆண்டு பிறக்கப் போகிறது. பெயரிலேயே வெற்றியை அமைத்துக் கொண்ட 'விஜய' வருடம் நாளை பிறக்கப் போகிறது. இந்தப் புதிய ஆண்டு தமிழ் நாட்டுக்கும் தமிழர்களுக்கும் என்ன கொண்டு வரப் போகிறது? பஞ்சாங்கம் பார்த்து ஜோதிடம் சொல்ல நமக்குத் தெரியாது.

ஆனால் புதிய ஆண்டு தமிழ் நாட்டுக்கு என்ன கொண்டுவர வேண்டுமென்று விரும்புகிறோமோ, அவற்றை நாம் சொல்லக் கூடும். அதற்கான வழிகளையும் ஓரளவு குறிப்பிட்டுக் காட்டக் கூடும்.

புது ஆண்டில் தமிழ் நாட்டின் மீது இயற்கை அன்னை கருணை செய்ய வேண்டும். நந்தன வருடத்தில் ஓரளவு இயற்கை கருணை காட்டித் தமிழர்கள் உயிரோடு இருக்க வேண்டிய அளவுக்கு மட்டும் மழை பெய்தது. விஜய வருடத்தில் இயற்கையின் கருணை பரிபூரணமாக வேண்டும். மழை ஏராளமாகப் பொழிந்து, நிலங்கள் நன்றாய் விளைந்து, செந்நெல்லும் கதலியும் கன்னலும் தென்னையும் செழிக்க வேண்டும். 'இல்லை' என்ற கொடுமை தமிழ் நாட்டில் இல்லையாக வேண்டும்.

புது ஆண்டில் தமிழ் மக்களிடையே தெய்வ நம்பிக்கையும் தெய்வ பக்தியும் ஓங்கி வளர வேண்டும்.

அதே சமயத்தில் சுய நம்பிக்கையும் கடமையில் பக்தியும் சிறக்க வேண்டும்.

தமிழ் மக்கள் ஒழுக்கத்திலும் பண்பாட்டிலும் உயர வேண்டும்.

அரசியல், சமூகம், தொழில், இலக்கியம், கலை ஆகிய எல்லாத் துறைகளிலும் தமிழ்நாடு முன்னேற வேண்டும்.

தமிழர்களிடையே ஒற்றுமையும் சகோதரப் பான்மையும் நிலைபெற வேண்டும்.

இவை நம் விருப்பம்; மனமார்ந்த கோரிக்கை; இதய பூர்வமான பிரார்த்தனை. எவ்வளவு தூரம் நிறைவேறுமென்று நாம் சொல்ல முடியாது.

சோதிடக்காரர்கள் ஒருவேளை சொல்லக் கூடும்.

அடுத்தபடியாக, தமிழ்நாட்டு அரசியல் தலைவர்களும், சமூகத் தலைவர்களும், தொழில் தலைவர்களும் சொல்லக் கூடும். ஏனெனில், அவர்களுடைய காரியங்களைப் பொறுத்தே எல்லாவித முன்னேற்றங்களும் ஏற்பட முடியும்.

இயற்கை அன்னையைக் கருணை செய்யும்படி கட்டாயப்படுத்த நம்மால் இயலாது. இயற்கை கருணை செய்வதும் செய்யாததும் நாம் அறிய முடியாத தெய்விக காரணங்களைக் கொண்டு நடைபெறுகின்றன.

ஆனால் மற்றத் துறைகளில் முன்னேற்றமெல்லாம் மக்களைப் பொறுத்திருக்கிறது; மக்களுடைய தலைவர்களைப் பொறுத்திருக்கிறது.

அரசியல் ஒன்று மட்டும் சரியாக நடந்தால், மற்ற எல்லாத் துறைகளிலும் ஓரளவேனும் முன்னேற்றத்தைக் காணலாம். இயற்கை கருணை செய்யத் தவறி விட்டாலும் எப்படியாவது சமாளித்துக் கொள்ளலாம்.

அரசியல் சரியாக நடைபெறாவிட்டால், மற்ற எல்லாத் துறைகளையும் அது பாதிக்கவே செய்யும். எல்லாவித முன்னேற்றங்களும் தடைப்படும்.

விடை பெற்றுச் செல்லும் நந்தன ஆண்டில் தமிழ் நாட்டின் அரசியல் நல்ல முறையில் அமைந்திருந்தது. அதற்கு முந்தைய வருஷக் கடைசியில் நடந்த பொதுத் தேர்தலில் ஏற்பட்ட அரசியல் கேடுகளை நந்தன வருடம் நல்ல முறையில் நிவர்த்தித்துக் கொண்டது. ராஜாஜியை முதன் மந்திரியாகப் பெறும் அதிர்ஷ்டத்தைப் பெற்றது. அதிலிருந்து பல மகத்தான நன்மைகளைத் தமிழ்நாடு அடைந்தது.

அதற்கு மாறாக, வருகிற விஜய ஆண்டில் தமிழ் நாட்டின் அரசியல் சீர்கேடுற்று எல்லாவித முன்னேற்றங்களையும் பாதிக்குமோ என்ற கவலை இப்போது ஏற்பட்டிருக்கிறது. இந்தக் கவலைக்கு ஆதாரமில்லை என்று வரப்போகும் சம்பவங்கள் நிரூபிக்க வேண்டுமென விரும்புகிறோம்.

# புதிய வருடத்தில் குட்டிக் கலகமா?

சென்ற ஆண்டின் ஆரம்பத்தில் ராஜாஜி இம் மாகாணத்தின் முதன் மந்திரி பதவி ஏற்றதை நாம் விரும்பவுமில்லை; உற்சாகமாக வரவேற்கவும் இல்லை. ராஜாஜி முதன் மந்திரி யாவதற்கு நாம் எதிராகவே இருந்தோம்.

முதிய பிராயத்தில் பாரமார்த்திகத் துறையில் மகத்தான தொண்டு செய்யக் கூடிய மகானை மறுபடியும் அரசியல் துறைக்கு இழுத்து ஏன் தொல்லை கொடுக்க வேண்டும் என்று கருதினோம். அவ்வாறே எழுதியு மிருந்தோம்.

ராஜாஜி இப் பதவியை விரும்பவில்லை என்பதைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. அவர் இப் பதவியை விரும்பவில்லை என்பது மட்டுமல்ல; வெறுக்கவும் செய்தார்.

பெரிய பதவியில் இருந்து அதிகாரம் செலுத்த வேண்டும் என்ற ஆசை அணுவளவேனும் ராஜாஜிக்கு இருந்திருந்தால், புது டில்லியை விட்டு வந்திருக்க மாட்டார்.

உள் நாட்டு மந்திரி பதவி என்பது பிரதம மந்திரி பதவிக்கு அடுத்தபடி. செல்வாக்கும் அதிகாரமும் உள்ள பதவி. ராஜாஜியைப் போன்றவர் வகிக்கும்போது பிரதம மந்திரி பதவிக்கும் மேற்பட்ட பதவி அது.

அகில இந்தியத் தலைவர்களுக்கு ராஜாஜியிடம் உள்ள மரியாதையின் அளவைச் சென்னை நகரம் சம்பந்தமான விவாதத்தில் பார்த்தோம். வாஞ்சு ரிபோர்ட்டைப் புறக்கணித்து விட்டு ராஜாஜியின் யோசனையை ஏற்றுக் கொண்டார்கள்.

"டில்லியில் இருக்கும்படி எவ்வளவோ வற்புறுத்தினேன். கேட்காமல் பிடிவாதமாக விட்டு விட்டு வந்தீர்கள். இங்கே இந்தத் தொல்லையை மேற் கொண்டிருக்கிறீர்கள்" என்று நேருஜி குறைப்பட்டது பகிரங்க இரகசியம். இன்னும் புது டில்லிக்கு வர வேண்டு மென்றுதான் நேருஜி வற்புறுத்திக் கொண்டிருக்கிறார்.

ஆனால் ராஜாஜியின் மனப் போக்கு அந்தத் துறையில் செல்லவில்லை.

சென்ற ஆண்டில் இந்தச் சென்னை மாகாணத்தை ஒரு பெரிய அரசியல் விபத்திலிருந்து காப்பாற்றுவதற்காகத்தான் முதன் மந்திரி பொறுப்பை ஏற்றார். ஏற்றுக் கொண்ட பிறகு ஒன்றன் பின் ஒன்றாகப் பிரமிக்கத்தக்க காரியங்களைச் செய்தார். அரசியல் குழப்ப விபத்திலிருந்து மட்டுமல்லாமல், பஞ்ச விபத்திலிருந்தும் பொருளாதார விபத்திலிருந்தும் இம் மாகாணத்தைக் காப்பாற்றினார்.

உணவுக் கண்ட்ரோலை எடுத்தது போன்ற ஒரு மகத்தான நல்ல காரியம் அரசியல் துறையிலும் சமூகத் துறையிலும் வேறு இருக்கவே முடியாது.

ராஜாஜி சென்னையில் செய்து காட்டிய வழியைப் பிற்பாடு தேசம் முழுவதும் பின் பற்றியது. நல்ல பலன்களையும் கண்டது.

தஞ்சை ஜில்லாவுக்கு விவசாயப் பாதுகாப்புச் சட்டம் செய்ததும் அவ்வளவு பெரும் பலன்களை நாளடைவில் கொடுக்கக் கூடிய காரியமாகும்.

சென்ற ஆண்டில் தஞ்சை ஜில்லாவில் நல்லபடியாகச் சாகுபடியும் அறுவடையும் ஆகித் தமிழ் நாட்டு மக்கள் இன்றையதினம் அரை வயிறு உணவேனும் பெற்று ஜீவித்திருப்பதற்குக் காரணம் அந்தச் சட்டம் என்று சொல்ல வேண்டும்.

கடைசியாக, சென்னை மாநகரை இரத்த வெள்ளம் ஓடும் ரணகள மாக்காமல் காப்பாற்றிக் கொடுத்த அரும் பெரும் செயலையும் ராஜாஜி செய்து விட்டார்.

தமிழர்களுக்குச் சென்னை நகர் மீதுள்ள நியாயமான உரிமையை நிலை நாட்டி விட்டார்.

இவ்வளவுக்குப் பிறகு ராஜாஜி முதன் மந்திரி பதவியிலிருந்தும் அரசியல் பொறுப்பிலிருந்தும் விடுதலை அடைய விரும்புவது இயல்பே யாகும்.

அந்தகைய விடுதலையை அவருக்கு அளித்துவிட மற்ற தமிழ்நாட்டுக் காங்கிரஸ்வாதிகள் முன் வந்தால், அது பாராட்ட வேண்டிய காரியமேயாகும்.

ஆனால் எந்த முறையில், எந்தவிதமான முன் ஜாக்கிரதை ஏற்பாடுகளுடன் ராஜாஜிக்கு ஓய்வு கொடுப்பது என்பதைப் பற்றி நன்கு ஆலோசித்துச் செய்ய வேண்டும்.

இசை கேடான முறையில் இந்தக் காரியத்தைச் செய்தால் தமிழ்நாடு சென்ற ஆண்டில் அடைந்த நன்மைகளை யெல்லாம் இழந்து விடுவதுடன், முன்னைவிட மோசமான படுகுழியில் விழுந்து விடும் என்பது நிச்சயம்.

• • •

சென்ற ஆண்டில் ராஜாஜியை முதன் மந்திரியாக்குவதற்கு மற்றக் காங்கிரஸ் வாதிகள் என்ன முறையைக் கடைப் பிடித்தார்கள்! அதே முறையை இப்போதும் கடைப் பிடிக்கவேண்டும்.

காங்கிரஸ் எம். எல். ஏ. க்கள்—காங்கிரஸ் வாதிகள் அத்தனை பேரும் ஒற்றுமையாகவும் ஒரு முகமாகவும் ராஜாஜியைத் தலைமை ஏற்கும்படி கேட்டுக் கொண்டார்கள். அவருடைய பதிலுக்காக மூன்று நாள் காத்திருந்தார்கள். இடையில் புது டில்லிக்குப் போய் நேருஜியின் சம்மதத்தையும் பெற்று வந்தார்கள்.

இப்போது ராஜாஜிக்கு ஓய்வு கொடுக்க விரும்பும் போதும் அதே முறையைத் தமிழ் நாட்டுக் காங்கிரஸ் தலைவர்கள் கடைப் பிடிக்க வேண்டும்.

அனைவரும் ஒன்று பட்டு ஒரு முகமாக "நெருக்கடி தீர்ந்து விட்டது. ஆந்திர இராஜ்யமும் பிரிந்து விட்டது. இனி, தமிழ் நாட்டு அரசியலை நாங்களே பார்த்துக் கொள்கிறோம். தாங்கள் ஓய்வு பெற்றுக் கொள்ளலாம்" என்று கூறினால், ராஜாஜி மகிழ்ச்சியும் திருப்தியும் அடைவார்.

அப்படி ராஜாஜியிடம் சொல்லி அவருக்கு ஓய்வு அளிக்க முற்படுவதற்கு முன், தமிழ் நாட்டின் வருங்கால முன்னேற்றப் பாதையை உறுதியாக வகுத்துக் கொள்ள வேண்டும்.

தமிழ் நாட்டுக் காங்கிரஸ் வாதிகள் தங்களுக்குள் திடமான ஒற்றுமையை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். ராஜாஜியின் ஸ்தானத்தை வகிப்பதற்கு மாக மறுவற்ற ஒழுக்க முள்ளவரும், அறிவாளியும், நிர்வாகத் திறமை வாய்ந்தவருமான ஒருவரைத் தலைவராகத் தேர்ந்தெடுத்துக் கொள்ள நிச்சயிக்க வேண்டும். ராஜாஜியை ஒருமுகமாகத் தேர்ந்தெடுத்ததுபோல் பின்னும் வரப்போகிற வரையும் ஒருமுகமாகத் தேர்ந்தெடுக்க வேண்டும். அப்படி ராஜாஜிக்குப்பதிலாக வரப்போகிற தலைவர்

யார் என்பதையும் தமிழ் மக்களுக்குச் சொல்லி அவர்களுடைய ஆமோதிப்பைப் பெற வேண்டும்.

இந்த முறைகளைக் கடைப்பிடித்தால், ராஜாஜி, தம் தள்ளாத பிராயத்தில் எத்தனையோ அரும்பாடுபட்டு ஆரம்பித்து வைத்த தொண்டுகள் பூர்த்தியாகும்.

இந்த இராஜபாட்டையான முறையைக் கையாளாமல் குட்டிக் கலகங்களை உண்டாக்கி ராஜாஜி மந்திரி சபையை மாற்ற வேண்டுமென்று முயலுவது பெரும் மடமையாகும். இவ்விதம் செய்ய முயலுகிறவர்கள் தங்களுக்கும், தமிழ் நாட்டுக்கும், தமிழ் நாட்டுக் காங்கிரஸுக்கும் தீங்கு செய்து கொள்ளுகிறார்கள்.

இத்தகைய குட்டிக் கலகங்களுக்கு அறிகுறிகள் ஏற்கனவே ஓரளவு தோன்றிவிட்டன. இந்த அறிகுறிகளைப் பார்த்துவிட்டுத் தமிழ்மக்கள் "மறுபடியும் இந்த ஆள்கள் தங்கள் சொரூபத்தைக் காட்ட ஆரம்பித்து விட்டார்களா! மீண்டும் தமிழ் நாட்டின் அரசியலைக் கெடுத்துக் குட்டிச் சுவராக்கப் போகிறார்களா!" என்று கேட்கத் தொடங்கி விட்டார்கள். நமக்கு இது சம்பந்தமாக வந்திருக்கும் பல கடிதங்கள் தமிழ் மக்களின் மனோ நிலையைப் பிரதிபலிக்கின்றன.

உதாரணமாக, ஒரு காங்கிரஸ் எம். எல். ஏ. சட்டசபையில் "ராஜாஜியை முதன் மந்திரி ஆக்கியபோது என்னவெல்லாமோ எதிர்பார்த்தோம். ஒன்றும் நிறைவேறவில்லை. ஏமாற்றமடைந்தோம்" என்று முறையிட்டிருக்கிறார்.

இவர் என்ன எதிர்பார்த்தார் என்பதுதான் தெரியவில்லை. ஒருவேளை தமக்கு மந்திரி வேலை கிடைக்குமென்று எதிர்பார்த்திருந்தால், அல்லது வேறு சொந்த சௌகரியங்களை எதிர்பார்த்திருந்தால், ஏமாற்றமடைவது இயல்புதான்.

பொதுத் தேர்தலில் செலவழித்த பணத்தைத் திரும்ப ஒரு வருஷத்தில் வட்டியும் முதலுமாகச் சம்பாதித்து விடலாம் என்று எந்தச் சட்டசபை அங்கத்தினர்களாவது எதிர் பார்த்திருந்தால், அப்படிப் பட்டவர்களும் ஏமாற்றமடைந்து தானிருப்பார்கள்.

சொந்த நன்மையை மட்டும் எதிர்பார்ப்பவர்கள் எல்லாரும் ராஜாஜியின் நிர்வாகத்தில் ஏமாற்றமடைந்தே தீருவார்கள்.

மற்றப்படி, இராஜ்ய மக்களின் பொது நன்மைக்கு உகந்த காரியங்களைப் பொறுத்த வரையில், யாரும் ஏமாற்றமடைவதற்கு இடமில்லை.

உண்மை அதற்கு நேர்மாறாயிருக்கிறது.

"இந்த மகானுபாவர்கள் சென்னையின் அரசியலை இவ்வளவு நாசப்படுத்தி வைத்திருக்கிறார்களே! இந்த நிலைமையில் ராஜாஜி முதன் மந்திரியாக வந்துதான் என்ன சாதித்து விடமுடியும்!" என்று நம்மிலே பலர் சந்தேகப் பட்டோம். அதற்காகவே ராஜாஜி முதன் மந்திரி பதவி ஏற்றுக் கொள்ளக் கூடாது என்று சொன்னோம்.

இப்படிச் சந்தேகப்பட்டவர்களைத்தான் ராஜாஜி ஏமாற்றி விட்டார். இவர்களுடைய சந்தேகத்தைப் பொய்ப்படுத்தி, ஒன்றன்பின் ஒன்றாகப் பிரமிப்பு அளிக்கக்கூடிய சாதனைகளைச் செய்தார். அந்தச் சாதனைகளைப் பார்த்துத் தமிழ் நாடு மட்டுமன்றி இந்தியா தேசம் முழுவதுமே வியக்தது, பல துறைகளில் தேசத்துக்கே வழி காட்டும்

## இது என்ன வேஷம்?




ரஷ்யாவின் தற்பொழுதைய சமாதானப் படையெடுப்பு நடவடிக்கைகளின் அடிப்படை இரகசியம் என்ன வென்பதைப் புரிந்து கொள்ள முடியாமல் நேச நாடுகள் தவிக்கின்றன.

படியான மேன்மையான நிலைமையைச் சென்னை இராஜ்யம் மீண்டும் அடைந்தது.

அப்படி யிருக்கும்போது, "ராஜாஜியின் நிர்வாகத்தினால் ஏதோ விளையும் என்று எதிர்பார்த்தோம். ஏமாற்ற மடைந்தோம்" என்று சொல்லுவதில் ஏதேனும் பொருள் இருக்கிறதா!—ஆம், இருக்கிறது! "ராஜாஜியின் சேவை இனித் தேவை இல்லை. மறுபடியும் நாங்கள் குட்டிக் கலகங்களைக் கிளப்பி உத்தியோக வேட்டையில் இறங்கப் போகிறோம்" என்ற பொருள் அதில் இருக்கத்தான் செய்கிறது.

சட்ட சபையில் வெளிப்படையாகப் பேசியவர் ஒருவர் என்றால், மற்றும் சில காங்கிரஸ்வாதிகள் அதே முறையில் தனிப்பட்ட இடங்களில் பேசத் தொடங்கி யிருக்கிறார்கள்.

கடவுளே! முன்னொரு தடவை இதே முறையைக் கையாண்டு பட்டதெல்லாம் போதாதா! அவர்தான் "போகிறேன்; போகிறேன்" என்கிறாரே! "நாங்கள் ஒற்றுமையாக இருந்து இராஜ்யத்தை நடத்திக் கொள்கிறோம்" என்று எந்த நிமிஷத்தில் இவர்கள் சொல்கிறார்களோ, அதே நிமிஷத்தில் அவர் குதூகலத்துடன் போகத் தயாரா யிருக்கிறாரே! அவரைப் போகச் சொல்வதற்குக் குட்டிக் கலகத்தைக் கிளப்புவானேன்! வாயில் வந்ததைப் பிதற்றுவானேன்! அதன் மூலம் காங்கிரஸுக்கும் தங்களுக்கும் ஆழமாகக் குழி தோண்டிக் கொள்வானேன்!

* * *

இத்தனை காலமும் ஆந்திர அரசியல் தலைவர்களைப் பற்றி நாம் பரிகாசம் செய்து கொண்டிருந்தோம். அவர்களுக்குள் இருக்கும் பிரிவினைகளைப் பற்றியும் கேலி செய்தோம். சென்ற பொதுத் தேர்தலுக்கு முன்னால் ஆந்திர காங்கிரஸ் வாதிகள் மூன்று பிரிவாகப் பிரிந்தார்கள். சஞ்சீவி ரெட்டியின் அசல் காங்கிரஸ், பிரகாசத்தின் பிரஜா கட்சி, ரங்காவின் கிருஷிக்லோக் கட்சி என்று மூன்று கட்சிகளாகப் பிரிந்து தேர்தலுக்கு நின்றார்கள். இதனால் கம்யூனிஸ்டுகளுக்குக் கோட்டை விட்டார்கள். நிச்சயமாகக் கிடைத்திருக்கக் கூடிய பல ஸ்தானங்களை இழந்தார்கள். பிறகு, கையை நெறித்துக்கொண்டு நின்றார்கள். மூன்று கட்சிகளின் தலைவர்களான சஞ்சீவி ரெட்டி, பிரகாசம், ரங்கா—மூன்று பேரும் தேர்தலில் முறியடிக்கப் பட்டது நாடு சிரிப்பதற்குரிய நிகழ்ச்சியாயிற்று.

அப்படிப் பிரிந்து பிளவுபட்டுக் கோட்டை விட்டவர்கள் இப்போது நல்லறிவு பெற்று ஒன்றுபட முயன்று வருகிறார்கள். புதிய ஆந்திர ராஜ்யம் வரப்போகிறதை நினைத்து அவர்கள் அதற்குள் எப்படியாவது ஒற்றுமை யடைந்துவிட வேண்டும் என்று பிரயத்தனம் செய்து வருகிறார்கள். அவர்களுடைய பிரயத்தனம் வெற்றி பெற வேண்டும் என்றும், புதிய ஆந்திர இராஜ்யத்தில் நிலைபேறான நல்லாட்சி நிலவ வேண்டுமென்றும் மனப்பூர்வமாக விரும்புகிறோம்.

இவ்வாறு, பிளவுபட்டு நின்ற நம் ஆந்திர சகோதரர்கள் ஒற்றுமைப்பட முயன்று வரும் சந்தர்ப்பத்தில், தமிழ் நாட்டில் ஏதோ முன் பின்னாகச் சேர்ந்து வேலை செய்து வரும் காங்கிரஸ்வாதிகள் தங்களுக்குள் குட்டிக் கலகங்களைக் கிளப்பிக் கொண்டு வேற்றுமைகளை வளர்த்தால், அதைக் காட்டிலும் தமிழ் நாட்டுக்குத் துரோகமான காரியம் வேறு எதுவும் இருக்க முடியாது.

ஆந்திர ராஜ்யம் பிரிந்து போவதால் அந்தப் புதிய இராஜ்யம் பல கடினமான பிரச்னைகளைச் சமாளிக்க வேண்டி யிருக்கும்.

அதே சமயத்தில் எஞ்சியுள்ள சென்னை ராஜ்யத்திலும் பல கடினமான பிரச்னைகள் கிளம்புவது நிச்சயம். உதாரணமாக, ஆந்திர நாட்டில் கிருஷ்ணா—கோதாவரி நதிகளின் பாசனத்தினால் நெல் விளைவு அதிகம். ஆகையால் உணவைப் பற்றிய வரையில் ஆந்திர ராஜ்யத்துக்குப் பிரச்னை கிடையாது.

எஞ்சிய சென்னை இராஜ்யத்தில் முன்னைக் காட்டிலும் உணவுப் பற்றாக்குறை அதிகமாகி விடும். இன்னும் சிலகாலத்துக்கேனும் மலையாளமும் நம்முடன் சேர்ந்திருக்கு மாதலால் உணவுப் பிரச்னை முன்னைவிடக் கடினமாகிவிடும்.

தமிழ் மக்கள் அனைவரும், தமிழ்நாட்டுத் தலைவர்கள் அனைவரும், ஒன்றுபட்டிருந்தால்தான் இத்தகைய புதிய பிரச்னைகளைச் சமாளிக்கமுடியும்.

பிரிந்து தனிப்பட்ட இராஜ்ய அமைப்பின் கீழ் தமிழ்நாடு எல்லாத் துறைகளிலும் முன்னேற வேண்டுமானால், காங்கிரஸ் வாதிகள் மட்டுமன்றி மற்ற எல்லாக் கட்சியாருமே சிறிது காலத்துக்கேனும் ஒத்துழைப்பது அவசியமாகும்.

இந்த நிலைமையில், காங்கிரஸுக்குள்ளேயே குட்டிக் கலகங்களைக் கிளப்ப முயல்வோர் தமிழ் மக்களுக்குப் பெருந் தீங்கு செய்வோர் ஆவர்.

அவ்விதம் கீழ்த்தரமான காரியங்களில் இறங்காமல் எல்லாரும் ஒன்றுபட்டு, ராஜாஜியிடமிருந்து இராஜ்ய பாரத்தை ஏற்றுக் கொண்டு அவருக்கு ஓய்வு கொடுப்பார்களானால், அவ்விதம் செய்ய முன் வருகிறவர்களை மகிழ்ச்சியுடன் பாராட்டவும் அவர்களுக்கு மனப்பூர்வமான நன்றி செலுத்தவும் சித்தமா யிருக்கிறோம்.

* * *

புதிய விஜய வருடத்தில் தமிழ் நாட்டின் அரசியலில் குழப்பம் எதுவும் நேரிடாமல் இருக்க வேண்டுமென்று விரும்புகிறோம். அரசியல் சீராக நடப்பதின் மூலம் தமிழ்நாடு எல்லாத் துறைகளிலும் முன்னேறப் பிரார்த்திக்கிறோம்.

# அருமையான புது வருஷப் பரிசு

தமிழ் மக்களுக்கு அருமையான புது வருடப் பரிசைத் தாங்கிக் கொண்டு இந்தக் "கல்கி" இதழ் வெளியாகிறது. ராஜாஜி அவர்கள் எழுதிய புதிய சிறு கதையை இந்த இதழில் நேயர்கள் படித்து மகிழ்வார்கள். ராஜாஜியின் சிறு கதைகள் எப்போதும் எளிய நடையில் எழுதப்பட்டிருக்கும். அதே சமயத்தில் அரிய கருத்துக்கள் பொதிந்து கிடக்கும். ஆழ்ந்து படிக்கப் படிக்க அக்கருத்துக்கள் புலனாகிக் கொண்டிருக்கும்.

வள்ளுவர் பெருமானின் திருக்குறளைக் குறித்துச் சங்கப் புலவர் ஒருவர் பாடினார் :—

"ஓதற் கெளிதாய் உணர்தற் கரிதாகி
வேதப் பொருளாய் மிகவிளங்கி—நீதியே
உள்ளுதோறும் உள்ளுதோறும் உள்ளம் உருக்குமே
வள்ளுவன் வாய்மொழி மாண்பு."

திருக்குறளுக்குச் சொல்லப்பட்ட இந்தச் சிறப்பியல்கள் ராஜாஜியின் சிறு கதைகளுக்கும் உண்டு.

தூய்மையான உள்ளத்தோடு படிக்கப் படிக்கப் படிப்பவர்களின் உள்ளங்களில் புதிய புதிய அழகுகளும் உண்மைகளும் உதயமாகிக் கொண்டிருக்கும். அத்தகைய சிறப்பு வாய்ந்த ராஜாஜியின் சிறு கதைகளில் தலைசிறந்தது என்று சொல்லக் கூடியதாக இந்த இதழில் வெளியாகியிருக்கும் சிறு கதை திகழ்கிறது.

எவ்வளவோ சிக்கல்களை உடைய ஒரு பெரிய இராஜ்யத்தின் அரசாங்கப் பொறுப்பைத் தாங்க வேண்டியவரா யிருக்கும் ராஜாஜி, இந்தச் சந்தர்ப்பத்தில், சிறுகதை எழுதுவதில் எப்படிக் கவனம் செலுத்த முடிந்தது என்பது நேயர்களுக்கு வியப்பை அளிக்கும். அது நமக்கும் அதிசயம் தரும் விஷயந்தான். தமிழ் இலக்கிய ரஸிகர்களின் அதிர்ஷ்டத்தைத் தவிர வேறு காரணம் சொல்லுவதற்கில்லை. இந்தப் புதிய ஆண்டில் தமிழ் நாட்டின் முன்னேற்றம் அரசியல் முதலிய துறைகளில் எப்படியிருந்தாலும், இலக்கியத் துறையில் இந்த விஜய வருடம் தமிழர்களுக்கு அதிர்ஷ்ட வருஷமாக இருக்கப் போகிறது என்பதற்கு இதை ஓர் அறிகுறியாகக் கருதுகிறோம்.

நமது புது வருடப் பரிசைக் "கல்கி" நேயர்கள் மனமுவந்து ஏற்றுக்கொண்டு பலமுறை படித்துப் பயன் பெற்று மகிழ்வார்கள் என்று நம்புகிறோம்.

இந்த வாரத்துக் "கல்கி" இதழ் அட்டையில் தெய்வத் தமிழ் அன்னை விஜய லக்ஷ்மி வடிவத்தில் கோயில் கொண்டு விளங்குவதையும் கண்டு மகிழக் கோருகிறோம்.

# வைகாசி அனுடம் வள்ளுவர் திருநாள்

ஒரு நாட்டின் மக்கள் தம் நாட்டில் பிறந்த பெரியோர்களைப் போற்ற அறிந்திருப்பார்களானால், அவர்கள் நாளுக்கு நாள் முன்னேற்றமடைவது நிச்சயம். பெரியார்களைப் போற்றி வழிபடுவதற்கு அறியாத எந்த சமூகமும் நாளுக்கு நாள் நலிந்து படும்.

"அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்"

என்பது திருவள்ளுவர் அருளிய தமிழ் மறை.

சமயம், சமூகம், அரசியல், கலை ஆகிய பல துறைகளிலும் பெரியோர்களாக விளங்கியவர்களைப் போற்றிக் கொண்டாட வேண்டியதுதான். ஆனால் கவிதைத் துறையில் பெரியோர்களான மகா கவிகளை மற்ற எல்லாரையும் காட்டிலும் அதிகமாகக் கொண்டாட வேண்டும். ஏனெனில், மகா கவிகளின் மூலமாகத்தான் ஒரு நாடும் சமூகமும் மேன்மையின் சிகரத்தை அடைய முடியும்.

மகாகவி ஷேக்ஸ்பியர் இயற்றிய அற்புத நாடக இலக்கியங்களைப் படித்ததின் பலனாகவேதான், ஆங்கிலேயர்கள் இணை இல்லாத மேன்மைகளையும் சிறப்புக்களையும் அடைந்தார்கள் என்பது உலகம் அறிந்த உண்மை.

* * *

தமிழ் மக்கள் போற்றிக் கொண்டாட வேண்டிய மூன்று மகாகவிகள் வள்ளுவரும், கம்பரும், நம் காலத்துப் பாரதியாரும் ஆவார்கள். வள்ளுவர், கம்பர் என்னும் இரு மகாகவிகளே தமிழர் சமூகம் இரண்டாயிரம் ஆண்டுகளாக ஜீவசக்தியுடன் பண்பாட்டில் சிறந்து விளங்கி வருவதற்குக் காரணமானவர்கள். நம் காலத்தில் தமிழர் சமூகத்துக்குப் புத்துயிர் அளித்தவர் பாரதியார். இந்த மூன்று மகாகவிகளையும் போற்றுவதற்கு என்றைக்குத் தமிழர்கள் மறந்து விடுகிறார்களோ, அன்றைக்கே தமிழர் சமூகத்தின் வீழ்ச்சிப் படலம் ஆரம்பமாகி விடும் என்பது நிச்சயம்.

மேற்கூறிய சிரஞ்சீவி மகா கவிகளில் கம்பர் திருநாளும் பாரதியார் திருநாளும் கொண்டாடுவதற்குரிய தினங்கள் ஒருவாறு உறுதிப்பட்டிருக்கின்றன. பாரதியார் திருநாளைச் செப்டம்பர் 11-ந் தேதி அவர் அமரரான தினத்தில் கொண்டாடும் பழக்கம் ஏற்பட்டு விட்டது. கம்பர் திருநாள் பங்குனி உத்திரத்தில் கொண்டாடப் படுகிறது. வேறு யார் கம்பர் திருநாளை மறந்தாலும் காரைக்குடி தமிழன்பர்கள் மறப்பதில்லை. ஆண்டுதோறும் நடைபெறுவதுபோல் இவ்வாண்டிலும் காரைக்குடியில் கம்பர் திருநாள் மிகச் சிறப்பாக நடைபெற்ற விவரங்களை நேயர்கள் பத்திரிகைச் செய்திகளில் படித்திருப்பார்கள்.

ஆதி மகா கவியும் தமிழ் மறை அருளியவருமான திருவள்ளுவர் திருநாளைக் கொண்டாடுவதற்கு அவ்விதம் குறிப்பிட்ட ஒரு தினம் உறுதிப்படவில்லை. இதனால் வள்ளுவர் திருநாளை நடத்த வேண்டிய முறையில் சிறப்புடன் நடத்த இயலாமலிருந்து வருகிறது.

திருவள்ளுவர் அமரரான தினம் மாசி உத்தரம் என்று சிலரும், வைகாசி அனுடம் என்று சிலரும் கருதுவதால், ஆங்காங்கே இந்த இரு தினங்களிலும் கொண்டாடுகிறார்கள். அல்லது திடீரென்று சில இடங்களில் தமிழன்பர்கள் விழித்தெழுந்து, தமிழுக்கு ஏதேனும் செய்ய வேண்டுமென்று ஊக்கம் கொண்டு, ஏதேனும் ஒரு நாளில் வள்ளுவர் திருவிழா நடத்துகிறார்கள்.

குறிப்பிட்ட ஒரு தினத்தில் பெரியோர்களுடைய திருவிழாவைக் கொண்டாடுவதில் பல அநுகூலங்கள் உண்டு. அன்று மக்கள் அனைவருடைய நினைவும் அப் பெரியாரின் பக்கம் திரும்பி நிற்கும். அந்த தினத்தை முன்னிட்டுக் கொண்டு, விழாவுக்கான முன்னேற்பாடுகளைச் சரிவரச் செய்யவும் சௌகரியமாயிருக்கும்.

* * *

ஈழநாட்டிலுள்ள தமிழர்கள் தமிழன்பு மிகுதியும் கொண்டவர்கள் அல்லவா! தமிழ் வளர்க்கும் அமைப்புக்கள் பலவற்றை நடத்தி வருகிறார்கள். அவற்றில் "தமிழ் மறைக் கழகம்" ஒன்றாகும். இக் கழகத்தின் தலைவரான பண்டிதர் கா. பொ. இரத்தினம், எம். ஏ., பி. ஓ. எல். திருவள்ளுவர் திருநாளைத் தமிழர்கள் அனைவரும் ஒரே தினத்தில் கொண்டாடுவது பொருத்தமாயிருக்குமென்று கருதி, ஈழநாட்டிலும் தமிழ் நாட்டிலுமுள்ள பல தமிழறிஞர்களின் கருத்தை அறிய முற்பட்டார். காலஞ்சென்ற மறைமலை அடிகள் வைகாசி அனுடத்தையே திருவள்ளுவர் திருநாளாகக் கருதியதாக அறிந்தார். இன்னும் தமிழறிஞர்களில் பெரும்பாலோரின் கருத்து அதை யொட்டி இருந்தது.

# முக்கிய அறிவிப்பு

Eyetex "ஐடெக்ஸ்" என்ற பெயரால் பண்டைய கால சாஸ்திரீய முறைப்படி முதன் முதல் கண் மை பெண்மணிகளின் அழகிற்கென்றே தயாரித்து விற்பனைக்கு வெகுகாலமாக அனுப்பி வரும் அரவிந்த் லாபரட்ரீஸார் இதன் மூலம் பொது மக்களுக்கும் வியாபாரிகளுக்கும் அறிவிப்பது என்னவென்றால்:–

மிகவும் குணமுள்ளதும், பொதுமக்களின் ஆதரவையும், விருப்பத்தையும் பெற்றுள்ள Eyetex "ஐடெக்ஸ்" என்ற கண் மைப் பெட்டிகளைப் போன்று இன்னும் இதரர்களால் அநேகமாக பெட்டிகளின் அளவு, பெயர், பார்வை, எழுத்துக்களின் கோர்வை முதலியவை எங்களது Eyetex "ஐடெக்ஸ்"தானோ என்று எளிதில் ஏமாறும்படியாக புதுப்புதுப் பெயர்களிலும் விதங்களிலும் கண் மை வந்து கொண்டிருக்கின்றன.

எங்களது Eyetex "ஐடெக்ஸ்" கண் மையின் குணம் கண்டு ஆதரவு அளித்துவரும் பொதுமக்கள் போலிகளைக் கண்டு எளிதில் ஏமாந்துவிடக் கூடுமென்று வாங்கும்போது அடியில் கண்ட பெட்டியின் மார்க்கையும் அரவிந்த் லாபரட்ரீஸாரால் தயாரிக்கப்பட்டதுதானா என்றும் நன்றாகப் பார்த்து வாங்குமாறு இதன் மூலம் கேட்டுக் கொள்கிறோம்.

Eyetex "ஐடெக்ஸ்" கண் மையை சிறு குழந்தைகள் முதல் உபயோகிக்கலாமென்று பரீக்ஷித்தறிந்த பல டாக்டர்கள் அத்தாக்ஷி செய்திருக்கிறார்கள்.

போலிகளை வாங்கி உங்களது அழகான கண்களை கெடுத்துக் கொள்ளாதீர்கள்.

Eyetex "ஐடெக்ஸ்" எல்லா ஊர்களிலும் எல்லா ஷாப்புகளிலும் 12 அணா விலைக்குக் கிடைக்கும்.




REGD. TRADE MARK

இது

அரவிந்த் லாபரட்ரீஸாரின் அறிக்கை

தயாரித்து விநியோகிப்பவர்கள் :

ARAVIND LABORATORIES

ARCOT ROAD - MADRAS-16


ஆதலின், வைகாசி அநுடத்தையே தமிழர்கள் வாழும் இடங்களிலெல்லாம் திருவள்ளுவர் திருநாளாகக் கொண்டாடவேண்டு மென்று பிரசாரம் செய்து வருகிறார்.

ஈழ நாட்டிலேயே சிறந்த தமிழன்பர்கள் சிலர் இதைக் குறித்து விவாதிக்கிறார்கள். "பெரியார்களின் திருநாளை என்றைக்குக் கொண்டாடினால் என்ன!" என்று கேட்கிறார்கள். சென்ற மாதத்தில் ஒரு நாள் கொழும்பு தமிழ்ச் சங்கம் திருவள்ளுவர் திருநாள் கொண்டாடியபோது இந்த விவாதம் முன்னணிக்கு வந்தது.

மகான்களுடைய திருநாட்களைக் கொண்டாட வேண்டியது அவசியம். "என்றைக்குக் கொண்டாடினால் என்ன!" என்னும் கேள்விக்குத் திருப்திகரமான விடையிறுப்பது கடினமான காரியம். ஆயினும், நாடெங்கும் ஒரே தினத்தில் கொண்டாடுவதில் சில அநுகூலங்கள் உள்ளன என்பதை மறுக்க முடியாது. அவ்விதம் ஒரு தினத்தைக் குறிப்பிட வேண்டு மென்று ஏற்படும்போது, மறைமலையடிகள் போன்றவர்கள் ஒப்புக்கொண்ட வைகாசி அநுடத்தையே வைத்துக் கொள்வது சாலச் சிறந்ததாகும்.

மாசி உத்தரத்தில் வழக்கமாகத் திருவள்ளுவர் திருநாள் கொண்டாடும் தமிழ் அன்பர்கள் அன்றையதினமே கொண்டாடட்டும். மற்றப்படி, தமிழ் நாட்டிலும் ஈழநாட்டிலும் தமிழ் மக்கள் வாழும் இடங்களிலெல்லாம் ஒவ்வொரு ஆண்டிலும் வைகாசி அநுடத்தில் திருவள்ளுவர் திருநாள் கொண்டாட வேண்டுமென்னும் யோசனையை நாம் முழு மனதுடன் ஆதரிக்கிறோம். விஜய வருடத்தில் வைகாசி மாதம் 15உ (28-5-53) யன்று திருவள்ளுவர் திருநட்சத்திரமாகிய அநுடம் வருகிறது. அன்று திருவள்ளுவர் திருநாளைத் தமிழர்கள் சிறப்பாகக் கொண்டாடும்படி கேட்டுக் கொள்கிறோம்.

* * *

திருவள்ளுவர் திருநாள் கொண்டாட வேண்டிய முறைகளை நாம் சொல்ல வேண்டியதில்லை. கவிகளுக்கு விழாக் கொண்டாடும் முறைகளை இப்போது அனைவரும் நன்கு அறிந்திருக்கிறார்கள். ஓலைச் சுவடிக்கு மேள தாளங்களுடன் ஊர்வலங்கள், பந்தல் அலங்காரங்கள், அறிஞர்களின் சொற்பொழிவுகள், பேச்சுப் போட்டிகள், பாடல் போட்டிகள், இன்னிசைக் கச்சேரிகள், நாடகங்கள், — இவை யெல்லாம் இலக்கிய விழாக்களின் இன்றியமையாத அம்சங்கள் ஆகியிருக்கின்றன. ஆயினும் தமிழ் நாட்டில் இவ் வாண்டில் பல இடங்களில் பஞ்ச நிலைமை ஏற்பட்டிருக்கிறபடியால், அதற்கேற்ற முறையில் இவ் வருடம் திருவள்ளுவர் திருநாளைக் கொண்டாடும்படி வேண்டிக் கொள்கிறோம்.

"பகுத்துண்டு பல்லுயிரோம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை"

என்பது தெய்வப் புலவரின் திருவாக்கு. ஆதலின் வருகிற வைகாசி அநுடத்தில் (மேமீ 28உயன்று) பல்லாயிரம் ஏழை மக்களுக்குத் தமிழ்நாடெங்கும் உணவு அளிக்கப் பட்டால் திருவள்ளுவர் திருநாள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டதாகும். ஊர்வலங்கள், சொற்பொழிவுகள் முதலியவற்றோடு ஏழைகளுக்கு உணவளித்தலை இந்த ஆண்டு திருவள்ளுவர் திருநாளில் முக்கிய நிகழ்ச்சியாகக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

# பொன்னியின் செல்வன்

கல்கி

## அத்தியாயம் 7

## மக்கள் குதூகலம்

ஓடக்கார முருகய்யன் தன் மனைவி போட்ட கூக்குரலைக் கேட்டுத் திடுக்கிட்டுத் திகைத்தான். மறுபடியும் அவளைப் பார்த்துக் கையினால் சமிக்ஞைகள் செய்து கொண்டே, "பெண்ணே! என்ன உளறுகிறாய்? உனக்குப் பைத்தியமா?" என்றான்.

"எனக்கு ஒன்றும் பைத்தியமில்லை. உனக்குப் பைத்தியம்; உன் அப்பனுக்குப் பைத்தியம்; உன் பாட்டனுக்குப் பைத்தியம். உனக்கு இவரை அடையாளம் தெரியவில்லையா? ஈழத்தை வெற்றி கொண்டு மன்னன் மகிந்தனை மலை நாட்டுக்குத் துரத்திய வீராதி வீரரை உனக்கு இன்னாரென்று தெரியவில்லையா? சக்கரவர்த்தியின் திருக்குமாரரை, சோழ நாட்டு மக்களின் கண்ணின் மணியானவரை, காவேரித் தாய் காப்பாற்றிக் கொடுத்த தவப் புதல்வரை உன்னால் அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லையா? அப்படியானால், இவரோடு எதற்காக நீ புறப்பட்டாய்? எங்கே போகப் புறப்பட்டாய்?" என்றாள் ராக்கம்மாள்.

இளவரசர் இப்போது குறுக்கிட்டு, "பெண்ணே! நீ என்னை யார் என்றோ தவறாக நினைத்துக் கொண்டாய்! நான் ஈழ நாட்டிலிருந்து வந்த வியாபாரி. நான்தான் இவனை என்னுடன் வழி காட்டுவதற்காக அழைத்துக் கொண்டு புறப்பட்டேன்! இவன் யார்? உன் கணவனா? வேணுமானால் இவனை உன்னோடு அழைத்துக் கொண்டு போ! வீண் கூச்சல் போடாதே!" என்றார்.

இந்தப் பேச்சு நடந்து கொண்டிருந்த போதே அவர்களைச் சுற்றிலும் ஜனங்கள் கூடி விட்டார்கள். கூட்டம் நிமிஷத்துக்கு நிமிஷம் அதிகமாகிக் கொண்டிருந்தது. வந்தவர்கள் எல்லாரும் இளவரசரை உற்றுப் பார்க்கலானார்கள்.

அப்போது ராக்கம்மாள் இன்னும் உரத்த குரலில், "ஆ! தெய்வமே! இது என்ன? பொன்னியின் செல்வருக்குச் சித்தப் பிரமையா? கடலில் முழுகிய போது நினைவை இழந்து விட்டீர்களா? அல்லது அந்தப் பாவி புத்த பிக்ஷுக்கள் இப்படித் தங்களை மந்திரம் போட்டு மயக்கி வேறொருவர் என்று எண்ணச் செய்து விட்டார்களா? அல்லது,— ஐயையோ! — அப்படியும் இருக்குமா? தாங்கள் இறந்து போய், தங்கள் திருமேனியில் வேறு எவனேனும், கூடுவிட்டுக் கூடு பாயும் வித்தை தெரிந்தவன், வந்து புகுந்திருக்கிறானா? அப்படியெல்லாம் இருக்க முடியாது! கோமகனே! நன்றாக யோசித்துப் பாருங்கள். தாங்கள் வியாபாரி அல்ல. சுந்தர சோழ சக்கரவர்த்தியின் திருப் புதல்வர். உலகத்தை ஒரு குடை நிழலில் ஆளப் பிறந்தவர். சந்தேகமிருந்தால் தங்கள் உள்ளங் கைகளைக் கவனமாகப் பாருங்கள். சங்கு சக்கர ரேகைகள் இருக்கும்!" என்று கத்தினாள்.

உடனே இளவரசர் அருள்மொழி வர்மர் தம் இரு கைகளையும் இறுக மூடிக் கொண்டார்.

"பெண்ணே! நீ வாயை மூடிக் கொண்டு சும்மா இருக்க மாட்டாயா!" என்று சொல்லி விட்டு, முருகய்யனைப் பார்த்து, "இது என்ன தொல்லை? இவளுடைய கூச்சலை நிறுத்த உன்னால் முடியாதா?" என்று கேட்டார்.

முருகய்யன் தன் மனைவியின் அருகில் வந்து காதோடு, "ராக்கம்மா! உனக்குப் புண்ணியமாய்ப் போகட்டும்! பேசாமலிரு! இளவரசர் யாருக்கும் தெரியாமல் வியாபாரி வேஷத்தில் தஞ்சாவூர் போக விரும்புகிறார்!" என்றான்.

"அடபாவி மகனே! இதை முன்னாடியே சொல்லியிருக்கக் கூடாதா? புத்த மடத்தில் இளவரசர் இருக்கவே மாட்டார் என்று சொன்னாயே? அந்தப் புத்தியோடுதான் இப்போதும் இருந்திருக்கிறாய்? ஐயையோ! என்ன குற்றம் செய்து விட்டேன்! ஆசை மிகுதியால் உளறி விட்டேனே? பாவிப் பழுவேட்டரையர்கள் தங்களைச் சிறைப் படுத்திப் பழிவாங்கச் சமயம் பார்த்துக் கொண்டிருக்கிறார்களே! அது தெரிந்திருந்தும் இப்படித் தங்களைப் பகிரங்கப்படுத்தி விட்டேனே? இளவரசே! ஆனாலும் நீங்கள் அஞ்ச வேண்டாம். பழுவேட்டரையர்கள் தங்கள் திருமேனியில் ஓர் அணுவுக்கும் தீங்கு செய்ய முடியாது. என்னைப் போலும் என் கணவனைப் போலும் லட்ச லட்சம் பேர்கள் தங்கள் கட்சியில் நின்று தங்களைப் பாதுகாக்க ஆயத்தமாயிருக்கிறார்கள்!" என்றாள். உடனே தன்னைச் சுற்றிலும் நின்ற பெருங் கூட்டத்தைப் பார்த்து, "நான் சொன்னதை நீங்கள் எல்லாரும் ஆமோதிக்கிறீர்கள் அல்லவா? உங்களில் யாரேனும் பழுவேட்டரையர் கட்சியைச் சேர்ந்தவர்கள் உண்டா? அப்படியானால், அவர்கள் இப்படி முன்னால் வாருங்கள்! என்னை முதலில் கொன்று விட்டுப் பிறகு இளவரசருக்குத் தீங்கு செய்ய எண்ணுங்கள்!" என்று அலறினாள்.

அது வரையில் அடங்காத வியப்புடன் பார்த்துக் கேட்டுக் கொண்டிருந்த மக்கள், உடனே, "பொன்னியின் செல்வர் வாழ்க! ஈழங் கொண்ட வீராதி வீரர் வாழ்க!" என்று ஒரு பெரிய கோஷத்தைக் கிளப்பினார்கள். அதைக் கேட்டு விட்டு மேலும் பல மக்கள் திரண்டு வந்து அங்கே கூடினார்கள். அப்படி வந்தவர்களிலே நாகைப்பட்டினம் நகரத்தின் எண்பேராயத் தலைவர் ஒருவரும் இருந்தார். அவர் கூட்டத்தை விலக்கிக் கொண்டு முன்னால் வந்து, "கோமகனே! தாங்கள் இந்த நகரின் சூடாமணி விஹாரத்தில் இருந்து வருவதாகக் கேள்விப்பட்டோம். அந்த வதந்தியை நாங்கள் நம்பவில்லை. இப்போது உண்மை அறிந்தோம். நேற்று அடித்த பெரும் புயல் இந்த நகரத்தில் எத்தனையோ நாசங்களை விளைத்திருக்கிறது. ஆனாலும், தங்களைப் புத்த விஹாரத்திலிருந்து பத்திரமாய் வெளிக் கொணர்ந்ததே, அதை முன்னிட்டுப் புயலின் கொடுமைகளையெல்லாம் மறந்து விடுகிறோம். இந்த நகரில் தங்களுடைய பாதம் பட்டது இந் நகரின் பாக்கியம்!" என்று கூறினார்.

இளவரசர் இனிமேல் தன்னை மறைத்துக் கொள்ளப் பார்ப்பதில் பயனில்லை என்று கண்டு கொண்டார்.

"ஐயா! தங்களுடைய அன்புக்கு மிக்க நன்றி. இந்த நகர மாந்தரின் அன்பு என்னைப் பரவசப் படுத்துகிறது. ஆனால் வெகு முக்கியமான காரியமாக நான் தஞ்சாவூருக்கு அவசரமாகப் போக வேண்டியிருக்கிறது. பிரயாணம் தடைப்படக் கூடாது என்பதற்காகத் தான் இப்படி வியாபாரியின் வேடம் பூண்டு புறப்பட்டேன். எனக்கு விடை கொடுங்கள்!" என்றார்.

அப்போது கூட்டத்திலிருந்து ஒரு குரல் கிளம்பியது. "கூடாது கூடாது! இளவரசர் இங்கே ஒரு நாளாவது தங்கி ஏழைகளாகிய எங்களின் உபசாரத்தைப் பெற்றுக் கொண்டுதான் புறப்பட வேண்டும்" என்று உரக்கச் சத்தமிட்டுக் கூறியது அக்குரல்.

அதைப் பின்பற்றி இன்னும் ஆயிரமாயிரம் குரல்கள் "கூடவே கூடாது! இளவரசர் ஒரு நாளாவது இங்கே தங்கி இளைப்பாறி விட்டுத்தான் போக வேண்டும்!" என்று கூச்சலிட்டன.

எண்பேராயத்தின் தலைவர் அப்போது "கோமகனே! என் நகர மக்களின் அன்பையும் உற்சாகத்தையும் பார்த்தீர்களா? எங்கள் உபசாரத்தைத் தாங்கள் ஏற்றுக் கொண்டு ஒருவேளையாவது எங்கள் விருந்தாளியாக இருந்து விட்டுத்தான் போக வேண்டும். புத்த பிக்ஷுக்கள் செய்த பாக்கியம் நாங்கள் செய்யவில்லையா? நேற்று இந் நகர மாந்தர் தங்களைப் புத்த பிக்ஷுக்கள் மறைத்து வைத்திருக்கிறார்கள் என்று சந்தேகப்பட்டுச் சூடாமணி விஹாரத்தையே தகர்த்து மண்ணோடு மண்ணாக்கி விடப் பார்த்தார்கள். அந்தச் சமயத்தில் புயல் வந்து விட்டது! நாங்கள் செய்யத் தவறியதைப் புயல் செய்து விட்டது. விஹாரம் இடிந்து மண்ணோடு மண்ணாகி விட்டது!" என்று சொன்னார்.



அதைக் கேட்ட இளவரசர் "ஐயா! தாங்கள் புத்த பிக்ஷுக்கள் மீது குற்றம் சுமத்தியது சரியல்ல. என்னுடைய வேண்டுகோளுக்காகவே பிக்ஷுக்கள் புத்த விஹாரத்தில் என்னை வைத்திருந்தார்கள். நோய்வாய்ப்பட்டு உயிருக்கு மன்றாடிய என்னை யமனுடைய பாசக் கயிற்றிலிருந்து காப்பாற்றினார்கள். சூடாமணி விஹாரம் விழுந்து விட்டது என்று கேட்டு என் மனம் வேதனைப்படுகிறது. அதைத் திருப்பிக் கட்டிக்கொடுப்பது என்னுடைய கடமை!" என்றார்.

"ஆகா!, இதெல்லாம் முன்னரே எங்களுக்குத் தெரியாமல் போயிற்றே! இப்போது தெரிந்து விட்டபடியால் சூடாமணி விஹாரத்தை நாங்களே புதுப்பித்துக் கட்டிக் கொடுத்து விடுவோம். இளவரசே! தாங்கள் ஒருவேளை எங்கள் விருந்தாளியாக மட்டும் இருந்து விட்டுப் போக வேண்டும்!" என்றார் எண் பேராயத்தின் தலைவர்.

"ஆமாம், ஆமாம்!" என்று பதினாயிரக் கணக்கான மக்களின் குரல்கள் எதிரொலி செய்தன.

"இளவரசே! இங்கே தங்குவதினால் ஏற்படும் தாமதத்தைச் சரிப்படுத்திக் கொள்ளலாம். தாங்களோ கால் நடையாகப் புறப்பட்டிருக்கிறீர்கள். புயல் மழை காரணமாகச் சோழ நாட்டுச் சாலைகள் எல்லாம் தடைப்பட்டுக் கிடக்கின்றன. நதிகளிலெல்லாம் பூரண வெள்ளம் போகிறது. கால் நடையாகச் சென்று எப்போது போய்ச் சேர்வீர்கள்? தங்களை யானைமீது வைத்து ஊர்வலமாக அனுப்புகிறோம். தங்களுடன் நாங்கள் அனைவரும் வந்து தஞ்சாவூருக்கே கொண்டு விட்டு வருகிறோம்" என்றார் எண் பேராயத்தின் தலைவர்.

அவர் பேசிக் கொண்டிருக்கையில், ஜனங்களின் கூட்டம் மேலும் அதிகமாகிக் கொண்டிருந்தது.

இளவரசர் யோசித்தார். காரியம் என்னவோ கெட்டுப் போய் விட்டது. இரகசியம் வெளியாகி விட்டது. ராக்கம்மாள் மூடத்தனமாகக் கூச்சலிட்டு வெளிப்படுத்தி விட்டாள். மூடத்தனத்தினால் தான் வெளிப்படுத்தினாளா?...... அல்லது வேறு ஏதேனும் நோக்கம் இருக்குமா?......எப்படியிருந்தாலும் இந்த நகர மக்களின் அன்பை மீறிக்கொண்டு உடனே புறப்படுவது இயலாத காரியம். அதனால் இவர்கள் மனக்கஷ்டம் அடைவார்கள். அதோடு, உத்தேசத்திலுள்ள நோக்கம் மேலும் தவறினாலும் தவறி விடும். மத்தியானம் வரையிலேனும் இருந்து இவர்களைச் சமாதானப் படுத்தி விட்டுத்தான் போக வேண்டும். புயலினால் கஷ்ட நஷ்டங்களை அடைந்தவர்களுக்குச் சிறிது ஆறுதல் கூறிவிட்டுப் போக வசதியாகவும் இருக்கும். ஆகா! நான் இச்சமயம் என்னை வெளிப்படுத்திக் கொள்வதால் நாட்டில் குழப்பம் விளையும் என்று இளைய பிராட்டி

குந்தவை கூறினாரே? அது எவ்வளவு உண்மையான வார்த்தை!—என் தமக்கையைப் போன்ற அறிவாளி இந்த உலகிலேயே யாரும் இல்லைதான்!—தஞ்சைச் சிங்காதன உரிமையைப் பற்றிப் பேசுகிறார்களே? உண்மையில், குந்தவை தேவியை அல்லவா சிம்மாதனத்தில் அமர்த்த வேண்டும்?......

இவ்வாறு பொன்னியின்செல்வர் சிந்தித்துக் கொண்டிருந்தபோது ஜனக் கூட்டம் மேலும் அதிகமாகி வருவதைக் கண்டார். அவர்களுடைய குதூகலமும் வளர்ந்து வருவதை அறிந்தார். புயலின் கொடுமைகளையும், புயலினால் விளைந்த சேதங்களையும் மக்கள் அடியோடு மறந்து விட்டதாகத் தோன்றியது. எங்கிருந்தோ, யானைகள், குதிரைகள், சிவிகைகள் திருச்சின்னங்கள், கொடிகள், பேரிகை எக்காளம் முதலிய வாத்தியங்கள்,—எல்லாம் வந்து சேர்ந்து விட்டன.

அரைப் பகல் நேரமாவது இங்கே தங்கிவிட்டுத் தான் புறப்பட வேண்டும் என்று இளவரசர் முடிவு செய்தார்.

எண் பேராயத்தின் தலைவரைப் பார்த்து, "ஐயா! இவ்வளவு மக்களின் அன்பையும் புறக் கணித்து விட்டு நான் போக விரும்பவில்லை. பிற்பகல் வரையில் இங்கே இருந்துவிட்டு மாலையில் புறப்படுகிறேன், அதற்காவது அனுமதி கொடுப்பீர்கள் அல்லவா?" என்றார்.

இளவரசர் தங்கிச் செல்லச் சம்மதித்து விட்டார் என்ற செய்தி பரவியதும் ஜனக்கூட்டத்தின் உற்சாகம் எல்லை கடந்து விட்டது. குதூகலத்தை வெளிப் படுத்தும் வழிகளைக் கடைப்பிடிக்கத் தொடங்கினார்கள். வாத்தியங்கள் முழங்கத் தொடங்கின. ஆங்காங்கே வீதிகளில் கத்தி விளையாட்டு, கழி விளையாட்டு, குரவைக் கூத்து முதலியவை ஆரம்பமாயின. ஜனங்களையும் அவர்களுடைய குதூகல விளையாட்டுக்களையும் கடந்து கொண்டு நாகைப்பட்டினத்துச் சோழ மாளிகைக்குச் செல்வது பெரிதும் கஷ்டமாயிற்று. எப்படியோ கடைசியில் போய்ச் சேர்ந்தார்கள்.

மாளிகைக்குள் இளவரசர் சிறிது நேரம் கூடத் தங்கி இளைப்பாற முடியவில்லை. ஏனெனில், அவர் வெளிப்பட்ட செய்தி அக்கம் பக்கத்துக் கிராமங்களுக்கெல்லாம் பரவி விட்டது. ஜனங்கள் திரள் திரளாக வந்து குவிந்துகொண்டிருந்தார்கள். இளவரசரைப் பார்க்க வேண்டும் என்ற தங்கள் ஆவலைத் தெரியப்படுத்திக் கொண்டார்கள்.

இளவரசரும் அடிக்கடி வெளியில் வந்து ஜனக் கூட்டத்தினிடையே சென்று அவர்களுடைய க்ஷேம லாபங்களைப் பற்றிக் கேட்டார். புயலினால் விளைந்த கஷ்ட நஷ்டங்களைப் பற்றி அநுதாபத்துடன் விசாரித்தார். தாம் தஞ்சாவூருக்குப் போனவுடனே ஜனங்கள் அடைந்த கஷ்டங்களுக்குப் பரிகாரம் கிடைக்க ஏற்பாடு செய்வதாகக் கூறினார். அதைப்பற்றி ஜனங்கள் அவ்வளவு உற்சாகமடையவில்லை என்பதையும் கண்டு கொண்டார். ஜனங்கள் ஒருவரோடொருவர் "பழுவேட்டரையர்களின் அதிகாரத்துக்கு முடிவு ஏற்படுமா?" என்று பேசிக் கொண்டதும் அவர் காதில் விழுந்தது. சக்கரவர்த்தியின் உடல் நிலையைப் பற்றியும் அடுத்தபடி சிம்மாதனத்துக்கு வரக்கூடியவரைப் பற்றியும் அடக்கமான குரலில், ஆனால் இளவரசர் காதில் விழும்படியாகப் பலரும் பேசினார்கள்!

இதற்கிடையில் நாகைப்பட்டினம் நகரின் ஐம்பெருங் குழுவின் அதிகாரிகளும், எண்பேராயத்தின் தலைவர்கள் அனைவரும் வந்து சேர்ந்து விட்டார்கள். இளவரசருக்கு விருந்து அளிக்கப் பெருந்தர ஏற்பாடுகள் நடந்தன. இளவரசரைப் பார்க்க வந்த ஜனத்திரளுக்கு உணவளிக்கும் ஏற்பாடுகளும் நடந்தன. புயலினால் நஷ்டமானதுபோக நகரில் எஞ்சியிருந்த தானியங்கள் எல்லாம் வந்து குவிந்தன. கறிகாய்களைப் பற்றியோ கவலையே இல்லை. விழுந்த வாழை மரங்களின் வாழைக் காய்க் குலைகளையும், விழுந்த தென்னை மரங்களின் தென்னங் குலைகளையும் கொண்டு ஒரு லட்சம் பேருக்கு விருந்து தயாரித்து விடலாமே!

* * *

விருந்துகள் முடிந்து, புறப்பட வேண்டிய சமயம் நெருங்கிற்று. இளவரசர் சோழ மாளிகையின் மேன்மாடத்து முகப்பில் வந்து கைகூப்பிக் கொண்டு நின்றார். வீதியில் ஒரு பெரிய கோலாகலமான ஊர்வலம் புறப்படுவதற்கு எல்லாம் ஆயத்தமாயிருந்தன. இளவரசர் ஏறிச் செல்வதற்கு அலங்கரிக்கப் பட்ட யானை ஒன்று வந்து நின்றது. முன்னாலும் பின்னாலும் குதிரைகள், ரிஷபங்கள் முதலியவை நின்றன. திருச்சின்னங்களும் கொடிகளும் ஏந்தியவர்களும் பலவித வாத்தியக்காரர்களும் அணி

வருத்து நின்றார்கள். மக்களோ நேற்று மாலை பொங்கி எழுந்த கடலைப் போல ஆரவாரித்துக் கொண்டு கண்ணுக்கெட்டிய தூரம் நின்றார்கள்.

இளவரசர் வெளித் தோற்றத்துக்குப் புன்னகை பூத்த முகத்துடன் பொலிந்தார். அவர் உள்ளத்திலோ பெருங் கவலை குடிகொண்டிருந்தது. பெற்ற தாயைக் காட்டிலும் பதின்மடங்கு அவருடைய அன்பைக் கவர்ந்திருந்த ஈழத்து ராணியின் கதியைப் பற்றி அறிந்து கொள்ள அவர் உள்ளம் துடி துடித்தது. முருகய்யன் மனைவியிடம் இன்னும் சிறிது விவரம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் என்று எண்ணியிருந்தார். அவளோ ஜனக் கூட்டத்தில் மறைந்து விட்டாள். முருகய்யன் மட்டும் மூண்டியடித்துக் கொண்டு இளவரசரைத் தொடர்ந்து சோழ மாளிகைக்கு வந்து சேர்ந்தான். அவன் மனைவி ராக்கம்மாள் என்ன ஆனாள் என்பது அவனுக்கும் தெரியவில்லை.

மற்றொரு பக்கத்தில் இளவரசரை வேறொரு கவலை பற்றிக் கொண்டிருந்தது. சக்கரவர்த்தியின் விருப்பத்துக்கு விரோதமாகத் தான் இராஜ்யத்தைக் கைப்பற்ற விரும்புவதாய் முன்னமேயே பழுவேட்டரையர்கள் சொல்லிக்கொண்டிருந்தார்கள். இந்த ஜனங்கள் செய்யும் ஆர்ப்பாட்டங்களின் காரணமாக அவர்கள் கூற்று உண்மை என்று ஏற்பட்டு விடலாம் அல்லவா?

எப்படியாவது இந்த நகர மாந்தர்களின் அன்புச் சுழலிலிருந்து தப்பித்துப் போனால் போதும் என்று இளவரசருக்குத் தோன்றி விட்டது.

இந்த நிலைமையில் அவர் சற்றும் எதிர்பாராத இன்னொரு சம்பவம் நிகழ்ந்தது. ஜனங்களிடம் விடை பெற்றுக் கொள்ளும் பாவனையில் இளவரசர் கும்பிட்டுக் கொண்டு நின்றபோது, ஜனக் கூட்டத்தை விலக்கிக் கொண்டு ஐம்பெருங் குழுவின் அதிகாரிகளும் எண்பேராயத்தின் தலைவர்களும் மாளிகையின் வாசலில் வந்து நின்றார்கள்.

முன்னேற்பாட்டின்படி நிகழ்ந்தது போல், சில நிமிட நேரம் பேரிகை, முரசு, எக்காளம் முதலிய நூறு நூறு வாத்தியங்கள் கடலொலியையும் அடக்கிக்கொண்டு ஒலித்தன. சட்டென்று அவ்வளவு வாத்தியங்களும் நின்றபோது அப்பெருங் கூட்டத்தில் நிச்சப்தம் நிலவியது. அச்சமயத்தில் நகரத் தலைவர்களில் முதியவராகக் காணப்பட்ட ஒருவர் மாளிகை முன் வாசலில் இருந்த நிலா மேடை மீது ஏறி நின்றுகொண்டு கம்பீரமான குரலில் கூறினார்:—

"பொன்னியின் செல்வ! ஒரு விண்ணப்பம். நாகை நகரையும் அக்கம் பக்கத்துக் கிராமங்களையும் சேர்ந்த ஜனங்களின் சார்பாக ஒரு கோரிக்கை. சக்கரவர்த்தியின் உடல் நிலையைப்பற்றி நாங்கள் அனைவரும் கவலை கொண்டிருக்கிறோம். அதைப் போலவே நாங்கள் கேள்விப்படும் இன்னொரு செய்தியும் எங்களுக்குக் கவலை தருகிறது. பழுவேட்டரையர்களும் பல சிற்றரசர்களும் சேர்ந்து சக்கரவர்த்திக்குப் பிறகு மதுராந்தகத் தேவருக்கு முடிசூட்டத் தீர்மானித்திருப்பதாக அறிகிறோம். மதுராந்தகத் தேவர் இன்று வரையில் போர்க்களம் சென்று அறியாதவர். அவர் பட்டத்துக்கு வந்தால் உண்மையில் பழுவேட்டரையர்கள்தான் இராஜ்யம் ஆளுவார்கள். சிற்றரசர்கள் வைத்ததே சட்டமாயிருக்கும். இளவரசர் ஆதித்த கரிகாலர் மூன்று ஆண்டு காலமாகச் சோழ நாட்டுக்கு வரவேயில்லை. அதற்கு ஏதேதோ காரணங்கள் சொல்கிறார்கள். அவருக்கு மகுடம் சூட்டிக் கொள்ள

---


## தஞ்சாவூர் கலைப் பொருட்காட்சி - கலை விழா

**[ஏப்ரல் 13ந் தேதி முதல் 27ந் தேதி வரை]**

**முதன் மந்திரி ராஜாஜி அவர்கள்**

புது வருடப் பிறப்பன்று (ஏப்ரல் 13உ) காலை 9 மணிக்குத் தஞ்சை அரண்மனை மண்டபத்தில் திறந்து வைப்பார்கள்.

ஏப்ரல் 13உ முதல் 16உ வரையில் ஸ்ரீ டி. கே. எஸ். சகோதரர்களின் "ஔவையார்", "கள்வனின் காதலி", "தமிழ்ச் செல்வம்", "இரத்த பாசம்" என்னும் நாடகங்கள் நடைபெறும். 17உ முதல் 27உ வரையில் பல பிரபல வித்வான்களின் சங்கீதக் கச்சேரிகளும் நடன நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

விருப்பமில்லை என்றும் கூறுகிறார்கள். அப்படியானால் அடுத்தபடி நியாயமாகப் பட்டத்துக்கு வர வேண்டியவர் யார்? சோழநாடு தவம் செய்து பெற்ற புதல்வரும், காவேரித் தாய் காப்பாற்றிக் கொடுத்த செல்வரும், ஈழம் வென்ற வீராதி வீரருமான தாங்கள்தான்...... மக்களே! நான் கூறியது உங்களுக்கெல்லாம் சம்மதமான காரியமா?" என்று அந்த முதியவர் சுற்றிலும் நின்ற ஜனத்திரளைப் பார்த்துக் கேட்கவும், எட்டுத் திசையும் நடுங்கும்படியான பேரொலி அக் கூட்டத்திலிருந்து எழுந்தது. "ஆம், ஆம்; எங்கள் கருத்தும் அதுவே!" என்று பதினாயிரம் குரல்கள் கூறின. அதைத் தொடர்ந்து "பொன்னியின் செல்வர் வாழ்க!" என்று ஒரு லட்சம் குரல்கள் கோஷித்தன. இவ்வளவு கோஷங்களும் சேர்ந்து உருத்தெரியாத ஒரு பெரும் இரைச்சலாகக் கேட்டது.

மறுமொழி சொல்வதற்காக இளவரசரின் உதடுகள் அசையத் தொடங்கியதும், ஏதோ மந்திர சக்தியினால் கட்டுண்டு அடங்கியது போல் அந்தப் பேரிரைச்சல் அடங்கியது.

"ஐயா! நீங்கள் எல்லாரும் என்னிடம் கொண்டிருக்கும் அன்பைக் கண்டு ஆனந்தப்படுகிறேன். ஆனால் அந்த அன்பை நீங்கள் காட்டும் விதம் முறையாக இல்லையே? என் அருமைத் தந்தை — சுந்தரசோழ சக்கரவர்த்தி—இன்னும் ஜீவிய வந்தராக இருக்கிறார் என்பதை நீங்கள் மறந்து விட்டதாகத் தோன்றுகிறது. சக்கரவர்த்தி நீடூழி வாழவேண்டும் என்று என்னுடன் சேர்ந்து நீங்களும் பிரார்த்திக்க வேண்டும். சக்கரவர்த்தி ஜீவியவந்தராக இருக்கும்போது அவருக்குப் பிறகு பட்டத்துக்கு யார் என்பதைப் பற்றி யோசிப்பது ஏன்?"

நகரத் தலைவர்களிலே முதல் தலைவரான முதியவர் இளவரசரின் இக் கேள்விக்குச் சரியான விடை வைத்திருந்தார்.

"பொன்னியின் செல்வ! சோழ நாட்டில் ஒரு மன்னர் உயிரோடிருக்கும் போதே அடுத்தபடி பட்டத்துக்குரியவர் யார் என்பதை நிர்ணயித்து விடுவது தொன்று தொட்டு வந்திருக்கும் வழக்கம். மதுரை கொண்ட வீரரும் தில்லையம்பலத்துக் கோயிலுக்குப் பொற்கூரை வேய்ந்தவருமான மகா பராந்தக சக்கரவர்த்தி. தம் காலத்திலேயே தமக்குப் பின் பட்டத்துக்கு வரவேண்டியவர்களை முறைப்படுத்தி விடவில்லையா? அதன்படிதானே தங்கள் தந்தை சிம்மாசனம் ஏறினார்?" என்றார்.

"ஆம், ஆம்! ஆகையால் இப்போதும் அடுத்த பட்டத்துக்கு உரியவரைப் பற்றிச் சக்கரவர்த்தி தானே தீர்மானிக்க வேண்டும்? நீங்களும் நானும் அதைப் பற்றி யோசிப்பதும் பேசுவதும் முறை அல்லவே?" என்றார் இளவரசர்.

"பொன்னியின் செல்வ! சக்கரவர்த்திக்குத்தான் அந்த உரிமை உண்டு என்பதை ஒப்புக் கொள்கிறோம். சக்கரவர்த்தி சுயேச்சையாக முடிவு செய்யக் கூடியவரா யிருந்தால் அது சரியாகும். தற்போது சக்கரவர்த்தியைப் பழுவேட்டரையர்கள் தஞ்சைக் கோட்டைக்குள் சிறைப்படுத்தி அல்லவோ வைத்திருக்கிறார்கள்? இளவரசே! இன்னும் சொல்லப்போனால், சக்கரவர்த்தி உயிரோடு இருக்கிறாரா என்பதைப் பற்றியே எங்களில் பலருக்குச் சந்தேகமா யிருக்கிறது. தங்களுடன் தொடர்ந்து தஞ்சைக்கு வந்து அந்தச் சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்ள விரும்புகிறோம். அதிர்ஷ்டவசமாகச் சக்கரவர்த்தி நல்லபடியாக இருந்தால், அவரிடம் எங்கள் விருப்பத்தைத் தெரிவித்துக் கொள்வோம். அவருக்குப் பிற்பாடு தாங்கள்தான் சிங்காதனம் ஏறவேண்டுமென்று விண்ணப்பித்துக் கொள்வோம். பிறகு, சக்கரவர்த்தி முடிவு செய்கிறபடி செய்யட்டும்!"

பெரியவர் சக்கரவர்த்தி உயிரோடிருக்கிறாரா என்பதைப் பற்றிச் சந்தேகப்பட்டுக் கூறிய வார்த்தைகள் இளவரசரின் உள்ளத்தில் ஒரு பெரும் திகிலை உண்டாக்கின. இத்தனை நாளும் அவர் அறிந்திராத வேதனையும் பீதியும் ஏற்பட்டன. சக்கரவர்த்தியின் உயிருக்கு ஏதோ ஆபத்து நெருங்கி விட்டது போலவும், அதைத் தடுக்க முடியாத தூரத்தில் தாம் இருப்பது போலவும் ஒரு பிரமை உண்டாயிற்று. ஈழத்துராணியை யாரோ மூர்க்கர்கள் பலவந்தமாகப் பிடித்துக் கொண்டு போன விவரமும் நினைவுக்கு வந்தது. இனி ஒரு கணமும் தாமதியாமல் தஞ்சை போய்ச் சேர வேண்டும் என்ற பரபரப்பு ஏற்பட்டது. ஒரு சில வினாடி நேரத்தில் இளவரசர் தாம் செய்யவேண்டியது இன்னதென்று தீர்மானித்துக் கொண்டார். இவர்களுடன் வாதமிட்டுக் கொண்டிருப்பதில் பயனில்லை. பிரயாணப் படுவதுதான் தாமதமாகும். இப்போது இவர்கள் பேச்சை ஒப்புக் கொண்டதாகச் சொல்

கிப் பிரயாணப் பட்டுவிட்டால், வழியில் போகப் போக வேறு உபாயங்களைக் கண்டு பிடித்துக் கொள்ளலாம்.

"ஐயா! உங்களுடைய விருப்பத்துக்கு நான் குறுக்கே நிற்கவில்லை. சக்கரவர்த்தியைப் பற்றித் தாங்கள் கூறியது அவரைத் தரிசிக்க வேண்டுமென்ற என் கவலையை அதிகரித்து விட்டது. நான் உடனே புறப்பட வேண்டும். நீங்களும் சக்கரவர்த்தியைத் தரிசிக்க விரும்பினால் தாராளமாக என்னுடன் வாருங்கள். பட்டத்து உரிமையைப் பற்றிச் சக்கரவர்த்தி என்ன சொல்லுகிறாரோ, அதைக் கேட்டு நாம் அனைவரும் நடந்து கொள்வோம்!" என்றார்.

சிறிது நேரத்துக்கெல்லாம் இளவரசர் யானைமீது ஏறிக் கொண்டு பிரயாணப் பட்டார். ஆயிரக் கணக்கான மக்கள் அடங்கிய ஒரு மாபெரும் ஊர்வலம் தஞ்சையை நோக்கிப் புறப்பட்டது. போகப் போக இளவரசருடன் தொடர்ந்த ஊர்வலம் பெரிதாகிக் கொண்டிருந்தது.

## அத்தியாயம் 8

# படகில் பழுவேட்டரையர்

புயல் அடித்த அன்று காலையிலேதான் பெரிய பழுவேட்டரையர் கடம்பூரி லிருந்து தஞ்சைக்குப் புறப்பட்டார் என்பது நேயர்களுக்கு நினைவிருக்கும். கொள்ளிட நதி வரையில் அவர் வழக்கமான பாதையிலே சென்று, பின்னர் கொள்ளிடக் கரைச் சாலை வழியாக மேற்கு நோக்கித் திரும்பினார். சோழ நாட்டுக் கிராமங்களின் வழியாக அவர் நீண்ட பிரயாணம் செய்ய விரும்பவில்லை. மேற்கே சென்று திருவையாறுக்கு நேராகக் கொள்ளிடத்தைக் கடக்க விரும்பிச் சென்றார்.

வழக்கம்போல் நூற்றுக் கணக்கான பரிவாரங்களுடன் இச்சமயம் பெரிய பழுவேட்டரையர் புறப்படவில்லை. தாம் போவதும் வருவதும் கூடிய வரையில் எவருடைய கவனத்தையும் கவராமலிருக்க வேண்டுமென்று நினைத்தார். ஆகையால் பத்துப் பேரைத்தான் தம்முடன் அழைத்துப் போனார்.

திருவையாற்றுக்கு நேரே கொள்ளிடத்துக்கு வட கரையில் பழுவேட்டரையர் வந்தபோது அந்தப் பெரிய நதியில் வெள்ளம் இரு கரையும் தொட்டுக் கொண்டு பிரவாகமாகப் போய்க் கொண்டிருந்தது. அங்கிருந்த சிறிய படகில் குதிரைகளைக் கொண்டு போவது இயலாத காரியம். பெருங் காற்றுக்கு அறி குறிகள் காணப்பட்டுக் கொண்டிருந்தன. ஆகையால், திரும்பிப் போவதற்குச் சௌகரியமாக இருக்கட்டும் என்று குதிரைகளை வட கரையில் விட்டு விட்டுப் பழுவேட்டரையர் தம்முடன் வந்த பத்து வீரர்களுடன் படகில் ஏறினார். படகு நடு நதியில் சென்று கொண்டிருந்தபோது புயல் வலுத்து விட்டது. படகோட்டிகள் இருவரும் எவ்வளவோ கஷ்டப்பட்டுப் படகைச் செலுத்தினார்கள். நதி வெள்ளத்தின் வேகம் படகைக் கிழக்கு நோக்கி இழுத்தது. புயல் அதை மேற்கு நோக்கித் தள்ளப் பார்த்தது. படகோட்டிகள் படகைத் தெற்கு நோக்கிச் செலுத்த முயன்றார்கள். இந்த மூன்று வித சக்திகளுக்கு இடையில் அகப்பட்டுக் கொண்ட படகு திரும்பித் திரும்பிச் சக்கராகாரமாகச் சுழன்றது.

பழுவேட்டரையரின் உள்ளத்திலும் அப்பொழுது ஒரு பெரும் புயல் அடித்துச் சுழன்று கொண்டிருந்தது. நந்தினியின் எதிரில் இருக்கும்போது அவருடைய அறிவு மயங்கிப் போவது சாதாரண வழக்கம். அவள் கூறுவதெல்லாம் சரியாகவே அவருக்குத் தோன்றும். வாழ்நாளெல்லாம் தமக்குப் பிடிக்காமலிருந்த ஒரு காரியத்தை நந்தினி சொல்லும் போது அது செய்வதற் குரியதாகவே அவருக்குத் தோன்றி விடும். ஏதேனும் மனதில் சிறிது சந்தேகமிருந்தாலும் அவருடைய வாய் "சரி சரி! அப்படியே செய்வோம்" என்று கூறிவிடும். சொல்லிய பிறகு, வாக்குத் தவறி எதுவும் செய்வதற்கு அவர் விரும்புவதில்லை.

இப்போதும் அவரைத் தஞ்சைக்குப் போய் மதுராந்தகரை அழைத்து வரும்படி நந்தினி சொன்னபோது, சரி என்று ஒத்துக்கொண்டு விட்டார். பிரயாணம் கிளம்பிய பிறகு அது சம்பந்தமாகப் பற்பல ஐயங்கள் எழுந்து அவர் உள்ளத்தை வதைத்தன. நந்தினியின் நடத்தையில் அணுவளவும் களங்கம் ஏற்படக் கூடும் என்று அவர் எண்ணவில்லை. ஆயினும் நந்தினியை யொத்த பிராயமுடைய மூன்று வாலிபர்களுக்கு மத்தியில் அவளைத் தனியே விட்டு விட்டு வந்திருக்

இருனும் என்ற எண்ணம் அடிக்கடி அவர் மனத்தில் தோன்றி வேதனை தந்தது.

கந்தமாறன், வந்தியத்தேவன், ஆதித்த கரிகாலன் ஆகிய மூவர் மீதும் அவர் குரோதம் கொள்வதற்குக் காரணங்கள் இருந்தன. பொக்கிஷ நிலவறையில் நள்ளிரவில் தாமும் நந்தினியும் போய்க் கொண்டிருந்தபோது கந்தமாறன் எதிர்ப்பட்டு. நந்தினியை, "தங்கள் மகள்" என்று குறிப்பிட்டது அவர் நெஞ்சத்தில் பழுக்கக் காய்ச்சிய இரும்பினால் சூடு போட்டது போல் பதிந்திருந்தது. அப்போது உண்டான குரோதத்தில் அவனைக் கொன்று விடும்படியாகவே காவலனுக்கு இரகசியக் கட்டளை யிட்டு விட்டார்.

கோவில் பட்டரின் மகளைக் கலியாணம் செய்து கொள்ள விரும்பினார் என்பதும், அவன்தான் நந்தினி என்பதும் அவர் காதுக்கு எட்டி யிருந்தது. அவர்கள் இப்போது சந்தித்திருக்கிறார்கள். அதற்கு நந்தினி மிக்க முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறாள். எதற்காக? ஒன்று நிச்சயம். ஆதித்த கரிகாலன் பெரிய முரடனா யிருக்கலாம். பெரியோர்களிடம் மரியாதை இல்லாதவனா யிருக்கலாம். ஆனால் அவன் சோழ குலத்தில் உதித்தவன். அந்தக் குலத்திலே யாரும் பிறனில் விழையும் துரோகத்தைச் செய்ததில்லை. கரிகாலனும் அப்படிப்பட்டவன் அல்ல. பெண்கள் விஷயமான நடத்தையில் மாசு மறுவற்றவன். ஆனால் நந்தினி?

# ரம்மியமான தோற்றம்...



பின்னியின் பெங்களூர் தனிப்பட்டு ஜார்ஜெட் சேலையணிந்தவுடன் உங்கள் தோற்றத்தில் ஓர் அலாதி பெருமிதக் கவர்ச்சி வீசுகிறது. அபூர்வ மென்மை உடைய இந்த பின்னியின் பெங்களூர் பட்டு ஸலாசாகத்திற்கு ஏற்ற வசீகரம்பொருந்திய ஆடையாகும்.

மனோரம்மியமான பெண்டல் நிறங்களிலிருந்து நல்ல பட்டான நிறங்கள்வரை பின்னியின் ஏராளமான வர்ண நிறுவைகளைக் காணுங்கள். தனிப்பட்ட மோஸ்தர்களில் சரிகைக் கரைகளுடன்கூடிய அவர்களது எடுப்பான சேலை நிறுவைகளையும் பாருங்கள்.

நீங்கள் பிரயாணம் செய்யும்போது ஞாபகமாக பின்னியின் பெங்களூர் பட்டுச்சேலை எடுத்துச் செல்லுங்கள். இஸ்திரி போடவேண்டுமென்ற கவலையில்லை: மடிப்பைப் பிரித்து உடுக்கவேண்டியதுதான்.


## பெங்களூர் பட்டுகள்

ஸ்ரீ பெங்களூர் உலன், காட்டன் & ஸில்க் மில்ஸ் கம்பெனி லிட்.,
பெங்களூர், 2
மானேஜிங் ஏஜன்டுகள்: பின்னி & கம்பெனி (மதராஸ்) லிட்.

வியாபார விநியோகஸ்தர்கள்:

மெஸர்ஸ். எச். ஏ. ஆர். முகமத் சேட் & ஸன்ஸ், தீவான் சூரப்பா சந்து, பெங்களூர் ஸிடி
மெஸர்ஸ். ஹாஜி இப்ராஹிம் எஸ்ஸாக் & ஸன்ஸ், சிக்பேட், பெங்களூர் ஸிடி
மெஸர்ஸ். ராம்நாராயன் கிரிதாரிதாஸ் & கம்பெனி, தீவான் சூரப்பா சந்து, பெங்களூர் ஸிடி
ஸ்ரீ மதராஸ் மில்ஸ் டிரேடிங் கம்பெனி, சாண்டர்ஸ் ரோடு, செகந்திராபாத்

# கண்ணன் சின்னசாமி



**பா**ரதியார் எழுதிய பாடல்களில் சிலவற்றை அவரே கிழித்தெறிந்து விட்டதுண்டு. ஜனங்களுக்குப் பயன் படாது என்றோ அல்லது அழகாய் அமையவில்லையென்றோ எண்ணி, சில நல்ல பாட்டுக்களையும் கிழித்து விடுவார். இது நமக்குப் பெரிய நஷ்டம். இப்போது அதைப் பற்றி வருந்திப் பயனில்லை. போனது போனதுதான்.

ஒரு சமயம் "கண்ணன் ஒரு திருடன்" என்று ஒரு அழகான பாட்டுப் பாடினார். பக்கத்து வீட்டுச் சாமிநாதப் பிள்ளையின் மகன் சுந்தரம் என்கிற குழந்தையைப் பற்றி, பாரதியாரின் மனைவியார் அடிக்கடி வருத்தப்பட்டுப் பேசுவதுண்டு. அந்தப் பையன் சுந்தரவதனம் பெற்ற குழந்தை. நல்ல புத்திசாலி. ஆனால் பையனுக்குக் கொஞ்சம் திருட்டுப் புத்தி. இதைப் பற்றித் தகப்பனாரிடம் சொல்லித் திருத்தப் பார்க்கலாமா என்று பாரதியாரும் மனைவியும் யோசிப்பார்கள். சாமிநாத பிள்ளை கொஞ்சம் கடுமையாகப் பேசுவார். ஆனால் மிக நல்லவர். மகன் விஷயம் அவருக்குச் சொன்னால் மனம் புண்பட்டு மிகவும் கஷ்டப்படுவார். 'சொல்லாமலிருப்பதே நலம்; ஆண்டவன் விளையாட்டு' என்று பாரதியாரும் அவர் மனைவியாரும் முடிவு செய்து விடுவார்கள்.

இதைப் பற்றிப் பேசும் போது ஒரு நாள் பாரதியாரின் ஆவேசம் ஏறித் துள்ளி, "கண்



## சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

★★★ மனிதனுடைய உள்ளம் ஒரு விசித்திரம். அது வளர்வதும் மாறுவதும் ஆண்டவனின் விளையாட்டு. அடுப்புக் கரியும் பள பள வென்று மின்னும் வைரக் கல்லும் ஒரே பொருள் என்று ரசாயன பண்டிதர்கள் சொல்லுகிறார்கள். ஒரே பொருள், அதன் அணு அமைப்பு கொஞ்சம் மாறிவிட்டால் வேறு பொருளாகி விடுகிறது. பொருளே மாறும் பொழுது ஒரு மனிதனுடைய குணங்கள்' மாறுவதில் என்ன வியப்பு! ★★★



ணன் ஒரு திருடன்'' என்னும் பாட்டைப் பாடினார். குழந்தையாக வெண்ணெயைத் திருடியதும், குள்ளனாய் மண்ணைத் திருடியதும், கம்பத்துள் புகுந்திருந்து இரணியனைக் கிழித்ததும், மரத்தின் பின் ஒளிந்து நின்று வாலியைக் கொன்றதும், இப்படி எல்லா பகவத் கிரீடைகளும் அதில் அமைந்திருந்தன. மனைவி கேட்டதின் பேரில் பாட்டை எழுதியும் தந்தார். பிறகு ஏனோ ஒரு நாள் பாட்டைக் கிழித்துப் போட்டார்.

[இது கதை: உண்மையான பாரதியார் சரித்திரமல்ல.]

சிறு குழந்தைகளுக்குள்ள ஆசைகளைச் சரியான முறையில் திருத்திப் பூரணமடையச் செய்வது பெற்றோர்களின் வேலை. ஆனால் இந்தக் கடமையைச் செய்யும் திறமை சரியானபடி அடைவதற்கு முன்னமேயே குழந்தைகளை அவசரம் அவசரமாகப் பெற்று விடுகிறோம். குழந்தைகளோ தங்களைப் பெற்றவர்கள் அனுபவமும் அறிவும் அடைவதற்காக வளராமல் காத்திருப்பதில்லை. அவசரமாக வளர்ந்து கொண்டே போகிறார்கள்.

இயற்கை ஆசைகளே உயிர் அமைப்பின் வேக மூலம். தேகமும் உள்ளமும் வளர்ந்து முதிர்வதெல்லாம் ஆசை வேகங்களின் வேலை தான். பிரகிருதி அமைப்பு இது. ஆசை இல்லா



மற் போனால் வளர்ச்சியில்லை. வளர்ச்சி இல்லாமற் போனால் உயிர் நோய் வாய்ப்படும். ஆனபடியால் ஆசை வேகங்களுக்குச் செல்ல வழிகள் சரியாக வகுத்துக் கொடுக்கவேண்டும். அப்படிச் செய்யாமற் போனால் பத்தில் மூன்று விதம் வேகங்கள் கோணல் மார்க்கங்களில் சென்று விடும். அதுதான் குடும்பங்களின் துக்கங்களுக்குக் காரணம். இந்த அபாயத்தைக் கவனிப்பது பெற்றோர்களின் கடமை. இதைவிடச் சிறந்த தேசத் தொண்டோ சமூகச் சேவையோ வேறு இல்லை. குடும்பங்களின் தொகுதியே தேசம், சமூகம் எல்லாம்.

* * *

**வ**க்கீல் வசந்தய்யர் மகன் ரகு மிகவும் சுருசுருப்பான பையன். புத்தி, சாமர்த்தியம், அழகு எல்லாம் படைத்தவன். இந்த நல்ல பையனுக்கு ஒன்பதாவது வயதிலிருந்து ஒரு கெட்ட வழக்கம். எங்கேயாவது நல்ல பேனாக்கத்தி பார்த்தால் அதை யாருக்கும் தெரியாமல் மெள்ள மடியில் எடுத்துச் செருகிக் கொண்டு, பிறகு மறைத்து வைத்து விடுவான். யாராவது வீட்டுக்கு விருந்தாளி வந்தால் அவர்கள் பணப்பை காணாமற் போகும். வீட்டில் உள்ள வேலைக்காரர்கள் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு போகப்படுவார்கள். "இவன்தான் எடுத்திருக்க வேண்டும்; ஆனால் ருசு இல்லை" என்று ஒரு அப்பாவி வேலைக்காரன் மேல் பழி சுமத்தப்படும். ரகு, பரீட்சையில் தன் பள்ளிக்கூடத்தில் முதலாகத் தேறி வந்தான். உபாத்தியாயர்களுக்கு இவன்மேல் மிகப் பிரியம். வகுப்புக்கு மேல் வகுப்பாக ஏறிச் சென்று சென்னைப் பட்டினமும் போய்ப் படித்து முடிவில் பி. எல். பரீட்சை தேறிவிட்டு இருபத்தொரு வயதில் வக்கில் தொழிலில் அமர்ந்து விட்டான்.

ஆரம்பத்தில், "நார்ட்டன்" சங்கரய்யருக்கு ஜூனியராக ரகுராம ஐயர் வக்கில் தொழில் செய்து வந்தார்.

ஒருநாள் மதுரையிலிருந்து திருச்சி ரயிலில் போய்க் கொண்டிருந்தார். இரண்டாம் வகுப்பு வண்டியில் இவர்கூடப் பிரயாணம் செய்த திருநெல்வேலி ஜில்லா முன்சீபு கிருஷ்ணய்யர் எதிர் பெஞ்சில் சொக்காயை எடுத்து விட்டுப் படுத்து அரைத் தூக்கம் தூங்கிக் கொண்டிருந்தார். பகல் பிரயாணம்தான். ஆனாலும் ரயில் வண்டி ஆட்டத்தில், முக்கியமாக வயதானவர்களுக்கு, தூக்கம் வரும்.

கிருஷ்ணய்யருடைய ஜிப்பா, மெல்லிய மில் துணி, கொக்கியில் மாட்டியிருந்தது. காற்றில் கொஞ்சம் ஆடிக் கொண்டிருந்தது. ஜேபியில் கருப்புத்தோல் பணப்பை வைத்திருந்தது நன்றாகத் தெரிந்தது. அதைப் பார்க்காதவர் போல் ரகுராம அய்யர் அதே கவனமாக இருந்தார். ஜன்மாந்தர கர்ம பலன் என்பார்கள். பழவினை என்று மாணிக்க வாசகர் அடிக்கடி பாடியிருப்பதும் இதுவே. கிருஷ்ணய்யர் தண்ணீர் அறைக்குள் போனார். கதவு மூடினதும் சட்டென்று வக்கீல் ரகுராம அய்யர் எழுந்து கிருஷ்ணய்யரின் ஜிப்பாவை எடுத்து ஜேபியிலிருந்த பையைத் திறந்து அதிலிருந்து நூறு ரூபாய் நோட்டை மட்டும் எடுத்துக் கொண்டு சொக்காயையும் காலிப் பணப் பையையும் ஜன்னல் வழியாக எறிந்து விட்டுத் தம் இடத்தில் உட்கார்ந்தார். பிறகு படுக்கையை விரித்து அதன்மேல் படுத்தவராகத் தம் பணப் பையைத் திறந்து அதற்குள் நோட்டை மடித்து வைத்துத் தலையணைக்குக் கீழ் பத்திரமாகச் செருகி விட்டுத் தூங்குவதுபோல் கண் மூடிக் கொண்டார். எல்லாம் அரை நிமிஷ வேலை. கொஞ்ச நேரம் கழித்துக் கிருஷ்ணய்யர் தண்ணீர் அறையிலிருந்து திரும்பி வந்தார். தன் ஜிப்பாவை இங்கும் அங்கும் தேடினார்.

"என்ன இது, ஆச்சரியம்!" என்று ரகுராம அய்யரை எழுப்பினார்.

"கீழே விழுந்து போயிருக்கும்; நன்றாகப் பாருங்கள்" என்றார் ரகுராம அய்யர். கண்களைத் துடைத்துக் கொண்டு கொட்டாவியும் விட்டார்.

"எல்லாம் பார்த்தேன்; எங்கும் இல்லை. யாரோ எடுத்துவிட்டார்கள். நான் உள்ளே இருந்தபோது வண்டி எந்த ஸ்டேஷனிலாவது நின்று நீர் வெளியே போனீரா?" என்று அலறினார், முன்சீபு கிருஷ்ணய்யர்.

"வண்டியை விட்டு நான் இறங்கவுமில்லை. வண்டி நிற்கவும் இல்லை. இன்னும் ஒரு ஸ்டேஷனும் வரவில்லை. ஒரு வேளை காற்றில் ஜன்னல் வழியாக விழுந்து போயிருக்கலாம். கோட்டா? ஜிப்பாவா?" என்று நிதானமாகக் கேட்டார் ரகுராம அய்யர்.

"ஜிப்பாதான். வெள்ளை ஜிப்பா. ஜேபியில் பணப்பை இருந்தது" என்றார் கிருஷ்ணய்யர்.

அவருக்கு ரகுராம அய்யர் மேல் சந்தேகம். ஆனால் அவருடன் வண்டி ஏறும்போது பேசினதில் அவர் திருச்சி வசந்த அய்யர் குமாரர், பிரபல வக்கீல், நார்ட்டன் சங்கர அய்யரிடம் ஜூனியர் என்றெல்லாம் தெரிந்து கொண்டிருந்தார். எப்படி அவர் பணத்தை எடுத்திருக்கக் கூடும் என்று, உதித்த சந்தேகத்தை நீக்கிக் கொண்டார்.

"எவ்வளவு வைத்திருந்தீர் பணப் பையில்?" என்று பேச்சைத் தொடர்ந்தார் ரகுராம அய்யர்.

"நூறு ரூபாய் நோட்டு வைத்திருந்தேன்" என்றார் கிருஷ்ணய்யர்.

"அடடா! நம்பர் எழுதி வைத்திருக்கிறீரா?" என்று கேட்டார் ரகுராமய்யர்.

"எப்போதும் எழுதி வைப்பது வழக்கம். இந்தத் தடவைதான் எழுதவில்லை."

ரகுரா மய்யரின் உள்ளத்தில் அப்பொழுது ஏற்பட்ட மகிழ்ச்சியை வெளியில் காட்டிக் கொள்ளவில்லை.

"எப்போதும் நம்பர் குறித்து வைத்துக் கொள்ள வேண்டும்" என்று சொல்லித் தினசரிப் பத்திரிகையைப் பிரித்துப் படிக்க ஆரம்பித்தார்.

கொஞ்ச நேரத்திற்குப் பிறகு "ஜன்னல் வழியாக விழுந்திருந்தாலும் விழுந்திருக்கலாம். அடுத்த ஸ்டேஷனில் சொன்னால் ஒரு வேளை கிடைக்கலாம்" என்று யோசனை சொன்னார்.

அடுத்த ஸ்டேஷன் வந்ததும் ரகுராம அய்யரே போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் எல்லா விஷயங்களையும் சொல்லி, ரயில் பாதையில் தேடுவதற்கு ஏற்பாடு செய்தார். போகும் போது மெதுவாகத் தாம் எடுத்த நோட்டின் நம்பரைப் பார்த்துத் தம்முடைய டைரியில் குறித்து வைத்துக் கொண்டார்.

இரண்டு நாள் கழித்து ஜிப்பாவும் பணப்பையும் இருப்புப் பாதையில் கிடந்து எடுக்கப் பட்டதாகக் கிருஷ்ணய்யருக்குத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் நோட்டுச் சமாசாரம் மட்டும் இல்லை.

"ரயில் காங்கிக் கூலிகள் எமகாதகர்கள். நோட்டை மட்டும் எடுத்துக் கொண்டு, துணியும், பையும் மட்டும் அகப்பட்டதாகக் கொடுத்திருக்கிறார்கள்" என்றார் ஸ்டேஷன் மாஸ்டர்.

"பையில் நோட்டு இருந்தது என்பது எப்படி நிச்சயம்? வண்டியில் ஏறும் போதே இழந்து விட்டிருக்கலாம்" என்றார் சப் இன்ஸ்பெக்டர் சவுரிராஜன்.

இவ்வாறெல்லாம் பேசினார்களேயொழிய வக்கீல் ரகுராமய்யர் பேரில் சந்தேகம் கிளம்பவில்லை. கிருஷ்ணய்யர் மனைவிக்கு மட்டும் கொஞ்சம் சந்தேகம் உண்டு.

"கூட யாரோ வக்கீல், சிறு பையன் இருந்தான் என்கிறீர்களே; அவன்தான் நோட்டை எடுத்துக் கொண்டு சொக்காயை வெளியே போட்டிருக்க வேண்டும். சிலர் பிறப்பிலேயே திருட்டு" என்றாள்.

* * *

ஆறு வருஷங்களுக்குப்பின் ஒரு நாள். ரகுராம அய்யர் இப்போது பிரபல கவர்ன்மெண்டு வக்கீல்.

"சாமி, நீங்கள் வெளுக்கப் போட்ட ஷர்ட்டிலே பணம் வைத்திருந்தீங்களே, இந்தாங்கோ, பார்க்காமல் போட்டு விட்டீங்களே" என்றான் வண்ணான் சின்னசாமி. கசங்கிப்போன பத்து ரூபாய் நோட்டு ஒன்றைக் கொடுத்தான்.

"அடே ஆமாண்டா, நேற்று குளிக்கப் போகச்சே, குப்பாண்டி செட்டியார் படிச் செலவுக்கென்று கொடுத்தார். அவசரமாக ஷர்ட்டு ஜோபியில் வைத்துக் கொண்டு ஸ்நானம் செய்யப் போனேன். வெந்நீர் அறையில் அழுக்கை அவிழ்த்து வைத்து விட்டு வந்தேன். கோர்ட்டுக்குப் போகும் அவசரம். பிறகு மறந்தே போனேன். நீ யோக்கியமான பையன், சின்னசாமி! வேறே யாரா யிருந்தாலும் ரூபாயைக் கொடுத்திருக்க மாட்டார்கள்" என்றார் ரகுராமய்யர்.

"பாடுபட்டுச் சம்பாதிக்கலாம். இன்னொருவர் சொத்து நமக்கு என்னத்துக்குங்க, சாமி! திருட்டுச் சொத்து நிக்குமா?" என்றான் சின்னசாமி.

அன்றிரவு பார்த்தசாரதி கோயிலுக்கு வழக்கம்போல் தம் தாயாரைச் சுவாமி தரிசனத்துக்கு அழைத்துக் கொண்டு போனார். அன்று விசேஷ நாள். கோயிலில் பெருங் கூட்டம். ரகுராமய்யரும் மற்றவர்களுடன் தரையில் விழுந்து நமஸ்காரம் செய்தார். கும்பிட்ட மற்றவர்கள் எழுந்து நின்றபோது, ரகுராம அய்யர் மட்டும் நீட்டிக் கிடந்தவர் அப்படியே பகவானைத் தியானம் செய்து கொண்டு ஒரு நிமிஷம் கிடந்தார். இதைக் கண்டு அவர் தாயார் கிழவிக்கு வெகு திருப்தியாயிற்று. தன் தாடையைப் பல தடவை தட்டிக்கொண்டு மகிழ்ச்சி யடைந்தாள். தான் பெற்ற மகனைக் குருவாகவே எண்ணிச் சந்தோஷப்பட்டாள்.

* * *

கவர்ன்மெண்டு வக்கீல் ரகுராம அய்யர் ஒவ்வொரு மார்கழியும் திருவெம்பாவை விழா பிரமாதமாக நடத்தி வைக்கிறார். பள்ளிக்கூடக் குழந்தைகளுக் கெல்லாம் பட்டாசு, மிட்டாய் வாங்கி விநியோகம் செய்கிறார். ஸ்ரீ ராம நவமியும் வெகு விமரிசையாக நடத்துகிறார். பாசாங்கு அல்ல, உண்மையில் பக்தி நிறைந்தவராக மாறிவிட்டார். மனிதனுடைய உள்ளம் ஒரு விசித்திரம். அது வளர்வதும் மாறுவதும் ஆண்டவனின் விளையாட்டு. அடுப்புக்கரியும் பள பள வென்று மின்னும் வைரக் கல்லும் ஒரே பொருள் என்று ரசாயன பண்டிதர்கள் சொல்லுகிறார்கள். ஒரே பொருள், அதன் அணு அமைப்பு கொஞ்சம் மாறிவிட்டால் வேறு பொருளாகி விடுகிறது. பொருளே மாறும் பொழுது ஒரு மனிதனுடைய குணங்கள் மாறுவதில் என்ன வியப்பு? அந்தனின் அருள் இருப்பின் எதும் முடியும்.

"செம்மை நலமறியாத
சிதடரொடுந் திரிவேனை,
மும்மையமல மறுவித்து
முதலாய முதல்வன்தான்,
நம்மையுமோர் பொருளாக்கி
நாய்ச்சிவிகை ஏற்றுவித்தான்,
அம்ம! னெக்கருளியவாறு
யார்பெறுவா ரச்சோவே!"


என்று ரகுராம அய்யர் காலையில் படுக்கையில் எழுந்து உட்கார்ந்து பாடுவது வழக்கம். பாடும் பொழுது கண்களிலிருந்து வடியும் நீரைத் துடைத்துக் கொண்டு கட்டிலிலிருந்து இறங்குவார்.

தமிழ் நாடெங்கும் வெளியீடு!




ஆர். ஆர். பிக்சர்ஸ்

21, கோட்ஸ் ரோடு, மதராஸ் - 17



# அதிர்ஷ்டக் குழந்தை

விஜயம்

## 12. வேல் பாய்ந்தது !

அன்று காலையில் துயில் நீங்கி எழுந்த ராஜாவுக்கு ஒரே அதிசயமா யிருந்தது. அவன் சிறைப் பட்டிருந்த கல் கோட்டை வாயிலுக்கு வெளியே குதிரைகளும், சேனை வீரர்களும் நடக்கும் சத்தமும், தாரை, சங்கு முதலிய யுத்த வாத்திய முழக்கங்களும் கேட்டன.

அடுத்த நிமிஷம் கோட்டைக் கதவுகள் திறந்து கொண்டன. அரண்மனையைச் சேர்ந்த சேவகன், ராஜாவை வணங்கி, “மகாராஜா உங்களை உடனே அரண்மனைக்கு அழைத்து வரச் சொன்னார்!” என்று சொன்னான். ராஜா மிகவும் சந்தோஷத்துடன், வெளியே வந்து தயாரா யிருந்த குதிரையின் மீது தாவி ஏறினான்.

அரண்மனையில் சபா மண்டபத்தில் அரசன் வீரவர்மன் மந்திரி, சேனாபதி, மற்றும் பிரமுகர்கள் புடை சூழத் தீவிரமாக யுத்தத்தைப் பற்றி ஆலோசித்துக் கொண்டிருந்தான். அந்தச் சமயம் ராஜா அங்கே போய்ச் சேர்ந்தான். அரசன் அவனை அன்போடு வரவேற்று ஆசனத்தில் அமரச் சொன்னான்.

பிறகு, “உன் உண்மைப் பெயர் தேவசேனாபதி. அந்தப் பெயரைத் தாங்குவதற்கு உனக்கு ஒரு சோதனை ஏற்படுத்தி யிருக்கிறேன். கிழக்கே கடல் கடந்த தீவுகளிலிருந்து சில அரசர்கள் ஒன்றாகச் சேர்ந்து நம் நாட்டின் மீது பெரும் சைன்யத்தைத் திரட்டிக் கொண்டு, போர் செய்ய வந்திருக்கிறார்கள். நமக்குச் செய்தி வந்திருக்கிறது. அதற்கு நமது பதில் நாம் போருக்குத் தயார் என்பதுதான். இந்தச் செய்தி அவர்களுக்கு அனுப்பப்பட்டு விட்டது. நீ போர்க் களம் சென்று அவர்களோடு சண்டை யிட்டு, அவர்களுக்குப் புத்தி புகட்ட வேண்டும். உனக்குத் துணையாக ஆயிரம் ஆயிரம் வீரர்களையும் குதிரைகளையும் அனுப்பி வைக்கிறேன். யுத்தத்தில் நீ தோல்வி யடைந்தால் என் முகத்தில் விழிக்கக் கூடாது. நீ வெற்றி வீரனாக வந்தால் நானே நேரில் வந்து ராஜோபசாரங்களுடன் தலை நகர எல்லையில் உன்னை எதிர் கொண்டு அழைத்துக் கௌரவிப்பேன்!” என்று வீரவர்மன் சொன்னான்.

ராஜா கம்பீரமாக நிமிர்ந்து நின்று, “இத்தகைய அரிய சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்ததற்காக மகாராஜாவுக்கு என் நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்கிறேன். மகாராஜா கொடுக்கும் பெரிய பொறுப்பை வகித்து நிர்வகிக்க முடியும் என்னும் பரிபூர்ண நம்பிக்கை எனக்கு இருக்கிறது!” என்று மிகவும் உற்சாகத்தோடு சொன்னான்.



வீரவர்மன், மிகவும் சந்தோஷத்துடன் ராஜாவைப் பார்த்து, "தேவ சேனாபதி, இன்றைய தினத்திலிருந்து இந்த ராஜ்யத்தின் சேனாபதி நீதான். இது மிகவும் பெரிய பொறுப்பு. இதை மிகவும் ஜாக்கிரதையாக வகிப்பாய் என்று நம்புகிறேன்!" என்று கூறி, அவன் தலையில் அரசாங்கத்துச் சேனாபதிக்கு உரிய ரத்தின மயமான திரு முடியைப் புனைந்தான். அச் சமயம் அரண்மனை வாத்தியங்கள் ஏக காலத்தில் முழங்கின. சபா மண்டபத்தில் இருந்த மந்திரி முதலிய பிரமுகர்கள் கரகோஷம் செய்து தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

மறு நாள் காலையில் சங்கு, கொம்பு, தாரை முதலிய போர் முழக்க வாத்தியங்களுடன் ஆயிரம் ஆயிரம் குதிரை வீரர்கள் முன்னால் செல்ல, கம்பீரமாக ஒரு வெள்ளைக் குதிரையின் மேல் அமர்ந்து ராஜா ராணுவ மரியாதைகளுடன் சென்றான். அரண்மனை மேல் மாடத்தின் முகப்பில் நின்று கொண்டு கௌசல்யா ஆனந்தம் பொங்க ராஜாவையே பார்த்துக் கொண்டிருந்தாள்; ஒரு விநாடி அவர்கள் இருவர் கண்களும் சந்தித்தன. மறு விநாடி ராஜாவின் குதிரை பறந்தது. புழுதிப் படலம் வானளாவ எழுந்து மறைந்தது.

இடையில் தங்கித் தங்கி ஒரு வாரம் பிரயாணம் செய்தது ராஜாவின் சேனை. பகையரசர்கள் தங்கி யிருக்கும் கூடாரங்கள் தூரத்தில் தெரிந்தன. ராஜா தன் சேனை வீரர்களை அங்கேயே கூடாரம் அமைக்கும் படி கட்டளையிட்டான். குதிரைகளுக்கும் சேனை வீரர்களுக்கும் வசதியான கூடாரங்கள் அமைக்கப் பட்டன. சேனைத் தலைவனான ராஜாவுக்குப் பிரத்தியேகமான கூடாரம், இரண்டு மூன்று அறைகளுடன் பெரியதாக அமைக்கப் பட்டது. அன்று சூரியன் அஸ்தமிக்கும் வரையில் சேனை வீரர்களுக்கும் மற்றுமுள்ள வேலைக்காரர்களுக்கும் கூடாரம் அமைப்பதற்கே சரியாயிருந்தது. குதிரைகளுக்கும் சேனை வீரர்களுக்கும் வேண்டிய உணவுப் பொருள்கள் வண்டி வண்டியாக வந்திருந்தன.

மறு நாள் சூரியன் உதயமானதும் ராஜா அவசரமாக ஓலையில் ஒரு செய்தியை எழுதி எதிரியின் முகாமுக்கு ஒரு குதிரை வீரன் மூலம் அனுப்பி வைத்தான்.

சிறிது நேரத்துக் கெல்லாம் அவன் திரும்பி வந்து ராஜாவிடம் இன்னொரு ஓலையைக் கொடுத்தான்.

அதை வாங்கிப் பார்த்த ராஜா, தன் சேனை வீரர்களை அழைத்து, "பகைவர்கள் சண்டைக்குத் தயார் என்று செய்தி அனுப்பி விட்டார்கள். நாளைய தினம் யுத்தம் ஆரம்பம் ஆகிறது. தயாராயிருங்கள்!" என்று கட்டளை யிட்டான். அவ்வளவுதான். சங்கு, முதலிய போர் வாத்தியங்கள் இடை விடாது ஒலித்தன. யுத்த பேரிகை பயங்கர மாக முழங்கியது.

மறு நாள் சண்டை ஆரம்பித்ததும் மிகவும் பயங்கரமாக இருந்தது. வெற்றி, தோல்வி யாருக்கு என்று சொல்ல முடியவில்லை. அந்தப் பிரதேசம் முழுவதும் ஒரே சேனா சமுத்திரமாகக் காட்சி யளித்தது. வாள்களும் வாள்களும் மோதின; வேல்களும் வேல்களும் உராய்ந்தன; குதிரைகள் இடை விடாது கனைத்தன. இரண்டு பக்கத்துச் சேனை வீரர்களிலும் எண்ணிறந்த பேர்கள் இறந்தனர். ராஜா அஞ்சா நெஞ்சத்துடன் போர் புரிந்தான்.

சண்டை பதினைந்து நாட்கள் நடந்தது. ராஜாவின் போர்த் திறமையைக் கண்டு பகைவர்கள் அதிசயம் அடைந்தார்கள்.

பதினைந்தாம் நாள் சண்டை மிகவும் பயங்கரமா யிருந்தது. ஆவேசம் வந்தவன் மாதிரி அன்று ராஜா போர் புரிந்தான். அன்னிய அரசர்கள் யாவரும் சிறைப் படுத்தப் பட்டனர். அன்னியரின் சேனை வீரர்களில் பலர் யுத்தக் கைதிகளாகக் கைது செய்யப்பட்டனர். ராஜாவின் சேனை வீரர்கள் வெற்றிச் சங்கம் முழங்கினார்கள். சண்டை முடிந்து விட்டதற்கு அறிகுறியாக, ராஜாவின் ,சேனை வீரர்கள் கலையத் தொடங்கினர். அந்தச் சமயம் வேகமாக ஒரு வேல் வந்து ராஜாவின் மார்பில் பாய்ந்தது. மறு விநாடி எதிரிகள் எங்கிருந்தோ வந்து சூழ்ந்து கொண்டனர்.

இதெல்லாம் கண் மூடிக் கண் திறக்கும் நேரத்தில் நடந்து விட்டது. அடுத்த கணம், ஓர் இளம் வீரன் சரேலெனப் பாய்ந்து வந்து ராஜாவைத் தாங்கிக் கொண்டான். உடனே அவன் மார்பில் பாய்ந்திருந்த வேலைப் பிடுங்கி யெறிந்து, சேனை வீரர்களிடம் ஒப்புவித்து அவனைப் பாசறைக்கு அழைத்துச் சென்று சிகிச்சை செய்ய ஏற்பாடு செய்தான். (தொடரும்)




கவியரசர் டாகூர் காந்தி மகாத்மாவின் பெருமையையும் அவர் இந்தியாவுக்கு ஆற்றி யிருக்கும் அருந்தொண்டையும்

**மகாத்மா காந்தி**

என்ற நூலில் அழகாக விளக்கி யிருக்கிறார்

விலை அணா எட்டு
( தபால் செலவு தனி )

சசிதேவி எழுதிய

**விஜயா**

முதலிய கதைகள்

விலை ரூ. 2-8-0
( தபால் செலவு தனி )

●

இடைக்குமிடம்

**கல்கி காரியாலயம்**

கீழ்ப்பாக்கம் :: சென்னை

சேஷாத்திரிபுரம்
எஜுகேஷனல் அஸோஸியேஷன்

**பில்டிங் பண்ட் ராபில்**

லாட்டரி பிரைஸ் ரூ. **1,25,000**
(லக்ஷத்தி இருபத்தையாயிரம்)

மைசூர் கவர்மெண்டாரால் அங்கீகாரம் பெற்ற
பெங்களூர் எஜுகேஷன்

**பில்டிங் பண்ட் ராபில்**

ஸீரீஸ் நெ. 2 of 11-8-52

முதல் பிரைஸ் ரூ. 5,000
முதல் 7836 பிரைஸ்களுக்கு ரூ. 1,25,000
முடிவு தேதி 12-7-53

டிக்கட் 1க்கு தபால் செலவும் சேர்த்து ரூ. 1-2-0 வீதம் M.O. செய்தால், டிக்கட் அனுப்பி வைக்கப்படும். டிபாஸிட் கட்டக் கூடிய ஏஜண்டுகளும் தேவை. குறிப்பு: ரூ. 5,00,000 லிமிட் செய்திருப்பதால் இதற்குமேல் வருவனவைகளை வாபஸ் செய்ய நேரிடும்.

விபரங்களுக்கு:

**“மிட்லாண்ட்ஸ்”**

58, ஓல்டு கசாய் ரோடு, பெங்களூர்-2





# WIN OVER Rs.2,000 IN PRIZES

## PEARLINE FRENCH *LAVENDER* *BRILLIANTINE*

## SLOGAN CONTEST

Send us a good slogan for Pearline French Lavender Brilliantine of not more than 12 words with our printed cellophane seal fixed inside each of our Brilliantine jars with gold caps. For example, you can say "Pearline French Lavender Brilliantine- Best in France - Best everywhere" You may send us as many slogans as you like but EACH SLOGAN MUST BE ACCOMPANIED WITH ONE PEARLINE LAVENDER BRILLIANTINE CELLOPHANE SEAL. It is available in your favourite shop.


The last date of entry to this contest is 30th April 1953. Listen to our "DOUBLE or QUITS" programme on Radio Ceylon every Saturday at 8-30 p. m

C.BR.1

**PEARLINE-PARIS LTD P O Box 493 Bombay.**

# சேகர்—என் குழந்தை

எஸ்.வி.எஸ்.



என்று கருதி வந்தாள். அதற்கு மேல் அவனுடன் விளையாடக் கூடிய மனப்பான்மை கிடையாது. அக்கம் பக்கத்திலும், குழந்தைகள் கிடையாது. இருந்தால்தான் என்ன? 'எவனோ ஒரு சினிமா டைரக்டர், யாரோ ஒருத்தியை அந்தப் பங்களாவில் வைத்திருக்கிறானாம். அவளுடைய குழந்தையுடன் நம் குழந்தை விளையாடப் போவதாவது!' என்று எண்ணி அக்கம் பக்கத்தவர்கள் தங்கள் குழந்தைகளை அனுப்பாமலிருப்பார்கள். ஆகவே சேகர், தனக்கு உற்ற துணைவர்கள், விளையாட்டுச் சகாக்கள் இல்லாமற் தவித்தான். ஆனால் தினமும் ஏதாகிலும் ஒருவேளை டைரக்டர் சத்திய சங்கர் அந்தப் பங்களாவுக்கு வருவார். அவர் வந்தால், சுகுணாவுடன் பதினைந்து நிமிஷம். அல்லது அரைமணி நேரம் பேசி விட்டு சுமார் இரண்டு அல்லது இரண்டரை மணி நேரம் சேகருடன் விளையாடி, கொஞ்சிக் குலாவி விட்டுத்தான் போவார். அவர்தான், சேகருக்கு விளையாடுவதற்கு என்றும், அந்த வீட்டில் தனியாக இருக்கும் சுகுணாவுக்குத் துணையாக இருக்கட்டும் என்றும், நல்ல ஜாதி நாய்களாக இரண்டு வாங்கிப் போட்டிருந்தார்.

வழக்கம்போல் அன்றும் டைரக்டர் சங்கர் அந்தப் பங்களாவுக்கு வந்தார். காரை விட்டிறங்கியதும், சேகர் அந்த நாய்களில் ஒன்றின் வாலைப் பிடித்து இழுக்கும் காட்சியைப் பார்த்தார். சத்திய சங்கர் பதறிப் போனார். அவர் நெஞ்சில் தாய்ப் பாசமே பெருக்கெடுத்தது. எங்கே நாய் குழந்தையைக் கடித்து விடுமோ என்றே பயந்து போனார். அந்தப் பயத்தில் 'வாலைப் பிடித்து இழுக்காதே, சேகர்!' என்று இரைந்து எச்சரிக்கை செய்தார்.

அவரைப் பார்த்ததும், சேகரின் முகத்தில் இன்பப் புன்னகை தவழ்ந்தது. அந்த முறுவலுடனேயே,

**வாலைக் குழைத்து வரும் நாய்தான்—அது**
**மனிதர்க்குத் தோழனடி பாப்பா**

என்று சங்கர் அவனுக்குச் சொல்லிக் கொடுத்திருந்த பாரதியாரின் பாப்பா பாட்டிலிருந்து மேற்கண்ட வரிகளை மழலை மொழியில் பாடினான். உடனே அவனைச் சங்கர் பாய்ந்து தூக்கிக்கொண்டு, "அட, ராஸ்கல்! சமர்த்துக் குட்டிடா நீ! கெட்டிக்காரன்டா! சரியான போடு போட்டாய்!" என்று கொஞ்சிக் குலாவி முத்தமிட்டுக் கொண்டே வீட்டுக்குள் மெள்ள நுழைந்தார்.

## இரண்டாம் பகுதி

குழந்தை சேகர் அந்த நடுமத்தியான வேளையில் நாய்களுடன் விளையாடிக் கொண்டிருந்தான். சேகருக்கு விளையாட்டுப் பொம்மைகள் விட்டால், நாய்கள்தான் அவனுக்குச் சமமாக விளையாடக்கூடிய உயிர் வர்க்கங்கள். சுகுணாவுக்கு, சேகருடன் விளையாடக்கூடிய அளவுக்குப் பொறுமை கிடையாது. சமையற்காரி அம்மாளுக்குச் சேகரின் தேவைகளை கவனித்துவிட்டால் தன் வேலை தீர்ந்து விட்டது என்று எண்ணினாள். அதாவது சேகருக்குப் பசித்த வேளைகளில் சோறு போடுவதும், பால் சாப்பிடவேண்டிய வேளைகளில் பசும் பாலைக் காய்ச்சிக் கொடுப்பதும், டிபன் வேளையில் டிபன் கொடுப்பதும்தான் தன் வேலை

"இந்த மாதிரி கொஞ்சுவதிலும் குலாவுவதிலும் ஒன்றும் குறைச்சலில்லை. காரியத்தில் மட்டும் பூஜ்யம். வந்து மூன்று மாதம் ஆகிறது. இன்னும் அவனுக்குச் சினிமாவில் சான்ஸ் கொடுக்கிறீர்கள்...'கொடுக்கப் போவதில்லை' என்று சொல்லிவிட்டால் நாளைக்கும் ஊருக்குத் திரும்பிப் போவேன்...சீதையை அசோக வனத்திலே அடைத்து வைத்தாப்பிலே......" என்றாள் சுகுணா கோபமாக.

"என்னை இராவணன் என்று வைய வேண்டும் போல் தோன்றினால் ஏன் சுற்றி வளைத்துச் சொல்லுகிறாய்?...நேர்முகமாகவே திட்டி விடுவதுதானே! ஆனால் சுகுணா நான்தான் சேகருக்குச் சினிமாவில் 'சான்ஸ்' தருகிறேன் என்று சொல்லி யிருக்கிறேனே பின் ஏன் அதற்குள் அவசரப்படுகிறாய்! அவன்தான் நான் எடுக்கப் போகும் குழந்தைப் படத்தில் ஹீரோ!" என்று சொல்லிவிட்டு சேகர் பக்கம் திரும்பி, "என்ன, சேகர்! அப்படித்தானே?" என்றார் டைரக்டர் சத்திய சங்கர்.

"நான் ஹீரோவாக இருக்க மாட்டேன்" என்று கூறினான் சேகர்.

"பின்னே?"

"நீரோவாகத்தான் இருப்பேன்!" என்று சமீபத்தில் வெளியான ஆங்கிலப் படத்தில் வந்த 'நீரோ' என்ற பாத்திரத்தைப்போல் முகத்தில் அசட்டுக் களை தோன்ற நின்று காண்பித்தான். இதைக் கண்டு சங்கரும் சுகுணாவும் விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

இப்படி வெகுநேரம் சுகுணாவுடனும் சேகருடனும் பேசிக்கொண்டிருந்து விட்டு, சங்கர் தம் பங்களாவுக்குச் சென்றார்.

★

நவராத்திரி கொலு வைக்கப் பட்டிருந்தது. மேல் வரிசையின் மத்தியில் புல்லாங்குழல் கிருஷ்ணன் வேணுகானம் செய்து கொண் டிருந்தான். கீழ் வரிசையில் ராமர் பட்டாபிஷேகம் செட், மற்ற வரிசைகளில், ஆதிசேஷ சயனம், வள்ளி தெய்வயானை சமேதரான சுப்பிரமண்ய ஸ்வாமி, ராதா கிருஷ்ணன், செட்டியார் பொம்மை, பாண்டு வாத்திய கோஷ்டி, ரத உற்சவம் — இப்படி எத்தனையோ விதவிதமான பொம்மைகள் வெகு அழகாக வைக்கப் பட்டிருந்தன. இவை யெல்லாம் கடையில் அல்லது தெருவில் விலை கொடுத்து வாங்கிய பொம்மைகள். இந்தக் கொலுவுடன் கலைத் திறமை மிக்க மற்றோர் அம்சம் இருந்தது. குற்றால மலை போல் முன்னில் செய்து, அருவி விழுவது போல் தண்ணீர் விழச் செய்து, மக்கள் ஸ்நானம் செய்வதுபோல் சிறு சிறு பொம்மைகள் செய்து வைக்கப் பட்டிருந்தன. அசல் திருக்குற்றாலத்தைக் காண்பது போலவே இருந்தது. அதைப் பார்க்கப் பார்க்க அலுப்புத் தட்டாமலிருந்தது. அதைப் பார்த்த வண்ணம், அந்த வீட்டுக்கார அம்மாமியிடம், "மாமி! இது யார் பண்ணினது?" என்று கேட்டான் மஞ்சள் குங்குமத்துக்கு வந்திருந்த அந்தச் சிறுமி சுகுணா.

"என் பிள்ளையாண்டான்தான் செய்தான்" என்றாள் பெருமிதத்தோடு அந்த மாமி.

"ரொம்ப நன்றாகச் செய்திருக்கிறார், மாமி! ரொம்ப நன்றாகச் செய்திருக்கிறார்!" என்றாள்.

இதை உள்ளே யிருந்து கேட்டுக் கொண்டிருந்த அந்த மாமியின் புதல்வன் சங்கரன் மெய்புளகித்தான். எத்தனை பெண்கள் வந்து, அபஸ்வரத்தில் பாடிவிட்டு, 'என்ன சுண்டல் பண்ணி யிருக்கிறீர்கள்' என்று பார்த்து விட்டுப் போகவில்லை. ஆனால் இந்தப் பெண் எவ்வளவு ரஸிகத் தன்மை பெற்றவளாக இருக்கிறாள்! தன் பாராட்டுதலை வாய்விட்டுச் சொல்லி விட்டு வேறு போகிறாள்! நல்ல ரஸிகை! நல்ல ரஸிகை!! என்று வியந்தான். அத்துட னில்லாமல் இவ்வளவு கலையை அனுபவிக்கும் அந்த அற்புத ஆரணங்கு யார் என்று பார்க்க அறையின் இரேழிக் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தான். கூடத்தில் தாம்பூலத்தைப் பெற்றுக் கொண்டு, இரேழி வழியாக வெளியேற வந்த சுகுணாவின் கண்கள் தலைகுனிந்தவாறே சங்கரனுடைய கண்களைச் சந்தித்தன. அந்தச் சந்திப்பில் இருவருக்கும் ஒரு இனம் தெரியாத இன்ப உணர்ச்சி உச்சந் தலையிலிருந்து உள்ளங் கால்கள் வரை பரவியது!

மேற்கண்ட இந்த பால்ய பருவச் சம்பவத்தை நினைவுறுத்தி, "சுகுணா! இது உனக்கு ஞாபக மிருக்கிறதா? அன்றைய தினம் நான் ஒரு நிர்மானம் செய்து கொண்டேன். என் வாழ்க்கையில் எவளையாவது மணக்க வேண்டிய சந்தர்ப்பம் வாய்த்தால், உன்னைத்தான் மணப்பது. நீ என்னை நிராகரித்து விட்டால் யாரையுமே கல்யாணம் செய்து கொள்வதில்லை; வாழ்க்கை முழுதும் கட்டைப் பிரம்மச்சாரியாகவே, நைஷ்டிக பிரம்மச்சாரியாகவே இருந்து விடுவது என்று தான் நிர்மானித்தேன்.

"ஆனால், சுகுணா! நீ என்னை நிராகரிக்க வில்லை; நான்தான் உன்னை நிராகரிக்கும்படியாக ஆகிவிட்டது! சாதாரண ஏழைக் குடும்பத்தில் பிறந்து, தந்தையை இழந்து, தாயுடன் வாழும் உன்னை நான் மணக்க என் பெற்றோர்கள் சம்மதிக்கவில்லை. பணக்கார குடும்பத்தில் பிறந்து, படித்துப் பட்டம் பெற்றவனாக வளர்ந்ததற்கு—அந்தப் பாபத்திற்கு—பிராயச்சித்தமாக இன்னும் கடுமையான நைஷ்டிக பிரம்மச்சர்ய விரதத்தை அனுஷ்டித்து வருகிறேன். என் கல்யாணப் பேச்சு வந்தபோது, நான் உன்னைத் தான் மணப்பேன் என்றேன். 'பைத்தியமே! அவளுக்கென்ன குலமிருக்கிறதா? கோத்திரமிருக்கிறதா? சொத்து இருக்கிறதா? சுதந்திரமிருக்கிறதா? நாங்கள் உனக்கு, இளியாட்டமா ஒரு பெண்ணை, சீர்சினத்தியோடு, நகை நட்டோடு, கைநிறைய வரதட்சிணையோடு அழைத்து வந்து கல்யாணம் செய்து வைக்

கிறோம்' என்றார்கள். 'எனக்கு வேண்டாம்' என்று ஒரே வார்த்தையில் சொல்லிவிட்டுச் சென்னைக்கு வந்தேன். வேலை கிடைக்கவில்லை. சினிமாவில் சேர்ந்து நடிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. இப்படி இரண்டாண்டுகள் சென்றன. திடீர் என்று 'அம்மா காலமானாள்' என்று தந்தி வந்தது. ஊருக்குச் சென்றேன். ஒரே மாதத்தில் அப்பாவும் அம்மாவைப் பின்பற்றிச் சென்றார். உன்னைப் பற்றி விசாரித்தேன். 'அவளுக்குக் கல்யாணமாகி எங்கேயோ போய்விட்டாள்' என்றார்கள். சிலர் 'அவள் அக்காகாரியுடன் இருக்கிறாள்' என்றார்கள். மொத்தத்தில் உன்னைப் பற்றி ஒரு தகவலும் சரியாகக் கிடைக்கவில்லை. சரி, இனி இந்த ஊருக்கும் நமக்கும் என்ன தொந்தம் வேண்டிக் கிடக்கிறது என்று சில புலங்களையும் வீட்டையும் விற்று விட்டுச் சென்னைக்கு வந்து சேர்ந்தேன். சென்னையில் ஒரு செல்வவந்தரான நண்பருடன் சேர்ந்து இந்த ஸ்டுடியோவை நிறுவினேன். ஏழு எட்டு ஆண்டுகளாகத் தொடர்ந்து விடா முயற்சியுடன் வேலை செய்ததில் நல்ல லாபம் கிடைத்தது. பின்னர் என்னுடைய கூட்டாளி போட்ட முதலை வட்டியுடன் திருப்பிக் கொடுத்து விட்டேன். இப்பொழுது ஸ்டுடியோ முழுதும் என்னுடைமை. இருப்பினும், சுகுணா, என் வாழ்க்கையில், என் சொந்த வாழ்க்கையில் மகிழ்ச்சியில்லை" என்றார் டைரக்டர் சத்தியசங்கர்.

இதைக் கேட்டபோது சுகுணாவின் இதழ்கள் துடித்தன; நெஞ்சு படபடத்தது. 'ஏன் அப்படிச் சொல்லுகிறீர்கள்? உங்கள் வாழ்க்கைக்குப் புதுமலர்ச்சி யளிக்க இதோ நான் இருக்கிறேன்! என்னை ஏற்றுக் கொள்ளுங்கள்! என்னை ஏற்றுக் கொள்ளுங்கள்!' என்று கூறத் துடித்தாள். ஆனால் ஏதோ ஒன்று நெஞ்சை யழுத்தியது; தொண்டையை அடைத்தது. அவள் வாயிலிருந்து அந்த வார்த்தைகள் வெளிவரவில்லை. கண்களிலிருந்து கண்ணீர் பொலபொல வென்று விழுந்தன.

"சுகுணா! விதி நம்மை அப்படிச் சோதனை செய்யும்போது நாம் என்ன செய்ய முடியும்? விதியின் கைப் பாவைகள் நாம்! இதற்கு வருத்தப்பட்டு என்ன பயன்?" என்று கூறிச் சுகுணாவைத் தேற்றினார்.

இந்தச் சம்பாஷணைகளெல்லாம் முதல் நாள்—சுகுணாவைச் சத்தியசங்கர் சந்தித்த அன்று—கூறியவை. அதற்குப் பிறகு மாதங்கள் மூன்று ஓடிவிட்டன! ஆயினும் இவை அடிக்கடி அவளுக்கு நினைவுக்கு வரும். அப்படித்தான் அன்றிரவும் சுகுணா நினைத்துப் பார்த்தாள். அவளுக்குத் தூக்கமே பிடிக்கவில்லை. 'நமது நாக்கில் சனியிருந்து எப்படி நம்மை ஆட்டி வைக்கிறது! உண்மையைச் சொல்ல விடாமல் நம்மை வதைக்கிறது' என்று பெருமூச்சு விட்டாள். பிறகு அவளை அறியாமல் தூங்கிப் போனாள்.

★

சேகரும், சத்தியசங்கரும் எங்கோ போய்விட்டு வீட்டுக்குள் நுழைந்தார்கள்.

சங்கர், ஒரே உற்சாகமாக இருந்தார். சுகுணாவைப் பார்த்தவுடனே, "சுகுணா, சேகர் சாதாரண குழந்தையல்ல! அவன் ஒரு கவி! அவன் கற்பனைதான் என்ன என்கிறாய்? அடாடா!" என்று வியந்து பாராட்டினார்.

"இப்படி ஒரே அடியாய் வியக்கும் அளவிற்கு அப்படியென்ன செய்து விட்டான்! அறுசீர் கழி நெடிலடி ஆசிரிய விருத்தத்தில் செய்யுள் கட்டி விட்டானா, என்ன?" என்றாள் சுகுணா சிரித்துக் கொண்டே.

"செய்யுள் கட்டுபவன் வேறு, கவிஞன் வேறு சுகுணா! உனக்குச் செய்யுள் கட்டத் தெரியாமல் இருக்கலாம், ஆனால் கவியுள்ளம் பெற்றிருக்கலாம். அந்த மாதிரிதான், இன்று நம் சேகரும், கவியுள்ளம் பெற்றவன் என்பதை நிரூபித்து விட்டான்."

"அப்படியா?" என்றாள் சுகுணா.

"இன்று நாங்கள் ஒரு தோப்பில் உலாவிக் கொண்டிருந்த போது அங்கே ஒரு குட்டையில் நீர் நிச்சலனமாய் நின்றிருந்தது. அதைப் பார்த்த சேகர், 'மாமா, மாமா! இந்தக் குட்டையைச் சிரிக்கச் சொல்லட்டுமா' என்றான். என்ன சொல்லுகிறான் என்றே எனக்குப் புரியவில்லை. 'குட்டையையாவது சிரிக்கச் சொல்வதாவது' என்றுதான் நினைத்தேன். ஆயினும் 'எங்கே சிரிக்கச் சொல், பார்க்கலாம்' என்றேன்.


"உடனே கையில் ஒரு சிறு கல்லை எடுத்துக் கொண்டான். குட்டையில் போட்டான். சலனமின்றியிருந்த குட்டையில் வட்ட வட்டமான சுழல்கள் ஏற்பட்டன.

"'பார்த்தீர்களா! குட்டை சிரிக்கிறது!' என்று துள்ளிக் குதித்துக் கூறினான்."

"'அப்பா, நீ கவியாக வேண்டியவனடா' என்று சொல்லி அப்படியே அவனைக் கட்டி அணைத்துக் கொண்டேன்" என்றார் டைரக்டர் சத்தியசங்கர். (தொடரும்)

## "கல்கி" தமிழிசை மலர்

தமிழிசைச் சங்கத்தின் புதிய கட்டிடமாகிய அண்ணாமலை மன்றத் திறப்பு விழாவுடன் நடைபெறும் தமிழிசை விழாவை முன்னிட்டு அடுத்த வாரக் 'கல்கி' இதழ் தமிழிசை மலராக வெளியாகும் என்பதை நேயர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.




**ரா. கி.**

சேனாதிபதி மகமத்கான் வீராவேசத்துடன் தமது உடைவாளை உருவினார் !

உடனே, நூறு பேர் குலுங்கச் சிரித்தார்கள்.

பின்னர், சேனாதிபதி மகமத்கான் தமது முகத்தில் இருந்த சிறிய தாடியை உருவினார் !

உடனே, இருநூறு பேர் கலகல வென்று சிரித்தார்கள்.

பிறகு, வீர சேனாதிபதி மகமத்கான் சிம்மாதனத்தில் வீற்றிருந்த சக்கரவர்த்தியை அணுகி, "இதோ தங்கள் பட்டமகிஷியைத் தூக்கிலே போடுவதற்கு உத்தரவு எழுதிக் கொண்டு வந்திருக்கிறேன். இதில் கையெழுத்துப் போடுங்கள் !" என்றார்.

அப்போது முந்நூறு பேர் சிரித்தார்கள்.

சக்கரவர்த்தி, "ஹா சேனாதிபதி ! என்ன வார்த்தை சொன்னீர் ? கொண்டு வாரும் உத்தரவை ! கையெழுத்துப் போட்டுத் தருகிறேன் !" என்றார்.

அதற்கு நானூறு பேர் சிரித்தார்கள்.

பட்டமகிஷி அச்சமயம் வந்து, "சக்கரவர்த்தி ! தாங்களே உத்தரவில் கையெழுத்திட்ட பிறகு மறு பேச்சு என்ன ? இதோ தூக்குமேடைக்குப் போகிறேன் !" என்றாள்.

சக்கரவர்த்தி "என் இன்னுயிரே ! கையெழுத்து நான் போடவில்லை. போட்டவன் இந்தச் சேனாதிபதி மகமத்கான் !" என்றார்.

அதைக் கேட்டுச் சபையில் வீற்றிருந்த ஆண், பெண், குழந்தைகள் ஆயிரம் பேர் சிரித்தார்கள்.

இவ்விதமாக, மயிலாப்பூர் ரஸிக ரஞ்சனி சபை ஹாலில் அளவில்லாத குதூகலத்துக் கிடையில் மார்ச்சு மாதம் 30ந் தேதி "நூர்ஜஹான்" என்னும் நாடகம் நடந்தேறியது.

நடித்தவர்கள் லேடி சிவஸ்வாமி ஐயர் உயர்தரப் பாடசாலையின் ஆசிரியைகள். சபையிலிருந்து பார்த்தவர்கள் பெரும்பாலும் அப்பள்ளிக்கூடத்தில் படிக்கும் மாணவிகள். ஆசிரியைமார்கள் மீசையும் தாடியும் வைத்துக் கொண்டு, பழைய மொகலாயர் காலத்து முஸ்லிம் உடைகளைத் தரித்துக் கொண்டு, மேடைக்கு வந்து நின்றதைப் பார்த்ததிலேயே மாணவிகளுக்குக் குதூகலம். அவர்களுடைய நடிப்பும் பேச்சும் அளித்த உற்சாகத்தைப் பற்றிச் சொல்ல வேண்டுமா ?

"இங்கிலாந்து தேசத்தின் சரித்திரத்தைச் சரியானபடி தெரிந்து கொள்ள வேண்டுமானால், வெறும் சரித்திர புத்தகங்களைப் படித்தால் போதாது. மகா கவி ஷேக்ஸ்பியர் இயற்றியுள்ள சரித்திர அடிப்படை கொண்ட நாடகங்களைப் படிக்க வேண்டும்" என்று பிரசித்தி பெற்ற ஆங்கிலப் பேராசிரியர் ஒருவர் கூறி யிருக்கிறார்.

ஆசிரியைமார்கள் நடத்திய இந்த "நூர்ஜஹான்" நாடகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தபோது அப் பேராசிரியர் கூற்று எனக்கு நினைவு வந்தது. சிறுவர் சிறுமிகளுக்குச் சரித்திரம் போதிப்பதற்குச் சிறந்த முறை முக்கிய சரித்திர நிகழ்ச்சிகளை நாடகமாக நடித்துக் காட்டுதல்தான் என்று தோன்றியது.

ஜிஹாங்கீரும் நூர்ஜஹானும் இந்தியாவின் சரித்திரத்தில் ஒரு முக்கியமான கட்டத்தில் பிரதானம் பெற்றிருந்தவர்கள். பாபர் ஸ்தாபித்த மொகலாய சாம்ராஜ்யம் அக்பர் காலத்தில் மகோந்நதம் பெற்று ஜிஹாங்கீர் காலத்தில் கீழிறங்கத் தொடங்கியது. இதற்குக் காரணமா யிருந்த அரசியல் சூழ்நிலையையும்

ஜிஹாங்கீர் — நூர்ஜஹான். இவர்களுடைய குணப் பண்புகளையும் மிக நன்ருக விளக்கும் முறையில் மேற்படி நாடகம் நடிக்கப் பட்டது. அத்துடன் நல்ல நாடகத்துக்கு இருக்க வேண்டிய வேஷப் பொருத்தம், காட்சி ஜோடனை, பின்னணிச் சங்கீதம், பிரதான நடிகர்களின் நடிப்புத் திறமை எல்லாம் நன்கு அமைந்திருந்தன.


* * *

ஸர் பி. எஸ். சிவஸ்வாமி ஐயர் என்ற பெரியார் தமது சொத்துக்களை யெல்லாம் இரண்டு கல்வி நிலையங்களுக்கு எழுதி வைத்துவிட்டுப் போனர். அவற்றில் ஒன்று தான் லேடி சிவஸ்வாமி ஐயர் பெண்கள் பள்ளிக்கூடம். இதில் 1500 பெண் குழந்தைகள் கல்வி கற்று வருகிருர்கள். வருஷந்தோறும் எஸ். எஸ். எல். ஸி.யில் 100-க்கு 80 பேருக்குக் குறையாமல் தேறுகிருர்கள். பரீட்சை தேறுவதில் கவனம் செலுத்துவதோடு மட்டுமல்லாமல் குடும்பம் நடத்துவதற்கு வேண்டிய பயிற்சிகள், லளித கலைகள் முதலியவையும் கற்பிக்கப் படுகின்றன. 'குசேல நிதி' என்பதாக ஒன்றை ஏற்படுத்தி ஏழைச் சிறுமிகளுக்கு இலவச உணவு, பால், துணிமணி, புத்தகங்கள் அளிக்கிருர்கள்.

பள்ளிக்கூட மாணவிகளுக்கென்று இலவச மருந்துச் சாலை ஒன்று சமீபத்தில் ஏற்பட்டிருக்கிறது. இந்தப் பள்ளிக்கூடத்தை எவ்வித ஆடம்பரமும் விளம்பரமும் இன்றி அமைதியாகவும் திறமையாகவும் நடத்தி வரும் தலைமை ஆசிரியை ஸ்ரீமதி செல்லம் அவர்கள் சில மாதங்களுக்கு முன்பு தாமே சொந்தத்தில் ரூ. 2000 நன்கொடை வழங்கிச் "சீதாலக்ஷ்மி இலவச மருந்துச் சாலை"யை நிறுவினர். மருந்துச் சாலை டாக்டர் எஸ். திரிபுரசுந்தரி அம்மாள் ("லக்ஷ்மி") அவர்களின் மேற்பார்வையில் நன்கு நடந்து வருகிறது.

தலைமை ஆசிரியை தொடங்கி வைத்த இலவச மருந்துச் சாலைக்கு உதவி செய்யும் பொருட்டுப் பள்ளி ஆசிரியைகள் "நூர்ஜஹான்" என்னும் நாடகத்தை நடத்தினர்கள். நாடகத்தின் மூலம் கிடைத்த பொருளை மருந்துச் சாலைக்கு அளித்தார்கள். டிக்கட் விற்பதற்காகப் பெரும் பிரயத்தனம் ஒன்றும் செய்யவில்லை. வெளியிலே சென்று டிக்கட் விற்கவில்லை. பள்ளி மாணவிகளே பெரிதும் சிரத்தை எடுத்து ஆசிரியை மார்கள் செய்யும் தொண்டில் ஒத்துழைக்க முன் வந்தார்கள். ஆகையினுல்தான் சபையில் மாணவிச் சிறுமிகளின் கூட்டம் அதிகமாயிருந்தது. குதூகலமும் அதிகமா யிருந்தது.

இப்படி, ஒரு தனிப்பட்ட பெரியாரின் நன்கொடையினுல் வளர்ந்து, தலைமை ஆசிரியை, மற்ற ஆசிரியைமார்கள், மாணவிகள் அனைவரும் உற்சாகமாக ஒத்துழைத்து வேலை செய்யும் பாடசாலை மேலும் மேலும் வளர்ந்து முன்னேறும் என்பதைப்பற்றிச் சந்தேகம் என்ன?


புதுமை பெறுங்கள்! முதலில் ஸ்நானம் செய்ததும் சார்மிஸ் டால்கம் பவுடரை உடல் முழுவதும் தூவுங்கள். எத்தகைய புதுமை உணர்ச்சி அது அளிக்கும் தெரியுமா?

மிருதுத்தன்மை பெறுங்கள்! உடலின் கூரையுள்ள இடங்களிலும் பவுடரை நன்ருக தடவிவிடுங்கள். அது பட்டைப்போல படர்ந்து எரிச்சல் வராமல் பாதுகாக்கிறது.



நீடித்த இனிமையுடன் இருங்கள்! சார்மிஸ் டால்கம் பவுடரை தாராளமாக அடிக்கடி உபயோகியுங்கள். அது செலவில்லாமல் பெருவாழ்வு அளிக்கும் சாதனம். அழகிற்கும் காதல் கவர்ச்சிக்கும் இதுவே சிறந்த ரகசியம்.

# சார்மிஸ்
## டால்கம் பவுடர்

பரவசப்படுத்தும் மனோஹரமான நறுமண முள்ளது.

# பார்வைக்கு மகிழ்ச்சி! உள்ளத்துக்கு உவப்பு!


## கோ - ஆப்டெக்ஸ்

### கைத்தறி ஆடைகள்

**அணிவதால் ஏற்படும் குதூகலம் மற்ற எந்த ஆடைகள் அணிவதிலும் ஏற்படுவதில்லை!**

இந்த விஜய வருஷத்தில் கோ-ஆப்டெக்ஸ் கைத்தறி ஆடைகளையே வாங்கி வருஷம் முழுவதும் மிகவும் சந்தோஷமாக இருங்கள்.

*நாடெங்கும் பரவியுள்ள 124 கோ-ஆப்டெக்ஸ் டிப்போக்களில் கிடைக்கும்*




## சென்னை மாகாண கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட்

"ஹாலோவேஸ் கார்டன்", 34, பாந்தியன் ரோடு, எழும்பூர், சென்னை-8

தந்தி: "HANDLOOM" போன்: 8176 & 85839



# வாழவைத்தவர்

கி. ரங்கராஜன்

ஆசை பாசங்களெல்லாம் அறுந்து, நம்பிக்கை வேருடன் பறிக்கப்பட்டு, வாழ்க்கை இனி எப்படிப் போனால் என்ன என்று நினைக்கும் விரக்தி நிலைக்கு அவள் படிப்படியாக வந்து கொண்டிருந்தாள். நான்கு வருஷங்களுக்கு முன் அவள்—ஜானகி—அப்படி நினைத்தாளா? அந்தக் காலங்களிலெல்லாம் அவள் தன்னுடைய அழகிலும், கல்வியிலும், நம்பிக்கையும் இறுமாப்பும் கொண்டிருந்தாள். படித்தவனாய், சொத்து உள்ளவனாய், இளைஞனாய், அழகனாய்த் தனக்கு ஒருவன் கணவனாக வருவான்—நிச்சயம் வருவான்—என்று நினைத்தாள்; நம்பினாள்.

ஆனால் இன்று, விவாகம் என்று ஒன்று தனக்கு ஆனால் போதும் என்ற அளவுக்கு அவள் மனம் பக்குவப்பட்டு விட்டது.

"அப்பா, என்னை யாருக்காவது இளையாளாகக் கொடுத்து விடுங்களேன். நீங்கள் என் பொருட்டுப் படும் துன்பத்தைக் காணச் சகிக்க வில்லையே அப்பா" என்று ஒரு நாள் தன் தகப்பனாரிடம் நேரிடையாகச் சொன்ன போது சேஷாத்ரி ஐயங்காருக்குக் கண்ணில் கர கர வென்று ஜலம் சுரந்து விட்டது. விவாகம் என்ற பேச்சை எடுத்தாலே, வெட்கத்தினால் உள்ளே ஓடும் ஜானகியா இன்று நம் எதிரே வந்து நான் இளையாளாக வாழ்க்கைப்படுகிறேன் என்று சொல்லுகிறாள்? அப்படி அவள் சொல்ல வேண்டுமானால் வாழ்க்கையில் அவளுக்கு எவ்வளவு தூரம் கசப்பு ஏற்பட்டிருக்க வேண்டும்!

அவர் கண்ணும் மனமும் கலங்கின. "சரி, உன் இஷ்டம் அம்மா. நீ இளையாளாகத்தான் வாழ்க்கைப்படுவாய் என்று உன் தலையில் எழுதியிருந்தால் அதை நானா மாற்ற முடியும்?" என்று சொல்லிக்கொண்டே, ஸ்டாண்டில் மாட்டியிருந்த சட்டையைப் போட்டுக் கொண்டு வெளியில் புறப்பட்டு விட்டார்.

சேஷாத்ரி ஐயங்கார், சர்க்காரில் காட்டு இலாகாவில் பல வருஷங்கள் வேலை பார்த்து ஓய்வு பெற்றுச் சீர்காழியிலே நிரந்தரமாகக் குடியிருக்க வந்தவர். ஜானகி அவருடைய மூன்றாவது பெண். அவள்தான் கடைசி. செல்லமாக வளர்ந்தவள். ஆரம்பத்தில் அவள் தகப்பனார் அவளைப்பற்றி எத்தனையோ கனவுகள் கண்டார். எவ்வளவோ கோட்டைகள் கட்டினார். ஆனால் அவள் ஜாதகத்தைத் தூக்கிக் கொண்டு அவர் ஊர் ஊராக அலைந்த போதுதான் அவருடைய கனவும், மனக் கோட்டையும் பயனற்றவை என்பதை உணர்ந்தார்.

முதல் இரண்டு பெண்களுக்கு, அவர்களுக்கு அழகு இல்லாவிட்டாலும், எப்படியோ விவாகம் செய்து விட்டார். அப்போது அவர் பென்ஷன் வாங்கிக் கொள்ளாத சமயம். கையிலே கொஞ்சம் பணமும் வைத்திருந்தார். அந்தப் பணம் அவர்கள் விவாகச் செலவில் அடிபட்டு விட்டது. கடைசிப் பெண்ணைப் பற்றி அப்போது அவர் கவலைப்படவில்லை. எப்படியும் அவள் அழகுக்கு நல்ல வரனாக ஒருவன் வருவான் என்று நினைத்தார்.

பாரதத்தில், மச்சகந்தி என்ற பெண்ணை யாரோ அரசன் ஒருவன், அவள் அழகுக்கு ஆசைப்பட்டு, விவாகம் செய்து கொண்டதாகப் படித்திருந்தார். அந்த ஞாபகத்தில் ஜானகியின் அழகுக்கும், பாட்டுக்குமாக ஒரு பணக்காரப் பையன் வரக்கூடும், வருவான் என்று காத்திருந்தார். அந்த யுகம் பாரத யுகம். இந்த யுகத்தில் பெண்ணுக்கு அழகு மட்டும் போதாது பணம் வேண்டும். பணம் இல்லாவிட்டால் அழகு, படிப்பு, இளமை இன்னும் எது இருந்தபோதிலும் பயனில்லை என்பதை அவர் அப்போது அறிந்து கொள்ளவில்லை.

ஜானகி பன்னிரண்டு வயதிலேயே சந்திரப் பிரபை போன்றிருந்தாள். அவளுக்கு வயது வளர வளர, கூடவே ரூபமும், அழகும் வளர்ந்தன. கன்னங் கறுத்த அவள் நயனங்கள் பதினெட்டுப் பாஷைகள் பேசின. தலையிலே கட்டுக் கூந்தல். பின்னலாக அது அவள் தொடையைத் தாண்டித் தொங்கிக் கொண்டிருக்கும்.

சேஷாத்ரி ஐயங்கார் பார்த்த இடங்களில் பலர், பெண்ணை வந்து பார்க்கு முன்பு, அவளுடைய அந்தஸ்தையும் செல்வத்தையும் பற்றிக் கேட்டார்கள். நாலாயிரம், ஐயாயிரம் என்று வாய் கூசாது வரதட்சிணை கேட்டார்கள்.

ஐயங்காரின் அப்போதைய பொருளாதாரம் நூற்றுக் கணக்கில் தான் இருந்தது.

ஜானகிக்கு வயது பதினாறு, பதினேழு என்று ஏற ஏற, கூடவே அவர் நம்பிக்கையும் குறைந்து கொண்டே வந்தது.

அந்த நிலையில்தான் அன்று ஜானகி "நான் இளையாளாக வாழ்க்கைப் படுகிறேன்" என்று சொன்னது.

ஐயங்கார் பலமுறை யோசித்தார். பல விதமான ஆட்சேப சமாதானங்களை மன அரங்கில் வருவித்துக் கணக்குப் போட்டுப் பார்த்தார்.

கடைசியாக, தம் பெண்ணை இளையாளாகக் கொடுப்பதைத் தவிர வேறு வழியில்லை என்ற முடிவுக்கு வந்து விட்டார். அதற்குரிய முயற்சியையும் மேற் கொண்டார்.

நான்கைந்து மாதங்களுக்குப் பிறகு ஒரு நாள் ஒரு பெரியவர் வந்தார். கிட்டத்தட்ட நாற்பது, நாற்பத்தி ஐந்து வயதிருக்கும். கட்டுத் தளராத உடல். அவர் தோற்றத்திலிருந்து அவர் செல்வச் செழிப்புள்ளவர் என்பது தெரிந்தது. பெண்ணைப் பார்த்தார். முதற் பார்வையிலேயே பெண் அவருக்குப் பிடித்து விட்டது.

தமக்குப் பூர்வீகம் செங்கல்பட்டுப் பக்கம் என்றும், சில சௌகரியத்துக்காகச் சென்னையில் இருப்பதாகவும் சொன்னார். அத்துடன் வரதட்சிணையைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம் என்றும் சொன்னார்.

சேஷாத்ரி ஐயங்காருக்கு அந்த வரன் நல்ல வரனாகப்பட்டது. வயதும் அப்படி ஒன்றும் அதிகமாக இல்லை. சரி பண்ணி விடலாம் என்று நினைத்தார்.

இருவரும் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். பிறகு வந்தவர் புறப்பட்டார்.

"ஊருக்குப் போய் ஒரு தேதியைக் குறிப்பிட்டு எழுதுகிறேன். முடிந்தால் அந்தத் தேதியிலேயே விவாகத்தை முடித்து விடலாம். நீங்களும் என்னைப் பற்றி விசாரித்துக் கொள்ளலாம்" என்றார் அவர்.

வாசல் வரைக்கும், கூடவே போய் அவரை வழியனுப்பிவிட்டு உள்ளே வந்த சேஷாத்ரி ஐயங்கார் தம் மனைவியையும், பெண்ணையும் ஒரு தடவை பார்த்தார். அவர்கள் முகத் தோற்றத்திலிருந்து அவர்களுக்கும் அந்த வரன் பிடித்து விட்டதாகத் தோன்றியது.

"உன் விருப்பம் என்ன அம்மா?" என்று ஜானகியைக் கேட்டார்.

"நான் அப்போதே, தயார்" என்று சொன்னாள் அவள்.

நாலைந்து நாட்கள் சென்றன. ஒருவாரமும் ஆயிற்று. சென்னையிலிருந்து ஒரு தபாலும் வரவில்லை. பதினைந்து நாட்களுக்குப் பிறகு சேஷாத்ரி ஐயங்கார் சென்னைக்குத் தந்தி அடித்தார். அதற்கு வந்த பதில் தந்தியில், தமக்கு அப்பொழுது உடம்பு சற்று அசௌகரியமாக இருப்பதால் விவாகத்தைப் பற்றிப் பிறகு எழுதுவதாகவும் எழுதி யிருந்தது.

அப்புறம் கடிதமே இல்லை.

சேஷாத்ரி ஐயங்காருக்கு முதலில் எழுந்த நம்பிக்கை குன்ற ஆரம்பித்தது.

"சரிதான், வேறு வரன் பார்க்க வேண்டியதுதான்" என்று நினைத்துச் சும்மா இருந்து விட்டார்.

மீண்டும் வரன் தேடு படலத்தில் நாலைந்து மாதங்கள் ஓடி விட்டன.

அன்று புனர்வசு நக்ஷத்திரம். சேஷாத்ரி ஐயங்கார் வால்மீகி ராமாயணத்தில் ஸீதா கல்யாண கட்டத்தை எடுத்து வைத்துக் கொண்டு படித்துக் கொண்டிருந்தார்.

வாசல் ரேழியில் ஆள் அரவம் கேட்டது. திரும்பிப் பார்த்தார். ஒரு யுவனும் அவனை விடச் சற்று வயதான ஒரு ஸ்திரீயும் வருவது தெரிந்தது.

"வாருங்கள், என்ன வேண்டும்?" என்று சொல்லிக் கொண்டே "அம்மா, ஜானகி! யாரோ வந்திருக்கிறான் பார்" என்று தம் மகளைக் கூப்பிட்டார். அந்த யுவனை "வாருங்கள் ஸார்" என்று வரவேற்றார்.

ஜானகியின் தாயாரும், ஜானகியும் வெளியே வந்தனர். ஜானகியின் தாயார், வந்தவளை மரியாதைக்காக, "வாருங்கள் அம்மா, நாம் உள்ளே போவோம்" என்றாள். "இல்லை, இங்கேயே இருப்போம்" என்று சொல்லி விட்டு, "ஏண்டா சொல்லட்டுமா?" என்று தன்னுடன் வந்தவனிடம் கேட்டாள்.

"ஏன் சொல்லேன், அதற்குத்தானே வந்திருக்கிறோம்?" என்றான் அவன்.

"இவன் என் தம்பி, ரங்கமணி. சென்னையில் போஸ்டல் ஆடிட்டில் வேலை. உங்களுக்கு ஒரு பெண் இருப்பதாகக் கேள்விப்பட்டோம். இவனுக்குப் பார்க்க வந்திருக்கிறேன். இவள்தானே அவள்?" என்று சொல்லிக் கொண்டே வந்த அம்மாள் ஜானகியின் முகத்தை ஊடுருவிப் பார்த்தாள்.



ஒருவர் (மருந்துக் கடைக்குள் சென்று):— ஏன் ஸார், விக்கலை நிறுத்துவதற்கு உங்களிடம் ஏதாவது மருந்து இருக்கிறதா?

மருந்துக் கடைக்காரர் (வந்தவர் முதுகில் ஒரு குத்து விட்டு):—இனிமேல் உங்களுக்கு விக்கல் நின்றுவிடும்.

வந்தவர்:—அது வாஸ்தவம்! அதோ வெளியில் காரில் உட்கார்ந்திருக்கும் என் மாமாவுக்கல்லவா விக்கல் எடுக்கிறது!

அந்தப் பெண் அந்த அம்மாளை ஒருதடவை பார்த்து விட்டு, அவள் கூட இருந்த அந்த யுவனைப் பார்த்தாள்.

அவன் அழகும், அவன் எடுப்பான மூக்கும், தங்கபிரேமில் ஒளிரும் இரு கண்களும், பள பள வென்று வாரிவிடப்பட்ட கிராப்புத் தலையும் அவளை ஒரு தரம் மெய்மறக்கச் செய்தன.

அவனும் அவளைப் பார்த்தான். இருவர் கண்களும் சந்தித்தன.

அதைக் கவனித்த சேஷாத்ரி ஐயங்கார் மன நிலைமை எப்படியிருந்திருக்கும் என்று சொல்ல வேண்டியதில்லை. அவருக்கு உடலெல்லாம் குப்பென்று வியர்த்தது. உள்ளே அடிபட்டு நசுங்கிக் கிடந்த அந்த நம்பிக்கை மீண்டும் தழைத்து எழுந்தது. உடலில் ஒரு புதிய சுறு சுறுப்புத் தோன்றியது. முகம் மலர்ந்தது. சிரிப்புக் கலந்த குரலில் "பெண் உங்களுக்குப் பிடித்திருக்கும். ஆனால் வரதட்சிணையாக என்னால் ஒன்றும் கொடுக்க முடியாதே!" என்றார்.

"உங்களை அதையெல்லாம் நாங்கள் கேட்டோமா? பார்த்தசாரதிப் பெருமாள் எங்களுக்கு நிறையக் கொடுத்திருக்கிறார். உங்களிடம் வரதட்சணை வாங்கி நாங்கள் எந்தப் பெண்ணுக்குச் செய்யப் போகிறோம்? எங்களுக்கு வேண்டியது பெண்; வருகிறவள் அழகாக இருக்க வேண்டும். அது ஒன்றுதான் நாங்கள் எதிர் பார்ப்பது."

சேஷாத்ரி ஐயங்காருக்கு ஆச்சரியமாக இருந்தது. "சரி, சந்தோஷம்" என்றார். அதற்குமேல் அவருக்குப் பேச நா எழவில்லை.

மேலே குறித்த சம்பாஷணைகள் நடந்த சில தினங்களுக்குப் பிறகு, ஒரு சுபயோக சுபதினத்தில் சௌ. ஜானகிக்கும், சிரஞ்சீவி ரங்கமணிக்கும், சீர்காழிக்கு அடுத்த அண்ணன் பெருமாள் சந்நிதியில் விவாகம் இனிது நடந்தேறியது.

விவாகமான சில தினங்களுக்குப் பிறகு ரங்கமணி ஜானகியைத் தன்னுடன் சென்னைக்கு அழைத்துப் போய்விட்டான்.


ஜானகிக்குச் சென்னை புதிது. அங்கே அவளுக்கு எல்லாம் புதுமையாகவும் விந்தையாகவும் இருந்தது. புரசைவாக்கத்தில் வெள்ளாளத் தெருவில் ஒரு அழகான வீட்டின் முன்பு அவர்கள் ஏறி வந்த டாக்ஸி நின்றது. உள்ளே இருவரும் சென்றனர்.

"இந்த வீட்டில் இன்னும் யார் குடியிருக்கிறார்கள்? வாடகை எவ்வளவு?" என்று கேட்டாள் ஜானகி.

"யாரும் குடியில்லை. நாம்தான் குடியிருக்கிறோம். அன்றியும் இது வாடகை வீடு அல்ல. உன்னுடைய சொந்த வீடுதான்!" என்றான் ரங்கமணி.

"சொந்த வீடா! ஏ அம்மாடி! எவ்வளவு பெரிய வீடு!" என்று சொன்னாள் ஜானகி, திறந்த வாய் மூடாமல். எத்தனை அலமாரிகள்! எத்தனை பீரோக்கள்.


பிரஸிடெண்ட் வெஜிடேபிள் ஹேர் ஆயில்



பிரபல ஸினிமா நக்ஷத்திர நடிகை ஸ்ரீமதி டி. ஆர். ராஜகுமாரி கூறுவது: "நான் பிரஸிடெண்ட் வெஜிடபிள் ஹேர் ஆயில் உபயோகித்ததில் அது கேசத்திற்கு சிறந்த கூந்தல் தைலம் என்பதை அறியலானேன். இது கேச வளர்ச்சியை அபாரமாக அளிப்பது மட்டுமின்றி தேகத்திற்குக் குளிர்ச்சியையும் அளிக்கிறது."

தயாரிப்பவர்கள்:

ரத்தோட் டிரேடிங் கம்பெனி

மதராஸ்-1



"ஸ்ரீ மகாலக்ஷ்மி ரக்ஷை"

1 மண்டலம் (48 நாள்) பூஜை செய்தும் ஆயுள் பூராவும் பலன் தரும் வெள்ளி ரக்ஷை

ரூ. 43—12—0

ஸ்ரீ மஹாலக்ஷ்மி ரக்ஷை வேண்டியவர்கள், தங்கள் கோரிக்கைகளை எழுதி ரூ. 5—12—0 மணியார்டர் செய்யவும். டெ. தொகை, வெள்ளி, விளம்பரம், தபால் செலவிற்குமாக தேவை. மீதி ரூ. 38-ம் ரக்ஷை அணிந்த 108 நாளைக்குள் பலன் அடைந்து அனுப்பி வைக்கவும்.

N. B. (1) ஆர்டர் கிடைத்த 9-ம் நாள் ரக்ஷை பிரஸாதத்துடன் அனுப்பப்படும். (2) வெளி நாட்டு நேயர்கள் இரட்டிப்புத் தொகை பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர் மூலம் அனுப்பவும். (3) V. P. P. கிடையாது. (4) அநர்மர்களும் நாஸ்திகர்களும் தடுக்கப்படுகிறார்கள்.

★

கோட்டமருதூர்,

ஸ்ரீ மஹாலக்ஷ்மி ஜியோதிஷ ஆபீஸ்,

அரகண்டநல்லூர் P.O. (S. A. Dt.)

"இவைகள் யாவும் நம்முடையதா?"

"நம்முடையதுதான். ஏன் உனக்கு என்ன சந்தேகம்?" என்றான் ரங்கமணி.

ஜானகிக்கு நம்பிக்கைப்படவில்லை. சுவரில் அழகு அழகாக மாட்டியிருந்த படங்களை எல்லாம் ஒரு முறை கண்ணோட்டம் விட்டாள். அவற்றில் ஒன்று யாரோ ஒருவருடைய புகைப்படமாக இருந்தது. சற்று கூர்ந்து கவனித்தாள். முகம் பார்த்த முகமாக இருக்கிறதே என்று நினைத்தவளாய்,

"இவரை நான் எங்கேயோ பார்த்திருக்கிறேனே!" என்றாள்.

"பார்த்திருக்கிறாயா? எங்கே?"

"அதுதானே! இப்பொழுது உடனே நினைவுக்கு வரவில்லை. வந்து......வந்து."

"என்ன வந்து? கொஞ்சம் சொல்லுகிறேன் நினைவுக்கு வருகிறதா என்று பார். உன்னை மணம் பேச ஒரு காலத்தில் உங்கள் வீட்டுக்கு ஒருவர் வந்ததாக உனக்கு ஞாபகம் வருகிறதா?"

ஜானகிக்கு மின்சார விசை அடித்தது போல இருந்தது. "ஆமாம், அவரேதான். அவர் இங்கு எப்படி...."

"இவர் என்னுடைய தந்தை. என் தாயார் இறந்து வெகு நாளாகிறது. இளையாள் விவாகம் செய்து கொள்ள வேண்டும் என்ற எண்ணமே இவருக்கு இல்லை. உன்னை மணம் பேச வந்த விவரமெல்லாம் முதலில் எங்களுக்குத் தெரியாது. திடீரென்று ஒருநாள்



பாகவதர்:—நேற்று என் கச்சேரி எப்படி இருந்தது? உங்கள் உண்மையான அபிப்பிராயத்தைச் சொல்லும்.

ரஸிகர்:—திடீர்னு இப்படி வந்து என்னை மிரட்டினால், நான் எப்படிச் சொல்வது. கொஞ்சம் அசோக பாக்கும் வெற்றிலையும் போட்டுக் கொண்டு சந்தோஷமாயிருக்கும்போது கேளும்......

அவருக்கு விஷ ஜுரம் ஒன்று வந்தது. அப்பொழுதுதான் அந்த விவரம் எங்களுக்குத் தெரிந்தது. ஆரம்பத்தில் ஜுரம் சாதாரணமாகத்தான் வந்தது. வரவர அது அதிகமாகிக் கொண்டே போயிற்று. வைத்தியமும் டாக்டரும் மாறினார்கள். ஆனால் நோய் படிமானத்துக்கு வரவில்லை. அந்த ஜுர வேகத்தில், தாம் அநியாயமாக ஒரு பெண்ணின் வாழ்க்கையைக் கெடுப்பதாக இருந்ததாகவும், பகவான் பார்த்து அதை அப்படி ஏற்படாமல் தடுத்து விட்டதாகவும் சொன்னார். மேலே நாங்கள் தூண்டித் துருவிக் கேட்டபோது உன்னை வந்து பார்த்து விட்டுப் போன விஷயம் முழுவதையும் சொன்னார். தாம் ஒருகால் அந்த நோயினின்றும் மீண்டாலும், மீளாவிட்டாலும், ஏழை வீட்டுப் பெண் என்று பாராமல் உன்னையே மணம் செய்து கொள்ள வேண்டும் என்று என்னைக் கேட்டுக் கொண்டார்.

"தமக்கு ஒரு பிள்ளை விவாகம் செய்து கொள்ளும் வயதில் இருக்கத் தாம் புத்தி கெட்டுப் போய் இளையாள் விவாகம் செய்து கொள்ள விரும்பியதற்காக அவர் பெரிதும் வருந்தினார். ஏழை வீட்டுப் பெண்ணாக இருந்தால், அவள் இளையாளாக ஒரு வயோதிகனுக்கு வாழ்க்கைப்பட வேண்டும் என்பது இல்லை. அவளை நான் மனமுவந்து விவாகம் செய்து கொள்ளத்தான் வேண்டும் என்று என்னிடம் சொன்னார்.

"உணர்ச்சி வேகத்தில் இன்னும் உன்னைப் பற்றி என்னென்னவோ சொன்னார்.


"'அப்பா, நான் நீங்கள் விரும்பின அதே பெண்ணை விவாகம் செய்து கொள்ளுகிறேன்' என்று அவருக்கு ஆறுதல் சொன்னேன்.

"அப்புறம் அவருக்குத் தம் ஞாபகம் இல்லை. இரவில் ஏதேதோ பிதற்றினார். அடிக்கடி உன் பெயரைச் சொல்லிச் சொல்லிப் புலம்பினார். நாலைந்து தினங்களுக்குப் பிறகு அவர் இந்த உலக யாத்திரையை முடித்துக் கொண்டார்.

"அவருடைய வார்த்தையை, கட்டளையை நிறைவேற்றும் பொறுப்பை ஏற்றுக் கொண்ட நான் என் தமக்கையுடன் உன்னைப் பார்க்க வந்தேன். புறப்படும்போதே தீர்மானித்துக் கொண்டேன். நீ எப்படியிருந்தாலும், அழகாய் இருந்தாலும், கோரமாய் இருந்தாலும் உன்னையே விவாகம் செய்து கொள்ளுவது என்ற முடிவுடன் வந்தேன்.

"உன்னைப் பார்த்தேன். உன் அபரிமிதமான அழகில் சொக்கிப்போய் விட்டேன். என் தகப்பனார் வார்த்தையைக் காப்பாற்றிய பெருமையோடு, மகா சௌந்தர்யவதியான உன்னை மனைவியாகப் பெறும் பேற்றையும் நான் அடைந்தேன். என்னுடைய அதிர்ஷ்டத்தை என்னவென்று சொல்லுவேன்!" என்று சொல்லி நிறுத்தினான் ரங்கமணி.

ஜானகி மெய் சிலிர்த்து நின்றாள்.




போல் வாயாடி யில்லை என்பதனால்தான்...''

"அப்படி யொன்றுமில்லை! அடுத்த வீட்டுக் காரர் உங்களைப் போல் பிறரிடம் எரிந்து விழுபவர் இல்லை!''

"அது சரி! ஆயிரத்தில் ஒரு குடும்பந்தான் இப்படி மனமொத்த தம்பதிகளுள்ள குடும்பமாயிருக்கும், தெரியுமா?''

"நம்ம விஜயாவுக்கு அடுத்த வீட்டுக்காரர் போல சாது மாப்பிள்ளைதான் பார்க்க வேண்டும். உங்களைப்போல......''

"என்னைப்போல மாப்பிள்ளை வேண்டாம்! ஆனால் தாயைப் போலத்தானே பெண்ணுமிருப்பாள். கணவனைப் பம்பரம் போல் ஆட்டி வைக்க மாட்டாளா?''

அவர்களுடைய விவாதம் எனக்குப் பலத்த சிரிப்பை உண்டாக்கியது. "உண்மையிலேயே உன் வாழ்க்கை கரடு முரடற்ற இன்பப் பாதையில் செல்கிறதா? உன் வாழ்க்கையில் மனஸ்தாபமே நேரவில்லையா?'' என்ற கேள்விகள் முளைத்து எழுந்தன. குடத்திலிட்ட விளக்கைப்போல் மனத்தில் அடங்கியிருந்த துயர சம்பவங்களெல்லாம் பீறிக் கொண்டு வெளி வந்தன.

பின் பக்கத்துத் தாழ்வாரத்தில் உட்கார்ந்தவாறு தலைவாரிப் பின்னிக் கொண்டிருந்தேன். அடுப்பில் காப்பிக்கு வென்னீர் கொதித்துக் கொண்டிருந்தது.

அடுத்த வீட்டில் கமலாவும் அவள் கணவரும் பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் பேச்சில் என் பெயரும் அடிபடவே உன்னிப்பாகக் கேட்டேன். அவர்கள் பேசுவதெல்லாம் தெளிவாக என் காதில் விழுந்தது.

"பார்த்தீர்களா! அடுத்த வீட்டில் குடியிருக்கும் ஜயமும் அவள் கணவரும் ஒரு நாளாவது மனஸ்தாபப் பட்டுக் கொண்டதாகத் தெரியவில்லை. இருபது வருஷங்களாக அவர்கள் எவ்விதத் தகராறுமின்றி அந்நியோன்னியமாக வாழ்க்கை நடத்துகிறார்களே? இது ஆச்சரியந்தான்'' என்றாள் கமலா.

"ஏன்? அவர்கள் நன்றாயிருக்கிறது உனக்குப் பிடிக்கவில்லையா? நம் வீட்டைப் போல் அறுபது நாழிகையும் கூச்சலும், கூப்பாடும், சண்டையும் சச்சரவுமாக இல்லை என்று பொறாமைப் படுகிறாயா?'' என்று கேலியாகக் கேட்டார் அவள் கணவர்.

"நான் ஒன்றும் பொறாமைப் படவில்லை! குடும்பம் என்றால் கணவனும் மனைவியும் சண்டைதான் பிடித்துக் கொள்வார்கள் என்று உலக வழக்காயிருக்கிறதே? அதனால் அவர்கள் குடும்பத்தைப் பார்த்த பிறகு அது தவறு என்று சொல்லுவதற்காகத்தான்......''

"அவர்கள் ஒற்றுமையாயிருப்பதற்குக் காரணம் அவருடைய சம்சாரம் உன்னைப்

* * *

இருபது வருஷங்களுக்கு முன். எனக்குக் கல்யாணமாகி ஆறு மாதமாகியிருந்தது. என் கணவர் என்னைத் தனிக் குடித்தனம் வைப்பதற்கு அழைத்துப் போக வந்திருந்தார். புது மாப்பிள்ளை மாமனார் வீட்டுக்கு வந்தால் விருந்தும் உபசாரமும் தடபுடல் படுவதற்குக் கேட்க வேண்டுமா? எங்கள் வீட்டில் எல்லோரும் போட்டியிட்டு அவருக்கு உபசரித்தனர்.

அன்று மாலை என் கணவர் ஊரைப் பார்த்து வரப் புறப்பட்டார். என்னோடுதான். நான் அழகாக அலங்கரித்துக் கொண்டு புறப்பட்டேன். என் உள்ளம் கணவனுடன் ஆனந்தமாகச் செல்லும் வாய்ப்புக் கிடைத்ததை நினைத்துப் பெருமித மடைந்தது.

அவருடன் கைகோத்துக் கொண்டு சென்றேன். அப்பொழுது எனக்கு எங்கேயோ சொர்க்கபுரியில் சிறகு கட்டிப் பறப்பது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது.

"என்ன? எங்கே போகலாம்? எங்கள் ஊர்க் கோவிலை நீங்கள் பார்த்ததில்லையே? போகலாமா?'' என்று அவரிடம் ஆவலுடன் வினவினேன்.

"கோவிலுக்கா? வேண்டாம், ஜயம்! சினிமாவுக்குப் போகலாம். ஊருக்குப் போனால் சினிமா பார்க்கப் பொழுதிருக்காது" என்று பதிலளித்தார் என் கணவர்.

"சினிமா வென்றால் நான் வரவில்லை!" என்று பொய்க் கோபத்துடன் கூறினேன் நான். அவர் உடனே மனம் மாறி, 'ஜயம்! உன் ஆசைப்படியே கோவிலுக்குப் போகலாம்' என்று கூறுவார் என்று எதிர் பார்த்தேன். ஆனால் எதிர்பார்த்தது நடந்து விட்டால் அதிசயம் என்ன இருக்கிறது?

"நீ சினிமாவுக்கு வரவில்லையா? அப்படியானால் வீட்டுக்குத் திரும்பி விடலாம்!" என்று கரகரத்த குரலில் கூறினார் அவர். அவர் குரலில் அன்புக்குப் பதிலாக அதிகாரம் ஆட் கொண்டிருந்தது.

"நீங்களும் என்னுடைய தகப்பனார் என் அம்மாவை மிரட்டுவது போல் மிரட்டுகிறீர்களே?" என்று கண்களில் நீர் மல்க அவரைக் கேட்டேன்.

"நீயும் உன் அம்மாவைப் போல் முரண்டுப் பிடிவாதம் பிடிக்கிறாயாக்கும்!" என்றார் அவர் ஏளனக் குரலில்.

என் கண்களில் நீர் முட்டி நின்றது. என் வார்த்தைக்குச் சிறிதாவது அவர் செவி சாய்க்க வில்லையே? மனைவி என்றால் அடிமை என்று அவர் நினைக்கிறாரோ? புதுக் குடித்தனம் வைப்பதற்கு முன்பே இத்தகைய தகராறு நேர்ந்தால் வாழ்க்கை இனிதாகச் செல்லும் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்? ஆனால் என் மன வருத்தத்தை யெல்லாம் அடக்கிக் கொண்டு, "சரி! உங்கள் விருப்பப்படியே சினிமாவுக்குப் போகலாம்!" என்றேன். அவருடன் அன்று வேண்டா வெறுப்போடு சினிமா பார்த்து விட்டுத் திரும்பி வந்தேன்.

மறுநாள் என் கணவருடன் புக்ககத்துக்குப் புறப்பட்டு விட்டேன். எல்லோரிடமும் பிரியா விடை பெற்றுக் கொண்டேன். என் பாட்டியைப் போய் நமஸ்கரித்ததும் அவள், "அம்மா, குழந்தை! நீ தீர்க்க சுமங்கலியாய் வாழ வேண்டும். நான் என்னுடைய நீண்ட கால வாழ்க்கை அனுபவத்திலிருந்து உனக்குச் சொல்லுகிறேன். இல்வாழ்க்கை சந்தோஷமாக இருக்க வேண்டுமானால் இதை மட்டும் ஞாபகம் வைத்துக் கொள். உன் கணவன் உன்னிடம் எவ்வளவு கோபித்துக் கொண்டாலும் நீ பணிந்து போய் விட வேண்டும். இதுதான் வாழ்வின் ரகசியம். இரண்டு கைகளையும் கொட்டினால் தானே சத்தம் எழும்?" என்று புத்திமதி கூறினாள். "ஆகட்டும், பாட்டி!" என்று பாட்டி சொல்லுக்குத் தலையசைத்தேன் நான்.

* * *

புதுக் குடித்தனம் வைத்தாகி விட்டது. முதலில் கணவர் என்னிடம் மிகுந்த அன்புடன் நடந்து கொண்டார். என்னைச் சினிமாவுக்கு அழைத்துச் செல்வார். தினம் மாலையில் மலர்ச் சென்று வாங்கி வருவார். ஆனால் நான் பிரியப்பட்டு ஒன்றும் கேட்பதில்லை. அவருடைய சுபாவம்தான் எனக்கு முன்பே நன்றாகத் தெரிந்திருந்ததே!

ஒரு வருஷம் எவ்விதச் சலனமுமின்றிக் கழிந்தது. அன்று சனிக்கிழமை. இரண்டு மணியோடு ஆபீஸ் மூடுவதால் நேரே வீட்டுக்கு வந்து சேர்ந்தார் என் கணவர். அன்று ஒரு நாளும் இல்லாத திருநாளாக அவர் ருத்ரமூர்த்தியாக விளங்கினார்.

வீட்டினுள் நுழைந்ததும் அவர் வீடே அதிரும்படி கத்தினார். நான் விழித்திருந்தும் கண்களை இறுக மூடிப் படுத்திருந்தேன். என் அருகில் வந்து "ஜயம்! ஜயம்!" என்று காது செவிடுபடும்படி கூவினார்.

நான் திடுக்கிட்டு விழித்தெழுவது போல் எழுந்து கண்களைப் புடவைத் தலைப்பினால் துடைத்துக் கொண்டேன்.

"இந்தா, ஜயம்! நீ வீட்டில் தானே இருக்கே? சட்டை கிழிந்திருந்தால் அதை நீ பார்த்துத் தைச்சு வைக்கக்கூடப் பொழுதில்லையா? உன்னால் கிழிந்த சட்டையைப் போட்டுக் கொண்டு சென்றதில் ஆபீசில் அனைவரும் என்னைப் பரிகாசம் செய்ய ஆரம்பித்து விட்டார்கள்!" என்று அவர் பொரிந்து கொட்டினார்.

அவருடைய கடுகடுத்த முகத்தைக் கண்டு பயந்து போய், "இல்லையே! காலையில் உங்கள் சட்டையைப் பார்த்துத் தானே எடுத்துக் கொடுத்தேன்? கிழிந்திருக்கவில்லையே!" என்று பதட்டத்துடன் கூறினேன்.

"ஆமாம்! நீ சரியாகப் பார்த்தால் தானே தெரியப் போகிறது? உனக்குத் தூங்கத் தான் பொழுதிருக்கிறது!" என்றார் அவர் ஆத்திரம் தாங்க முடியாமல்.

எனக்குத் துக்கம் தொண்டையை யடைத்தது. அவரிடம் என் ஆத்திரத்தை யெல்லாம் கொட்டித் தீர்த்துவிட வேண்டும் என்று தோன்றியது. ஆனால் என் பாட்டியின் உபதேசம் ஞாபகத்துக்கு வந்து என் ஆத்திரத்தையும் கோபத்தையும் தணித்து விட்டது.

'சரி! சட்டையைக் கழற்றிக் கொடுங்கள். இப்பொழுதே தைத்துத் தந்து விடுகிறேன்!" என்றேன் நான்.

"நீ தைக்கவும் வேண்டாம்; ஒன்றும் வேண்டாம்" என்று கோபத்துடன் கூறி விட்டு அவர் விடுவிடென்று விறைப்புடன் வெளியே சென்று விட்டார்.

அவர் போன பிறகு என் நெஞ்சிலுள்ள பாரத்தை யெல்லாம் கண்ணீர் பெருக்கித் தீர்த்துக் கொண்டேன்.

அன்று வெகு நேரம் கழித்து அவர் வீடு திரும்பினார். அவர் வந்ததும் வராததுமாக, "ஜயம்! உன்னை ரொம்பவும் கோபித்துக் கொண்டு விட்டேன். என்னை மன்னித்துவிடு. சட்டை கிழிந்ததற்குக் காரணம் நீ அல்ல. நான் அவசரமாகப் பஸ்ஸில் ஏறும்பொழுது அதிலுள்ள ஆணி கிழித்து விட்டது. நான் அதைத் தெரிந்து கொள்ளவில்லை. என்

நண்பன் கிட்டு, "ஏண்டா, பழி, பஸ்ஸில் இன்று இப்படி முண்டியடித்துக் கொண்டு ஏறினாயே? உனக்குச் சட்டையை ஆணி கிழித்து விட்டது கூடத் தெரியவில்லையே?" என்று கேலி செய்தான். என்னுடைய தவறினால் தான்..." என்று கூறினார்.

எனக்கு அச்சமயத்தில் அவரிடம் இரக்கமே உண்டாயிற்று. அதோடு அவர் கோபித்துக் கொண்ட பொழுது எதிர்த்துப் பேசி வம்பை வளர்த்துக் கொள்ளாதது எவ்வளவு நல்லதாகப் போய்விட்டது என்று எண்ணினேன். எல்லாம் என்னுடைய பாட்டியின் உபதேசத்தினால்தானே?......

**வ**ருஷ மலரில் ஐந்து பறிக்கப்பட்டன. எங்கள் குடும்பத்தை விளங்க வைக்கக் கோபு தோன்றினான். கோபு பிறந்ததிலிருந்து என் கணவரின் பராமுகம் அதிகமாயிற்று. கோபுவின் கொஞ்சு மொழியிலும் பவளவாய்ச் சிரிப்பிலும் அவர் மனத்தைப் பறி கொடுத்து விட்டதால்தானோ என்னவோ! அவர் ஆபீஸிலிருந்து திரும்பி வந்ததும் அவருடைய கேள்வி கோபுவைப் பற்றித்தான் இருக்கும். "என்ன கோபு தூங்கி விட்டானா?" என்று கேட்டுக் கொண்டே அவர் எதிரில் நிற்கும் என்னைச் சிறிதும் பொருட்படுத்தாமல் நேராகக் குழந்தை கோபுவின் தொட்டிலருகில் போய் நிற்பார்.

என்னைச் சிறிதும் கவனிக்காமல் நேரே குழந்தையிடம் செல்லுவது எனக்கு மிகுந்த மன வருத்தத்தை யளிக்கும். அவருடைய பராமுகம் அதோடு மட்டுமல்ல; வழக்கமாக அவர் பூ வாங்கி வருவதை நிறுத்தி விட்டார். மாதத்துக்கு ஒரு முறை சினிமா அழைத்துச் செல்லுவதும் நின்று விட்டது. ஆனால் நான் அவரிடம் என் மனக் குறைகளை எடுத்துச் சொல்லும் வழக்கம் கிடையாது.

ஒருநாள் அவர் ஆபீஸிலிருந்து திரும்பி வந்து உடைகளை மாற்றிக் கொண்டு அலுப்பினால் ஈஸிசேரில் சாய்ந்து கொண்டிருந்தார். கோபு அவருக்குப் பக்கத்தில் 'உம்' என்று முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டிருந்தான். அவனுக்கு அவர் வெளியில் தூக்கிச் செல்லவில்லை என்ற கோபம் போலும்!

கையில் காப்பி டிபனுடன் அவரருகில் சென்று, "நீங்கள் வந்து வெகு நாழிகையாகி விட்டதோ? கோபு படுத்துகிற சேஷ்டையைக் கவனிப்பதிலே பொழுதுபோனதே தெரியவில்லை. காப்பி போட நாழிகையாகி விட்டது" என்றேன்.

"பாரப்பா! இந்த அம்மா எப்பொழுது பார்த்தாலும் என்மேலே குற்றம் சொல்லிண்டே யிருக்கா" என்று அழாக் குறையாகக் கூறினான் கோபு.

"ஏண்டா! அப்பா அறையிலே மையைக் கொட்டி, பேப்பரைக் கிழித்துப் போட்டு கிர்த்தூளி பண்ணிக் கொண்டிருந்தாயே? அப்பா வந்ததும் வாலைச் சுருட்டி மடக்கி



"என்ன, உனக்கா குடும்பத் தொந்தரவு! உன் மனைவியை மாணிக்கம் என்று சொல்லி ரொம்பப் பாராட்டுகிறாயே!"

"அவளால் எனக்கு ஒரு தொந்தரவும் இல்லை. தொந்தரவெல்லாம் மாணிக்கத்தின் தாயினால்தான்!"

வைத்துக் கொண்டு· விட்டாயாக்கும்" என்றேன் கோபந் தாங்க முடியாமல்.

"பார், அப்பா! இந்த அம்மா எப்போப் பார்த்தாலும் என்னை அதட்டிண்டே யிருக்கா?" என்று கூறிக் கோபு 'ஹோ' வென்று அழத் தொடங்கினான்.

"ஜயம்! நான் தினம் பார்க்கிறேன். உனக்குச் சமையல் செய்வதற்கும் மற்ற வேலைகளைக் கவனிப்பதற்குந்தான் நாழியாகிறது என்று பார்த்தால் குழந்தையைக்கூடச் சரியாக வளர்க்கத் தெரியவில்லையே?" என்று கடிந்து கொண்டு என்னைச் சுட்டு எரித்துவிடுபவர் போல் ஒருதரம் விழித்துப் பார்த்தார்.

அவர் பார்வை என் இருதயத்தைச் சுட ஆரம்பித்து விட்டது. அவர் வார்த்தைகள் என் சிந்தனையைக் கிளறி விட்டு விட்டன. இதுவரையில் நான் அடக்கி வைத்திருந்ததை யெல்லாம் கொட்டித் தீர்த்து விடலாமா என்று நினைத்தேன்.

அந்தச் சமயத்தில் துண்டை எடுத்துத் தோளில் போட்டுக் கொண்டு குழந்தை கோபுவையும் அழைத்துக்கொண்டு வெளியே சென்று விட்டார்.

அவருடைய அபாண்டப் பழியைக் கேட்டு என் மனம் வெதும்பி விட்டது. என் கண்களில் நீர்முட்டி நின்றது.

'நான் குழந்தையை அடிக்கிறேனா? அவன் இஷ்டப்படி ஆடுவதினாலேதான் அவன் தொந்தரவு பொறுக்க முடியவில்லை. அதைச் சிறிது கண்டித்தால்தானே குழந்தை நல்லவனாக வளர முடியும்? அதில் என்ன தவறு? ஒரு தாய்க்குத் தன் குழந்தையைக் கண்டிக்கக் கூட உரிமை கிடையாதா?" என்று என் மனத்தில் கேள்விகள் எழுந்தன.

கல்யாணம் ஆனதிலிருந்து இன்றுவரை நடந்த ஒவ்வொரு சம்பவங்களும் என் மனக் கண்முன் தோன்றலாயின. முதல் முதலில் கோவிலுக்குப் போக வேண்டாம், சினிமாவுக்

டுத்தான் போக வேண்டும் என்று என் கணவர் கடிந்து கொண்டதிலிருந்து பலப்பல விதமான நிகழ்ச்சிகள் என் மனத் திரையில் விரிந்து விசுவரூபம் எடுக்க ஆரம்பித்து விட்டன. என் கணவர் எனக்கு ஒரு முரட்டு மனிதராகத் தோன்ற ஆரம்பித்து விட்டார். என்னுடைய உள்ளம் அவரை ஏனோ வெறுக்க ஆரம்பித்து விட்டது. அடுத்த கணம் என் வேதனை கட்டுக்கு மீறிப் போனதால் எனக்குப் பிறந்தகம் போய்விடலாம் என்று தோன்றியது. வெறி பிடித்தவள் போல மூட்டை முடிச்சுக்களைக் கட்டத் தொடங்கினேன். அவர் வெளியிலிருந்து வரும் வரை வீட்டைக் கவனித்துக் கொள்ள வேண்டுமல்லவா? அதற்காக வீட்டு வேலைக்காரியை அழைத்து வரப் பக்கத்து வீட்டுப் பையனிடம் சொல்லி அனுப்பினேன். அவர் வருவதற்கு முன்பே ரயில்வே ஸ்டேஷனுக்குச் செல்ல வேண்டும் என்று என் மனம் துடி துடித்தது.

வேலைக்காரி வரும்வரை என்மனம் பட்ட பாடு கொஞ்ச நஞ்சமல்ல. வாசலுக்கும் கடைக்கும் நூறுதடவை நடந்தேன். 'அவருக்குக் குழந்தைதான் வேண்டும். நான் எதற்கு? விரும்பத்தகாத இடத்தில் இருந்து கஷ்டப்படுவதில் என்ன பயன்?' என்று எண்ணினேன்.

'நீ வீட்டை விட்டு ஓடிப் போகிறாய்? கல்யாணத்தன்று நீ செய்த சபதங்களெல்லாம் என்னவாயிற்று? ஒரு பெண் தன் கணவனுடன் வாழ்நாள் முழுதும் துணையாக இருக்க வேண்டும் என்பதுதானே நியதி? இத்துப் பெண்ணுக்கு ஒரே சிந்தை, ஒரே இதயம், ஒரே வாழ்க்கை,—எல்லாம் கணவனோடு இழைந்த வாழ்க்கைதானே! வண்டியில் பூட்டிய மாடுகளில் ஒன்று சண்டி செய்தால் வண்டி நகருமா? குடும்ப வாழ்க்கையும் அப்படித்தானே?......'

என் இதயத்தில் எழுந்த மனப் போராட்டங்கள் இன்னும் தொடர்ந்தன. அப் போராட்டத்தை நிறுத்த எவ்வளவோ முயற்சி செய்தேன். ஆனால் அது கட்டுக் கடங்கினால் தானே? சிந்தனைக் கயிற்றைத் துண்டிக்க முடியாமல் தவியாய்த் தவித்தேன்.

'நீ எந்த இடத்துக்குப் போனாலும் அவர் உன் கணவர்தானே? அவர் என்ன நினைத்தாலும், என்ன செய்தாலும் நீ செய்வது போலத்தானே? 'இரண்டு கைகளையும் கொட்டினால்தானே சத்தம் எழும்?' என்ற பாட்டியின் உபதேசத்தை இதுவரை கடைப்பிடித்தவள் இப்பொழுது ஏன் அதை மறந்து விட்டாய்? கணவனைப் பிரிந்த வாழ்க்கை முள்ளும் கல்லும், பாலைவனமும் போலிருக்கும் என்று பிறர் சொல்லக் கேட்டதில்லையா?......'

கதவை யாரோ தட்டும் சத்தம் கேட்டது. உடனே பரபரவென்று கட்டிய மூட்டைகளைப் பிரித்து வைத்துவிட்டு வாசலுக்குச் சென்றேன். வாசலில் வேலைக்காரி பொன்னம்மாள் நின்று கொண்டிருந்தாள்.

"என்ன அம்மா! என்னைக் கையோடு கூட்டிக்கிட்டு வரச் சொன்னீர்களாமே?" என்று கேட்டுக்கொண்டே என்னை ஆவலுடன் நோக்கினாள் அவள்.

"ஒன்றுமில்லை. குழந்தையும் ஐயாவும் வெளியிலே போய் ரொம்ப நேரமாகி விட்டது. கவலையாயிருந்ததால் உன்னை அனுப்பிப் பார்த்துவிட்டு வரச் சொல்லலாம் என்று எண்ணிக் கூப்பிட்டனுப்பினேன்" என்று ஒரு முழுப் பொய்யைக் கூறி மழுப்பினேன்.

அவள் அதை நிஜமென்று நம்பி, "அம்மாவுக்கு ஐயாவைப் பிரிந்து அரை நிமிசங்கூட இருக்க முடியாது!" என்று கூறிக் கொண்டிருக்கும்போதே, என் கணவர், "யாருக்கு?" என்று கேட்டுக் கொண்டே குழந்தை கோபுவுடன் உள்ளே நுழைந்தார்.

வேலைக்காரி ஏதோ சொல்ல வாயெடுத்தாள். அதற்குள் நான் கண் ஜாடை காட்டவே நிறுத்தி விட்டாள்.

கோபு. "அம்மா!" என்று கூறிக்கொண்டே என்னிடம் தாவினான்.

"அப்பா! உன் பிள்ளை படுத்தின பாட்டைச் சொல்லி முடியாது. அரை நிமிஷங்கூட சும்மாயிராமல் 'அம்மா விடம் கொண்டுவிடு' என்று என்னை நச்சரித்து விட்டான்" என்று கூறி மலர்ந்த முகத்துடன் என்னிடம் கோபுவைக் கொடுத்தார்.

கோபுவை வாரியணைத்து உச்சி முகர்ந்தேன். கணவரின் அன்புப் பேச்சிலும், குழந்தையின் அரவணைப்பிலும் எனக்கு ஏற்பட்ட பூரிப்பை அளவிட முடியாது.

* * *

வாசலில் யாரோ கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழையும் சத்தம் கேட்கவே என் சிந்தனைக் கயிறு தானாகவே அறுந்து கொண்டது.

அடுத்த வீட்டுக் கமலாவும் அவள் பெண் விஜயாவுந்தான் வீட்டினுள் வந்து கொண்டிருந்தனர்.

"மாமி! இன்று தை வெள்ளிக்கிழமை. என் பெண் விஜயா உங்களை நமஸ்கரிக்க வந்திருக்கிறாள். உங்களைப் போன்ற மனமொத்த தம்பதிகள் ஆசீர்வதித்தால் தான் பலன் கிடைக்கும்" என்றாள் கமலா.

விஜயா என்னை நமஸ்கரித்தாள்.

"உனக்கு நல்ல கணவனாக வந்து நீ தீர்க்க சுமங்கலியாய் வாழ வேண்டும்" என்று விஜயாவை ஆசீர்வதித்தேன்.

அவர்களிருவரும் மலர்ந்த முகத்துடன், "மாமி! போய் வருகிறோம்!" என்று என்னிடம் விடைபெற்றுச் சென்றனர். அவர்களையே வியப்புடன் சிறிது நேரம் நோக்கி விட்டுப் பின் காப்பி போடுவதில் முனைந்தேன். 'அடக்கம் அமரருள் உய்க்கும்' என்பது உண்மையானதை எண்ணிப் பூரிப்படைந்தேன். எல்லாம் என் பாட்டியின் உபதேசத்தினால் தானே!



எல்லோரும்
பிரிட்டானியா
பிஸ்கோத்துகளை
அனுபவிக்கிறார்கள்
சிறந்த பிஸ்கோத்து
பிரிட்டானியா
BC.3599

# வேதனைச்

"மாலதி வந்திருக்கிறாள், எவ்வளவோ வருஷங்களாகப் பூட்டிக் கிடந்த அவள் வீடு திறந்திருக்கிறது என்பதைக் கேட்டபோது என்னிடம் ஒரு அதிர்ச்சி ஏற்பட்டது. உள்ளத்தை இனம் புரியாத திகில் ஒன்று வந்து பற்றிக் கொண்டது. அவள் ஏன் வந்தாள் என்றுகூட நினைத்தது என் மனம். அவளைப் பார்க்க வேண்டும் போலிருந்தது. ஆனால் அதே சமயத்தில் பார்க்கப் பயமாகவும் கூச்சமாகவும் இருந்தது. எப்படிப் பார்ப்பது!

பிறர் உடைமையை அனுபவித்துக் கொண்டிருப்பவன் உடைமைக்காரனைப் பார்க்க எவ்வளவு சங்கடப்படுவானோ, அப்படித்தான் என் நிலையும் இருந்தது. மாலதியின் வாழ்வை நான் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். அவள் அனுபவிக்க வேண்டிய இன்பங்களை நான் அடைந்திருக்கிறேன். அதனால்தான் அவளைப் பார்க்க, அவள் வரவைக் கேட்க எனக்கு மிகவும் வெறுப்பாக இருந்தது.



அழகியாக இந்த ஊரை விட்டுச் சென்ற மாலதி இன்று ஒளி யிழந்த பாத்திரம் போலக் கைம்பெண்ணாகத் திரும்பி வந்திருக்கிறாள். தன் கண்ணின் சுழற்சியினால் எங்கள் ஊரிலிருந்த இளைஞர்களின் உள்ளங்களைக் கொக்கி போட்டிழுத்த அதே மாலதி இன்று பிரமை பிடித்தவள் போல, எதையோ பறி கொடுத்ததுபோலக் காணப்பட்டாள். பத்து வருஷங்களுக்கு முன்பு நான் அவளிடம் பொறாமை கொண்டேன். ஆத்திரப்பட்டேன். இன்று அவள் நிலையைக் கேட்டுப் பரிதாபப் படுகிறேன்; அனுதாபங் கொள்கிறேன்.

மாலதியின் நினைவிலே, மிதந்து வந்து முன்னால் நின்றார்கள் என் தோழிகளான மதுரம், கோமதி இருவரும். நாங்கள் நால்வரும் ஒரு வயதுப் பெண்கள். ஒன்றாக வளர்ந்தவர்கள். காலப் புழுதி படிந்து மேடிட்டுக் கிடந்த உள்ளத்தை நினைவுப் பெரு மூச்சினால் ஊதினேன். மண்டிக்கிடந்த புழுதிக்கு அடியிலே உள்ளத்தைக் குறு குறுக்க வைத்த நிகழ்ச்சிகளடங்கிய இளமை ஏடுகள் படபடத்துப் பறந்தன. புதிய ஆவலுடன் அதைப் புரட்டி ஆராய ஆசைப்பட்டது என் உள்ளம்! அதன் ஆசை இயற்கைதானே! இன்றைய மாலதி அன்றைக்கு எப்படி இருந்தாள், தெரியுமா!

மாலதியைப் பற்றிச் சொல்வதற்கு முன்னால் எங்கள் ஊரைப் பற்றிச் சொல்ல வேண்டும். எங்கள் ஊரைக் கிராமமென்று சொல்ல முடியாது. ஆனால் கிராமத்தின் அமைதி அங்கு குடி கொண்டிருந்தது. பத்து மைலுக்குள் பெரிய நகரம் இருந்ததால் அதன் கலகலப்பும் எங்கள் ஊரில் நிழலாடிக் கொண்டிருந்தது. எதையும் தங்கள் செல்வத்தினால் சாதிக்க முடியும் என்ற தெம்புடையவர்கள்தான் இங்குள்ளவர்கள் — அதாவது எங்கள் குடும்பத்தைத் தவிர.

எனக்கு நினைவு தெரிந்த போது என்னோடு விளையாட வந்தார்கள் மதுரம், கோமதி, மாலதி மூவரும். நாங்கள் குழந்தைகளாக விளையாடினோம், ஒருவருக் கொருவர் வித்தியாசமின்றி. குமரிகளான பிறகு நாங்கள் ஒவ்வொருவரும் எங்களுக்காகச் சில விஷயங்களை எங்கள் உள்ளத்தில் ரகசியமாக மூடி வைத்துக் காப்பாற்ற ஆரம்பித்தோம்.

மதுரம் சென்னைக்குத் தன் அத்தை வீட்டுக்குப் படிக்கப் போனாள். அங்கு ஒரு வாலிபனிடம் காதல் கொண்டிருக்கிறாள் என்ற செய்தியை அவள் கடித மூலம் அறிந்து கொண்டேன். ஆனால் ஒரு நாள் திடீரென்று மதுரம் எட்டி எட்டிப் பறந்து சிறகொடிந்த பட்டுப் பூச்சிபோல் திரும்பி வந்தாள். மதுரத்தைக் காதலித்த இளைஞனுக்கு வேறு இடத்தில் திருமணம் நிச்சயமாகி விட்டது என்பதை நாங்கள் தெரிந்து கொண்டோம்.

என் கவனமெல்லாம் அப்போது எங்கள் ஊரில் இருந்த நாராயணனிடம்தான் சென்றிருந்தது. 'அவன் எனக்கு மணாளனாக வாய்த்தால்...' என்று நான் இன்பக் கனவில் என்னை மறந்து போய் லயித்து உட்கார்ந்திருந்த நாட்கள் எவ்வளவோ! சென்னையிலிருந்து வந்த மதுரம் எங்களுடன் பேசவில்லை. ஏன், குழந்தையில் தோழிகளாகப் பழகின நாங்கள் இப்

# சங்கிலி

போது ஒருவருடன் ஒருவர் ஏனோ மனம் விட்டுப் பழகிக் கொள்வதில்லை. இந்த மாறுதல் எங்களிடம் எப்படி, ஏன் ஏற்பட்டது என்று எங்களுக்கே தெரியவில்லை.

ஒரு நாள் அந்தச் செய்தி என்னைத் திடுக்கிட வைத்தது. மதுரத்துக்கு ராமுவை நிச்சயம் செய்திருக்கிறார்கள் என்ற செய்திதான் அது. கோமதியைத்தான் ராமுவிற்கு முடிப்பதாக இருந்தது. கோமதியே என்னிடம் சொல்லி இருந்தாள். ராமுவின் அழகையும் அவன் குணத்தையும் பற்றி என்னிடம் அவள் எவ்வளவோ பேசி இருக்கிறாள். வயதுப் பெண்ணான நாங்கள் தனிமையில் உட்கார்ந்து பேசுவதற்கு இதைவிட வேறு என்ன விஷயம் இருக்கப் போகிறது!

தானே அடையலாம், தனக்கே ராமு மாலையிடுவான் என்று நம்பியிருந்த கோமதியின் நம்பிக்கையிலே நஞ்சூட்டும் செய்தியல்லவா இது! செய்தியல்ல, உண்மைதான் என்பதை நிரூபித்தது மதுரத்தின் வீட்டில் நடப்பட்டிருந்த முகூர்த்தக் கால். அவர்கள் பணம் படைத்தவர்கள். பணத்தினால் எதையும் சாதிக்க முடியும் என்பதை நிரூபித்து விட்டார்கள். கோமதிக்கு நிச்சயமாகியிருந்த வரனைத் தங்கள் பெண்ணிற்கு முடித்துக் கொண்டு விட்டார்கள். கோமதியை நான் பார்த்தேன். பேசவில்லை. அவள் கன்றிய முகமும் சிவந்த விழிகளில் அலைமோதிக் கொண்டிருந்த கண்ணீரும் அவள் உள்ளத்திலே குமுறிக் கொண்டிருக்கும் உணர்ச்சிப் புயலை எடுத்துக் காட்டின.

மதுரத்தின் கல்யாணம் நடந்த ஒரு வாரத்திற்குள் கோமதிக்குக் கல்யாணம் நிச்சயமானதுதான் அதைவிட வியப்பான விஷயம். தான் எதிர்பார்த்துக் காத்திருந்ததை இன்னொருத்தி பறித்துக் கொண்டு போன ஆத்திரம்தான் கோமதியை அந்த முடிவுக்குக் கொண்டு வந்து விட்டது என்று எனக்குத் தெரியும். ஏனென்றால் நாங்கள் ஒரு வயதுப் பெண்கள் மட்டும் அல்ல; ஒன்றாகப் பழகியவர்களும்கூட அல்லவா!

கோமதிக்கு நிச்சயமாகியிருந்த கணவன் ரகுபதி. எனக்குச் சிரிப்பாக வந்தது. சிரிப்பதா, வேதனைப்படுவதா! இரண்டு வருஷங்களுக்கு முன் இந்த ரகுபதி கோமதியின் கடைக்கண் பார்வைக்கு, அவள் இதழ் நெளிவிற்குக் காத்துக் கிடந்தான். தன் லட்சியக் காதலி அவள்தான் என்று தன் நண்பர்களிடம் எல்லாம் கூடச் சொல்லிக் கொண்டான். ஆனால் அப்போதெல்லாம் கோமதி ரகுவைச் சட்டை செய்யவே இல்லை. அவன் பார்வையையும் பேச்சையும் வெறுத்தாள். அவள் எண்ணமெல்லாம் ராமுவிடம் லயித்திருப்பதை அறிந்த ரகுபதி நாளடைவில் தன் நினைவை மாலதியிடம் திருப்பி இருந்தான்.

எங்களுக்குள்ளேயே மாலதியைத்தான் நாங்கள் அழகி என்று முடிவுகட்டி இருந்தோம். அந்த மிடுக்கான தோற்றத்திலும் அவள் சிரிப்பிலும் பார்வையிலும் எங்களுக்கே அவளிடம் பொறாமை ஏற்படும்படி என்னவோ இருந்தது. அப்படிப்பட்டவளை விட்டு விட்டு ரகுபதி கோமதியிடம் மறுபடி மனத்தைப் பறி கொடுக்க மாட்டான் என்றுதான் நான் நம்பினேன். ஆனால் என் நம்பிக்கையை நாசமாக்கி விட்டுப் பழைய நினைவுகளின் போதையிலே ரகுபதி கோமதிக்கு மாலையிட்டு விட்டான். 'பாவம்' என்று மாலதிக்கு இரங்கினேன். 'இப்படி ஏன் ஒருவர் விரும்பிக் காத்திருக்கும் பொருளை மற்றவர் பலவந்தமாகப் பிடுங்கிக் கொள்ளுகிறார்கள்! இந்தப் போராட்டம் ஏன்!' என்று என்னை நானே கேட்டுக் கொண்டேன்.

ஆனால் இந்தத் தீராத பிரச்னை என் விஷயத்திலும் வந்து குறுக்கிடப் போவதை நான் கற்பனை கூடப் பண்ண வில்லை. யார் யாருடைய வாழ்வு வானத்திலேயோ சிறு சிறு மேகங்களாக ஒன்றிரண்டு வந்து என்மீது புயலாக ஆர்ப்பரிக்கப் போகிறது என்பதை நான் நினைக்க வில்லை. பிறர் விஷயத்தில் இரக்கம் காட்டும் நமக்கே அந்த நிகழ்ச்சி ஏற்படும் போது தானே அதன் வேதனையின் வேகத்தை நாம் உணர முடிகிறது!


மதுரம் ஒருவனை மணக்க விரும்பினாள். அவனை வேறு எவளோ தன்னவனாக்கிக் கொண்டாள்.

கோமதி தன் வாழ்வை மகிழ்விக்கத் தகுந்தவன் ராமநாதன் என்று கனவு கண்டு அவன் கரம் பிடிக்கக் காத்துக் கிடந்தாள். அவனை மதுரம் தன் உடைமை யாக்கிக் கொண்டு விட்டாள்.

மாலதி தன் உள்ளத்தை ரகுபதியிடம் பறி கொடுத்து மயங்கிக் கிடந்தாள். கோமதி அவனைத் தன் கழுத்தில் மாலையிடச் செய்து விட்டாள்.

இப்போது என் முறை. என் கனவை, ஆசையைப் பாழாக்கக் கூடிய பார்வையை மாலதி நாராயணன் மீது வீசி விட்டாள்...... அந்தப் பார்வை!...... ராம நாதனை





நிலை குலைய வைக்க மதுரம் பார்த்த பார்வை, ரகுபதியை மாலதியிடமிருந்து ஓடிவரச் செய்யக் கோமதி பார்த்த அதே பார்வை!

அது நடந்தது தை வெள்ளிக்கிழமை யன்று தான். அன்று காலையிலிருந்தே என் மனம் மாலையின் வரவை எதிர்பார்த்துத் தவித்துக் கொண்டிருந்தது. தை வெள்ளிக்கிழமை கோயிலுக்குப் போக வேண்டுமென்பதற்காக. நான் கோயிலுக்குப் போகத் துடித்தது பக்தியினால் இல்லை. அவரும் கோயிலுக்கு வருவார், அவரைச் சந்திக்கலாம் என்ற குறு குறுப்புத்தான். நான் நினைத்தபடியே பிராகாரத்தில் அவரைச் சந்தித்தேன். காலையிலிருந்து பொங்கிக் கொண்டிருந்த மனது பூரித்து இதழிலே முறுவலாகப் பூத்து வெளித்தது. அவரும் என்னைப் பார்த்தார். எவ்வளவோ ஆசையாக அவரைச் சந்திப்பதைக் கற்பனை செய்திருந்த நான் அவர் பார்வையைச் சந்திக்கச் சக்தியின்றித் தலை குனிந்து விட்டேன். வேகமாக 'வா, அம்மா' என்று என் தாயாரைக் காரணமின்றிக் கடிந்து கொண்டு நகர்ந்தேன். சந்நிதானத்தில் அவர் நிற்கும் இடத்துக்கு நேரே போய் நிற்க வேண்டும் என்ற துடிப்புத்தான் அந்தத் தவிப்புக்குக் காரணம். பிராகாரத்தில் நான் நடக்கவில்லை. பூமியில் என் கால்கள் பாவவே இல்லை. அவர் நினைவிலே, அவர் அழகிய தோற்றத்திலே என்னை மறந்து மிதந்து கொண்டிருந்தேன். அந்த நிலையிலே என் உள்ளத்திலே ஈசுவரியின் நினைவு துளிர் விட்டது. "அம்பிகே, தாயே, பராசக்தி... இவரை என் மணாளனாக்க அருள் பாலித்தருள் அம்மா!" என்று வேண்டிக் கொண்டேன்.

பிரதட்சிணமாகச் சந்நிதானத்துக்கு வந்தபோது அங்கு கூடி இருந்த அத்தனை பேரின் பார்வையையும் காந்தம் போலத் தன் பக்கம் இழுத்துக் கொண்டு வந்து கொண்டிருந்தாள் மாலதி. இளிப் பச்சை வர்ணப் பட்டுப்புடவை அவள் பட்டுடலில் நிற்காமல் வழுக்கி விழுந்து கொண்டிருந்தது. சர விளக்கின் ஒளியிலே அவள் உருவம் எழில் பிம்பமாகக் காட்சியளித்தது. அவளது ஆடம்பரமான தோற்றத்தைப் பார்த்த பிறகு தான் என் சாதாரண உடையும் தோற்றமும் என் உள்ளத்தை உறுத்த ஆரம்பித்தன. அவளோ இயற்கையிலேயே அழகி. இன்று அவள் தன்னை அழகு படுத்திக் கொண்டே வந்திருந்தாள். அவளிடம் பதிந்திருந்த என் பார்வையைப் பிடுங்கிக் கொண்டு பரபரப்புடன் அவரைத் தேடினேன். சிறிது தூரத்தில் நின்றிருந்த அவரது பார்வையும் மாலதியிடம் ஒட்டிக் கொண்டிருப்பதைப் பார்த்த போது என் ஹிருதயத்தை யாரோ திருகி முறித்து எடுப்பதுபோல இருந்தது.

நல்ல புடவை உடுத்திக் கொள்ளப் போன என்னை, 'கோயிலுக்குப் போக என்னடி அலங்காரம்!' என்று கோபித்துக் கொண்ட என் தாயாரின் மீது அப்போது ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. ஒய்யார நடை நடந்து சந்நிதானத்துக்கு உள்ளே போகும் மாலதியைப் பார்த்தபோது கோபம் பொங்கி எழுந்தது. அப்போதுதான் அவள் தனது பார்வையை அவர் மீது வீசினாள், இமைகளை உயர்த்தி இதழ்களை வளைத்து. என் உடலில் சூடு ஏறிற்று. நெஞ்சின் கொதிப்பு நெற்றியிலே வியர்வையாக முத்திட்டது.

இனி அவர் உன்னுடையவர் இல்லை என்று என் காதில் யாரோ சொல்லிச் சிரிப்பது போல இருந்தது. நான் அழவில்லை. என் கண்களில் நீர் கூடக் கோடிடவில்லை. அவ்வளவு ஆத்திரம். ஆத்திரம் என் மனதை — இல்லை, உடலையும் கூட இறுக்கி விட்டது. மதுரத்தைப் போல, கோமதியைப் போல, ஏன்! மாலதியைப் போலவும் கூடத் தலையை நிமிர்த்திக் கொண்டு அலட்சியமாக, விரைப்பாக நடந்தேன்.

அம்மன் கோயில் விளக்கில் எண்ணெயை ஊற்றக் கூட நினைவில்லாமல் செய்த அந்தச் சம்பவத்தை வீட்டுக்கு வந்த பிறகு நினைத்துப் பார்த்தபோது என்னால் அழாமல் இருக்க முடியவில்லை. மொட்டை மாடியில் போய் நின்று கொண்டு நெஞ்சு வெடிக்க விம்மி அலறினேன். மாலதி அழகி மட்டுமல்ல. பணக்காரியுங்கூட. அவளோடு போட்டியிட்டு நாராயணனை என்னால் எப்படி அடைய முடியும்! 'முடியாது' என்ற முடிவு என் உடலைக் குலுக்கி எடுத்தது. இப்படித் தானே மதுரம் அழுதிருப்பாள்! இப்படித்தானே கோமதி குமுறி இருப்பாள்! இதை நினைத்த போது மாலதியிடம் எனக்குக் கோபமும் வெறுப்பும் குமுறிக்கொண்டு வந்தன.

என் ஆத்திரமும் கோபமும் அவளை என்ன செய்யும்! மாலதியின் தாயார் நாராயணன் வீட்டாரிடம் கல்யாண விஷயமாகப் பேசுவதாகக் கேள்விப்பட்ட போது அருமையாகப் பாதுகாத்து வந்த ஒரு பொருளை அநியாயமாக ஒருவன் வந்து கொண்டு போகும் போது ஏற்படும் உணர்ச்சி தான் எனக்கு ஏற்பட்டது.

என் வயது என் பருவத்தைக் கண்ணாடியாக்கி என்னை இனி கன்னியாக வைத்திருக்கக் கூடாது என்பதை என் பெற்றோர்களுக்குக் காட்டிக் கொண்டிருந்தது. அப்பா எனக்கு வரன் தேட ஆரம்பித்தார். நான் எப்படி வேண்டாமென்பது! என் ஆசை ஏமாற்றமாகி நெஞ்சிலே நெருப்பாக எரிந்து கொண்டிருந்தது.

என் அப்பா தனக்குச் சகல விதத்திலும் திருப்தியான ஒரு வரனை நிச்சயித்துக் கொண்டு வந்தார்.



லௌகிக விஷயமாக அவர்களுடன் அப்பா பேசிக் கொண்டிருக்கும் போதுதான் நான் நினைக்காத செய்தி வந்தது. அதை எங்கள் வீட்டுக்கு வேலைக்காரி கொண்டு வந்தாள். 'மாலதி அன்று காலையில் தன் தாயாருடன் சென்னைக்குக் கிளம்பி விட்டாள். நிரந்தரமாகச் சென்னையில் வசிப்பதுதான் அவள் தீர்மானமான முடிவு' என்பதுதான் அந்தச் செய்தி. என்னால் அந்தச் செய்தியை நம்பவே முடியவில்லை. தவித்துப் போனேன். அவளைக் குடைந்து குடைந்து கேள்விகளை அடுக்கினேன்.

"சாமான்களைத் தூக்கிக்கிட்டு நானே ரயிலடிக்குப் போனேன், அம்மா!" என்று அவள் உறுதியாகச் சொல்லவே என் உற்சாகம் அதிகரித்தது.

உள்ளே வந்து அப்பாவிடம், "ஏன் அப்பா! நம் மேலத் தெரு பார்வதி மாமியின் பெண்ணைப் பாருங்களேன்!" என்று கொஞ்சமும் வெட்கமின்றிக் கேட்டு விட்டேன்.

"யாரு நாராயணையா! அவனுக்குத்தான் மாடிவீட்டுப் பெண் மாலதியைப் பார்க்கிறார்கள் போலிருக்கிறதே!" என்று என்னைப் பார்க்காமலே சொன்ன அவரிடம், "அதெல்லாமில்லையப்பா... மாலதி இந்த ஊரை விட்டே போய் விட்டாளாம். தெரியாதா, உனக்கு!" என்றேன். அந்தச் செய்தி அவரையும் திகைக்க வைத்தது. திடீரென்று அப்படி மாலதி ஊரை விட்டே போனதற்குக் காரணத்தைக் கற்பனை செய்வதில் ஊரார் முனைந்திருந்தார்கள். நான் எனக்கும் அவருக்கும் வைத்திருக்கும் முகூர்த்த நாளை எதிர்பார்த்து, இடையே ஆமை போல நகர்ந்து கொண்டிருந்த நாட்களை எண்ணி எண்ணிச் சலித்துக் கொண்டிருந்தேன்.

நான் அந்தச் சித்திரையில் அவருக்கு மாலையிட்டேன். என் எண்ணத்தை ஈடேற வைத்தவள் அந்த ஈசுவரிதான் என்பது இன்னமும் என் எண்ணம். உண்மையான காதல் வெற்றியடைந்தது என்பது என் முடிவு. நான் அவரிடம் மாலதியைப் பற்றி இன்றுவரை கேட்டதே இல்லை. அவரும் அவளைப் பற்றித் தன் மனது அவளிடம் திரும்பியதைப் பற்றிச் சொன்னதில்லை.

நான் அவர் மனைவியான சில நாளைக்கெல்லாம் மாலதியைப் பற்றிய செய்திகள் மெள்ள மெள்ள வர ஆரம்பித்தன. அவள் சென்னையில் யாரோ ஒரு வயதான புரோபசருக்கு இளையாளாக வாழ்க்கைப் பட்டு விட்டதாயும் அவர்கள் சந்தோஷமாக இருப்பதாயும் சொல்லிக் கொண்டார்கள்.

வருஷங்கள் ஓடிக் கொண்டிருந்தன. எங்கள் இன்ப வாழ்வின் அடையாளமாக நான் நான்கு குழந்தைகளுக்குத் தாயாராகி விட்டேன். இடையே மடிந்த அந்தப் பத்து வருஷங்கள் மாலதியிடமும் எவ்வளவோ மாறுதலை உண்டாக்கி விட்டன. ஏழெட்டு வருஷ வாழ்விற்குப் பிறகு மாலதியின் கணவர் ஹிருதய நோயால் இறந்து போனார். அதற்கு முன்பே அவளுக்கு ஒரே ஆதரவான தாயாரும் காலமாகி விட்டாள். அவள் அழகை அழித்து வயதுக்கு அதிகமான முதுமையை அவளிடம் கொட்டி வழிய விட்டிருந்தது காலம்.

கடைசியாக மாலதி, கன்னிப் பெண்ணாக ஊரை விட்டுப் போன அழகி மாலதி, கைம்பெண்ணைப் பார்க்கப் பரிதாபமான தோற்றத்துடன் திரும்பி வந்திருக்கிறாள். ஊரார் அவளிடம் இரக்கம் காட்டினர். ஆனால் அவள் தன் நிலைக்குக் கலங்கவில்லை. அவளைப் புரிந்துகொள்ள முடியாதபடி இருந்தது அவளது செய்கைகள். யாருடனும் அவள் பேசுவதில்லை. அவள் தோற்றம் அவள் நல்ல வாழ்வு வாழவில்லை என்பதைச் சொல்லிக் கொண்டிருந்தது.

என் கணவர் அவள் வருகையைப் பற்றி ஒன்றும் பிரஸ்தாபிக்கவில்லை. நானும் பேசவில்லை. ஆனால் அவள் நினைவு மட்டும் என் நெஞ்சிலே காரணமற்ற ஒரு திகிலைக் கொடுத்துக் கொண்டிருந்தது. அதனால்தானோ என்னவோ அவளை நான் நேருக்கு நேர் சந்திக்க விரும்பவில்லை. ஆனால் அவளே என்னைத் தேடி வந்தபோது...!


அன்று சாயந்திரம் என் கடைசிக் குழந்தைகள் இரண்டையும் கூட்டிக் கொண்டு ஆற்றங்கரைக்குப் போனேன். கோடைக் காலங்களில் ஆற்று மணலில் குழந்தைகள் விளையாடும். நான் காற்றாட அவைகள் விளையாடுவதைப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருப்பேன். என்னைப்போலவே இன்னும் சிலரும் தங்கள் குழந்தைகளுடன் மாலைப் பொழுதைக் கழிக்க ஆற்று மணலுக்கு வருவார்கள். பேச்சுத் துணை ஏற்படும். அன்று என்னவோ சோதனை போல யாரையுமே காணோம். லீலாவும், சேகரும் மணலால் கோட்டை கட்டி விளையாட ஆரம்பித்து விட்டார்கள். நான் ஏதோ ஒரு பாட்டை முனங்கியபடி மணலில் ஒரு பக்கமாகச் சாய்ந்து படுத்துக் கொண்டிருந்தேன். அப்போது என் பின்னால் மணலில் கால் பதியும் சப்தம் கேட்டது. திரும்பினேன். வியப்பு என் விழிகளை விசாலமாக்கியது. மாலதி என் அருகில் நின்று கொண்டிருந்தாள்.

"என்ன சரளா, ஸௌக்யமா! கண்ணிலேயே காணோமே!" என்று அவளே பேசினாள்.

"ஓ......மாலதியா! வாம்மா...நீ வந்திருக்கிறதாகக் கேள்விப்பட்டேன். வந்து பார்க்கணும் என்கிறது. எங்கேடியம்மா ஒழிகிறது!"

நான் சொன்னது எவ்வளவு பெரிய பொய் என்பதை நினைத்து என் மனமே சிரித்தது. அவளை நான் பார்க்கவே விரும்பவில்லை. என்னையும் அவள் பார்க்காமல் பேசாமல் போயிருக்கக் கூடாதா





''பாகவதர் கஷ்டமான ராகங்களையெல்லாம் எவ்வளவு கஷ்டப்பட்டுப் பாடுகிறார், பார்த்தீர்களா ?''

''ஆமாம். ஆமாம்! கேட்பதற்கும் கஷ்டமாகத்தான் இருக்கிறது!''

என்றுதான் நினைத்தேன். மாலதி என் அருகில் உட்கார்ந்தாள். சாயம்போன ஒரு புடவையை உடுத்தியிருந்தாள். அதுவும் சுத்தமாக இல்லை. ஆனால் அந்தக் கண்ணில் அவளோடு பிறந்த அந்த அசாதாரணமான ஒளி மட்டும் மாறவில்லை. ஆனால் முன்பிருந்த குழைவும் ஒய்யாரமும் அதில் இல்லை. அவள் பார்வை இப்போது பார்க்கப் பயமாக இருந்தது. ஊராரின் வதந்தியைப் போல மாலதிக்கு நிஜமாகவே பைத்தியமோ என்று நினைக்குமளவுக்கு என் நினைவு நீண்டுவிட்டது.

'' உன் குழந்தைகளா, சரஸா ! எத்தனை குழந்தைகள் உனக்கு !'' என்றாள் விளையாடிக் கொண்டிருந்த என் செல்வங்களைப் பார்த்து.

'' ஆமாம்...நாலு குழந்தைகள் எனக்கு. பெரியவன் பந்தாடப் போயிருக்கிறான். இரண்டாமவன் வீட்டிலே இருக்கிறான்.''

'' சரஸா...குழந்தைகளைக் கூப்பிடேன். அதுகளோடு பேசணும் போல் இருக்கிறது '' என்றாள் மாலதி. அவளது அந்த விநோதமான ஆசை எனக்கு என்னவோ போலிருந்தது. முடியாது என்று எப்படிச் சொல்வது !

'' சேகர்...சேகர்...லீலா...வா, அம்மா ! இந்த மாமி உங்களைப் பார்க்கணும் என்கிறாள். ஓடிவா, பார்க்கலாம்'' என்று கூப்பிட்டேன் என் குழந்தைகளை. தங்களைப் பாதி விளையாட்டில் கூப்பிட்ட குறையோடு அவர்களும் வந்து நின்றார்கள்.

'' 'நமஸ்தே' சொல்லும்மா மாமிக்கு, லீலா '' என்றேன் நான். குழந்தைகளும் வெட்கத்துடன் '' நமஸ்தே '' என்றனர். என் குழந்தைகளின் திறமையை வெளிப்படுத்தியதில் எனக்குப் பெருமையாக இருந்தது.

'' உன் பேரு என்ன, பாப்பா......இங்கே வா !'' என்று கையை நீட்டினாள் மாலதி லீலாவிடம். லீலா கட்டை விரலைச் சுவைத்துக் கொண்டே மாலதியைப் பார்த்தபடி விலகி நின்றாள்.

'' உனக்கு என்ன வயசுடா, பையா !'' என்றாள் சேகரைப் பார்த்து. சேகர் டிராயரில் கையைப் போட்டுக் கொண்டு விறைப்பாக நின்றான். அவனுக்கு அவளைப் பிடிக்கவில்லை என்பதை அவன் பார்வையே தெளிவாகச் சொல்லிற்று.

'' சொல்லேன்டா...உன் வயசு என்ன என்று தெரியாதா, உனக்கு !'' என்றேன் நான் குரலைச் சற்றுக் கடுமையாக்கிக் கொண்டு.

'' பரவாயில்லை, சரஸா......நான் புது மனுஷி இல்லையா ! சங்கோசப்படுகிறது குழந்தைகள். நீங்கள் விளையாடப் போங்கள் '' என்றாள் மாலதி. சேகரும் லீலாவும் குதித்துக் கொண்டு விளையாடப் போனார்கள். மாலதியிடம் நான் தனியாக அகப்பட்டுக் கொண்டேன்.

'' அழகான குழந்தைகள் ! சமர்த்தாக இருக்கின்றன. உன் குழந்தைகளிடம் நீ பிரியமாக இருப்பாய், இல்லையா !''

'' எந்தத் தாயார்தான் தன் குழந்தைகளிடம் அன்பாக இருக்க மாட்டாள்! இது என்ன கோமாளிக் கேள்வி!''—என் வெறுப்பை வார்த்தைகளால் வெளியாக்கினேன்.

''அதற்குச் சொல்லவில்லை. இந்தக் குழந்தைகளை நீ நல்ல பாதையில் வளர்க்கணுமே என்கிறதுதான் என் கவலை '' என்றாள் மாலதி.

அவள் பேச்சுப் போன தோரணை......ஊரார் சொல்வது போல அவள் புத்தி ஸ்வாதீனத்தில் இல்லையோ என்று நினைக்கச் செய்தது.

'' உனக்கு என்ன கவலை !'' என்றேன்.

'' ஆமாம், பின்னே இல்லையா ! இந்தக் குழந்தைகளை உனக்குக் கொடுத்தது நான்தானே !''

எனக்கு ஆத்திரமாக வந்தது. அவள் இமையாத விழிகள் என்னை இம்சித்துக் கொண்டு அவள் கேள்விக்கு என் பதிலை எதிர் பார்த்து நின்றன.

நான் நிதானமாகப் பதில் சொன்னேன். அவளிடம் பேச்சை வளர்க்க விரும்பாமல், '' உண்மைதான், மாலதி...என் கணவர் உன்னை மணக்கச் சம்மதித்திருந்தால் இந்தக் குழந்தைகள் உன்னுடையவைகளாக இருக்கும் '' என்றேன்.

'' சம்மதித்திருந்தாலா!'' என் பேச்சை வெட்டிக் குறுக்கிட்டாள் மாலதி. '' அவர் சம்மதிக்காததினால்தான் நான் அவரை மணக்க முடியவில்லை என்பது உன் நினைப்பா, சரஸா !''

'' அந்த உண்மையைப் பற்றி ஆராய நான் இப்போது தயாராக இல்லை.'' இதைச் சொன்ன முகத்தைக் கடுகடுப்பாக்கிக் கொண்டேன்.

மாலதி கோபமடையவில்லை. '' சரஸா ! இன்றைக்கு இத்தனை வருஷங்களுக்குப் பிறகு சொல்கிறேன். நான் விரும்பியிருந்தால் எந்த நிமிஷமும் அவனை மணந்து கொண்டிருப்பேன். ஆனால் நான் என் முடிவை மாற்றிக் கொண்டு உனக்கு அவனை அளித்து விட்டு ஊரைவிட்டே போனேன். ஏன் அப்படிச் செய்தேன், தெரியுமா !'' என்றாள்.

'' இந்தக் கேள்வி போட்டு நிறுத்திய அவளைப் பார்த்தேன். அவளுடன் பேசாமல் எழுந்திருந்து போய்விடலாமா என்றுகூட நினைத்தேன்: ஆனால் அவள் முகத்தில் வழிந்த அந்தப் பரிதாபம், ஏதோ ஒரு ஆவல் என்னை எழுந்திருக்க விடாமல் செய்து கொண்டிருந்தது.

'' தெரியாதே ! ஏன் !'' என்றேன்.

'' ஏனா ! வழி வழியாக நாம் பின்னிக் கொண்டு வரும் அந்தச் சங்கிலியை அறுக்கத்தான் !''

'' என்ன சங்கிலி, மாலதி ! புரியும்படி பேசு.''

'' உள்ளத்தை இறுக்கி ஹிருதயத்தைப் பிளக்க வைக்கும் வேதனைச் சங்கிலிதான், சரஸா !''

நான் பேசவே இல்லை. ஏனென்றால் அவள் போடும் புதிர் எனக்குப் புரியவில்லை.

''என்ன என்று புரியவில்லையா, சரஸா ! உன் இன்ப வாழ்வில் உன் இளமை நினைவை மறந்துவிட்டாய். நம்மோடு விளையாடி வளர்ந்த மதுரத்தை மறந்து விட்டாயா ! அவளைக் காதலித்தவன் தனக்குச் சமதையான அந்தஸ்து இல்லை என்

# நீங்கள் வாங்கக்கூடியதே

## ஒரு நுட்பமான மினியேச்சர் காமிரா


முதலில் விலைகளை கவனியுங்கள்; இந்த 'கோடக்' மாடல்களுக்கு ஒரு நல்ல மடக்குக் காமிராவைவிட விலை அதிகமில்லை. எனினும் மிக நுட்பமாக இயங்கும் சிறு சைஸ் காமிராக்கள் இவை. அடக்கமான அளவு, எடைக் குறைவு, உபயோகத்தில் சிக்கனம், போகஸின் உன்னதம் ஆகும். இவ்வெல்லா சௌகரியங்களும் பொருந்தியவை.

உங்கள் கோடக் வியாபாரியிடம் இந்த காமிராக்களை நேரில் போய்ப்பாருங்கள்.



### கோடக் 'ரெடினெட்' காமிரா

ஷ்னிடர் 'ரியோமார்' f/4.5 கோட்டட் லென்ஸ் மற்றும் 1/300 செகண்டு வரை வேகமுள்ள, ப்ளாஷ் இணைப்புடன் கூடிய 'ப்ராண்டர்' S ஷட்டர். சிக்கனமான 'கோடக்' 135 பிலிமில் (35 mm) படமெடுக்கக்கூடியது. நெகடிவ் அளவு 24x36mm. பாதுகாப்பான கேஸுடன் விலை ரூ. 275/-



### 'ரெடினா' Ia காமிரா

விலை சகாயமான ஒரு உன்னத மினியேச்சர் காமிரா. இரண்டு வகை அதிதமான லென்ஸ்களுடன் கிடைக்கும். இரண்டும் பூச்சுள்ளவை, முற்றிலும் வர்ணத்திருத்தமுள்ளவை, முழுக்கலர் 'கோடக்ரோம்' அல்லது சாதாரண கருப்பு-வெள்ளை பிலிமில் சிறப்பான படங்கள் எடுக்கும். புதிய காம்பர் ரேபிட் ஷட்டர் 1/500 செகண்டு வேகத்திலகூட ப்ளாஷ் இணைப்புடன் இயக்கக் கூடியது. விரல் அசைப்பில் ஷட்டரை இயக்கவும் பிலிமைத் திருப்பவும் முடிவதால் இரட்டிப்பு எக்ஸ்போஷருக்கு இடமேயில்லை. நெகடிவ் அளவு 24 x 36 mm. 'ரெடினா-க்ஸெனார்' f/3.5 லென்ஸ் மற்றும் எவர்-ரெடி கேஸுடன் விலை ரூ. 370/-

'ரெடினா-க்ஸெனார்' f/2.8 லென்ஸ் மற்றும் எவர்-ரெடி கேஸுடன் விலை ரூ. 420/-

இவ்விலைகளில் விற்பனை வரி சேராது

**போகஸ் பிசகிய படங்கள் துர்லபம்**

மினியேச்சர் காமிரா லென்ஸின் போகஸ் தூரம் குறைவு அதாவது ஆழம் அதிகம். எனவே பெரிய காமிராக்களில் தென்படுவது போல் அவ்வளவாக போகஸ் பிழைகள் தெரியாது. துரிதமான செயல் படங்களுக்கு மிக உபயோகமானது.

**குறைந்த செலவில் அதிக படங்கள்**

மினியேச்சர் நெகடிவ்வுக்கு ஆகும் செலவு மிகச்சொற்பம். ஆதலால் பிலிம் வீணாகுமோ என்ற கவலை குறையும். எனவே சந்தேகத்திலுள்ள கைவிடப்பட்ட காட்சிகளைக் கூட முயற்சித்துப் பிடித்துவிடலாம்.

**வேண்டும்போதெல்லாம் உபயோகிக்கத் தயார்**

'கோடக்' மினியேச்சர் காமிராவை தூக்கிச் செல்வது மிக எளிது. ஆகையால் வேண்டும் போதெல்லாம் உபயோகிக்கத் தயாராக உங்களிடம் வைத்துக்கொள்ளலாம். அவ்விதம் சித்தமாக இருந்தால் யாருடைய கவனத்தையும் இழுக்காமல் தத்ரூபமான அரிய ஸ்னாப்புகள் பிடித்துவிடக்கூடும்.



உங்கள் கோடக் வியாபாரியை இன்றே போய்ப்பாருங்கள்

## கோடக் லிட்

(இங்கிலாந்தில் இணைக்கப்பெற்றது)

பம்பாய் — கல்கத்தா — டில்லி — மதராஸ்

K. 7702 (A)

# சௌகரியமே குழந்தைக்கு திருப்தி




………அதனால்தான் விவேகமுள்ள தாய்மார்கள் தங்கள் குழந்தையின் தளிர்மேனியை அரிச்சலன்றிப் பாதுகாக்க கால்கேட் போரேட்டட் பேபி பவுடரை உபயோகிக்கிறார்கள். மிக மெல்லிய மேனிக்கும் இதம் அளிப்பதற்காக விஞ்ஞான முறையில் தயாரிக்கப்பெற்றது … புண்படுத்தும் உஷ்ணம் தாக்காமல் தடுக்கிறது; குழந்தை நாள் முழுதும் ஜிலுஜிலுவென்று சௌகரியமாய் இருக்க உதவுகிறது. இதன் மெல்லிய நறுமணம் உங்களையும் குழந்தையையும் கவர்ந்திடும்.

## கால்கேட்
### போரேட்டட் பேபி பவுடர்

பணம் மிச்சம் — ஜயன்ட் சைஸ் வாங்குங்கள்



## தி பாவுஸேரி பெனிபிட் சிட் பண்டு லிட்.

(இந்தியாவில் ஸ்தாபிக்கப்பட்டது)
3, சிங்கராச்சாரி தெரு, திருவல்லிக்கேணி
தபால் பெட்டி நெ. 414 - மதராஸ்-5
தந்தி: 'LVEZMENS' .... போன்: 85834



| வகுப்பு | மாதச் சந்தா | சீட்டின் மதிப்பு |
|---|---|---|
| B | ரூ. 100/- | ரூ. 2500/- |
| C | ரூ. 50/- | ரூ. 1250/- |
| D | ரூ. 25/- | ரூ. 625/- |
| E | ரூ. 20/- | ரூ. 500/- |
| F | ரூ. 15/- | ரூ. 375/- |
| G | ரூ. 10/- | ரூ. 250/- |

25 மாதங்கள்—25 மெம்பர்கள்

வாழ்க்கையில் வதைக்கும் முட்டுகளைக் களைந்தெறிய நம் முன்னோர்கள் நமக்கு காட்டிச் சென்ற வழி — சீட்டு முறையே.
இருண்ட எதிர்கால சூழ்நிலை எதிர்த்து நிற்கையில் எண்ணிறந்த மக்களுக்கு உவகையூட்டி இன்பம் தந்து வரும்

### எங்கள் மாதாந்திர சீட்டு வகைகள்

எழில்மிகும் ஏப்ரல் மாத சீட்டு வரிசை

| சேரக் கடைசி தேதி | 3-வது வெள்ளி | முதல் ஏலத் தேதி |
|---|---|---|
| 15—4—53 | ஏலங்கள் | 17—4—53 |

ரூ. 25க்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் இந்தியாவிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட பாங்குகளின் செக் பெற்றுக்கொள்ளப்படும். அதற்குக் குறைந்த தொகைகளை மணியார்டர் அல்லது இந்தியன் போஸ்டல் ஆர்டர் மூலம் அனுப்பலாம். வேண்டுவோருக்கு இலவசமாக நிபந்தனைகளும் விண்ணப்ப பாரங்களும் அனுப்பப்படும். சீராகச் சேமிப்பதற்கு உங்களுக்குப் பயிற்சி அளிக்கிறோம்.

ஆபீஸ் நேரம்: காலை: 9-12 மணி. மாலை: 2-5 மணி.

(போர்டார் உத்திரவுப்படி) எம். வி. சுப்ரமணியம், மானேஜிங் டைரக்டர்

பதற்காக அவளைத் தவிக்க விட்டு வேறு ஒருத்தியை மணந்து கொண்டான். மதுரம் இங்கு வந்து கோமதியின் உள்ளத்தை வேக வைத்து விட்டு அவள் மணக்க இருந்த ராமநாதனைப் பிடுங்கிக் கொண்டாள். ஞாபகமிருக்கிறதா! கோமதி என்ன செய்தாள்! என் கனவுகளைச் சிதறடித்து விட்டு நான் காதலித்த ரகுபதியை என்னிடமிருந்து எடுத்துக் கொண்டாள். நான் என்ன செய்ய வேண்டும்! ஒருவர் உள்ளத்தை மற்றவர் உடைத்து, ஆசைகளை அறுத்து விட்டுத் தான் வாழ நினைக்கும் வழி வழியான வழக்கப்படி நான் என் பழியைத் தீர்த்துக் கொள்ள, என் முறைக்கு உன்னிடமிருந்து நாராயணனைப் பிரிக்க வேண்டும். இல்லையா!'' அசாதாரணமான ஒரு வேகம் அவள் கண்களில் ஒளி வீசிக் கொண்டிருந்தது. நான் பிரமை பிடித்துப் போய் உட்கார்ந்திருந்தேன், அவள் கண்களில் என் பார்வையைச் சிக்கவிட்டபடி.

''நீ நாராயணனை மனதார விரும்பினாய். அவன் நினைவிலே மயங்கிக் கிடந்தாய். நான் அவனைக் காதலிக்கவில்லை. என்னைவிட நீ அவனுக்கு ஏற்ற மனைவியாக வாழ முடியும். ஆனால் நான் அதை எல்லாம் நினைக்க வேண்டியதென்ன! நான் விரும்பியது எனக்குக் கிடைக்கவில்லை. ஆகவே, உன் உடைமையை எனதாக்கிக் கொண்டிருக்கலாம். அதுதான் வழக்கமாக நடந்திருக்கிறது!''

எனக்கு நடுக்கமாக இருந்தது. அவளிடமிருந்து விடுபட நினைத்தேன். ''மாலதி! இதெல்லாம் எதற்கு! பழைய கதையை இப்போது ஏன் நினைக்கணும்!'' என்றேன்.

''என் கேள்விக்குப் பதில் சொல்லு!'' என்னை அதட்டினாள் தன் பார்வையால். ''அது தானே நம் ■■க் வழக்கமாக இருந்து வந்தது!''

''ஆமாம்...'' என்றேன் பயந்தபடி.

''பின் ஏன் நான் அப்படிச் செய்யாமல் உனக்கு உன் கணவனைக் கொடுத்தேன்!'' விரக்தியான ஒரு ஏளனச் சிரிப்பு அவள் மெல்லிய உதட்டில் நகர்ந்தது. ''அந்த மாதிரி வாழ நான் விரும்பவில்லை. அதனால்தான்......'' என்றாள்.

''இந்த உலகத்தை உன்னால் திருத்திவிட முடியாது, மாலதி!'' என்றேன் நான் துணிவுடன்.

''முடியும். நான் திருத்தினேன். இந்த உலகம் நம்மை விட்டு வேறு எங்கும் வெகு தூரத்தில் இருக்கவில்லை. உலகம் நாம்தான். நம்மைப்போல் பல லக்ஷம் உள்ளங்கள் கொண்டதுதான். உலகம் கெட்டது என்று சொன்னால் அதற்குக் காரணம் நாம் கெட்டவர்களாக இருப்பதினால்தான், சரஸா! இதை நீ நினைத்ததுண்டா!'' இதைச் சொல்லிக் கொண்டே மாலதி எழுந்து நின்றாள். தலையை நிமிர்த்தி மேடைப் பிரசங்கிபோல என்னைப் பார்த்து—இல்லை—தன் முன்னே ஒரு பெரிய கூட்டமே கூடி விருந்து கேட்பதுபோல நினைத்துக் கொண்டு பேச ஆரம்பித்தாள்.

''இந்தக் கொடுமை எங்காவது முற்றுப்பெற வேண்டும் என்று நினைத்தேன். என்னால் அது முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு விட்டது. நான் அதற்காகக் கர்வப்படுகிறேன், சரஸா!'' என்றாள்.

அவளைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. தன் காதல் நிறைவேறுததினால் ஏற்பட்ட மனப் போராட்டத்தில் பைத்தியக்காரத்தனமான முடிவுக்கு வந்து யாரையோ மணந்து வாழ்வைத் துன்பத்தின் வடுக்களால் விகாரமாக்கிக் கொண்டு வேதனைப் படும் அவளைப் பார்க்க. அவள் நிராசைச் சிரிப்பைப் பார்க்க என்னால் முடியவில்லை.

''மாலதி! இருட்டி விட்டது. குழந்தைகளைக் கூட்டிக் கொண்டு நான் வீட்டுக்குப் போக வேண்டும். நான் வருகிறேன்'' என்று கிளம்பின என்னைத் தடுத்து நிறுத்தினாள்.

''நில், சரஸா! உன் குழந்தைகளுக்கு நான் சொன்னதைக் கற்றுக் கொடு. ஒரு விஷயத்தை நாம் உணர்ந்து கொண்டு என்ன பயன்! பிறர் மூலம் அதைப் பரப்பினாலல்லவா பயன் பெறலாம். என் உபதேசம் இதுதான்: பிறர் வேதனையில், பிறர் கஷ்டத்தில் தன் வாழ்வை உருவாக்கிக் கொள்வது மகத்தான பாபம். சரஸா! ஹிருதயத்தைப் பிளக்கும் அந்தச் சங்கிலியைத் தொடர விடாமல் உதவச் சொல், உன் குழந்தைகளை. இந்தச் சனி காதலில் மட்டுமல்ல; வியாபாரத்தில், நட்பில் எதிலும்தான்.''


என் தவிப்பு தாங்க முடியாததாகி விட்டது. ''சரி, மாலதி! அப்படியே செய்கிறேன். எனக்கு நேரமாகி விட்டது. நான் வருகிறேன்'' என்று கூறிவிட்டு வேகமாகக் குழந்தைகளை நோக்கி நடந்தேன். அவள் அங்கேயே அப்படியே சிலையாக நின்று கொண்டிருந்தாள். இலேசாக அவள் உடல் ஆடிக் கொண்டிருந்தது.

வழி நெடுக, 'அவள் பைத்தியமா! அவள் சித்தம் குழம்பி விட்டதா!' என்று கேட்டுக் கொண்டே நடந்தேன். சிக்கிக்கச் சிக்கிக்க அவள் பேச்சில் ஒரு மயக்கம் இருப்பதை உணர்ந்தேன். என் கணவர் எனக்குக் கிடைக்க மாட்டார் என்ற நிலையில் நான் பட்ட வேதனையை நினைத்துப் பார்த்தேன். மாலதியின் தியாகம் புனிதமானதாக, போற்றக் கூடியதாக என் உள்ளத்திலே உருப்பெற்றது. அவள்தானே எனக்கு வாழ்வளித்தவள்!

மாலதிக்குப் பைத்தியம் பிடித்திருப்பதாக எல்லோரும் சொல்லிக் கொண்டார்கள். ஆனால் என் உள்ளம் அதை ஏற்கவில்லை. மாலதி பைத்தியம் இல்லை. இந்த உலகம் தான் பைத்தியம்! என் மட்டில் அவள் தியாகி.

ஹிருதயத்தைப் பிளக்கும் அந்தச் சங்கிலித் தொடரைப் பற்றி அவள் செய்த உபதேசம் எனக்கு இன்னமும் புரியவில்லை.

உங்களுக்காவது புரிகிறதா!



''இவன் என் பேரன்! என்ன பேச்சுப் பேசுகிறான் என்கிறீர்கள்! இவனுக்குத் தெரியாதது ஒன்றும் கிடையாது!''

''ஓ! அப்படியா? ஆந்திரப் பிரிவினையைப் பற்றி இவன் என்ன சொல்கிறான்?''

# பஞ்சம் அறியாத பாலி மக்கள்!

ஸ்ரீமதி. லோகநாதன்

நான் என் கணவருடன் இதற்கு முன் அநேக தேசங்களுக்குப் போயிருக்கிறேன்; பலவிதமான காட்சிகளையும் பார்த்திருக்கிறேன். ஆனால், இந்தோனேஷியாவில் நான் கண்ட அற்புதக் காட்சிகள் என்னைப் பிரமிக்க வைத்து விட்டன.

நாங்கள் பாங்காக்கிலிருந்து புறப்பட்டுச் சிங்கப்பூர் போய்ச் சேர்ந்தோம். அங்கு இரவு தங்கி விட்டு, அங்கிருந்து இந்தோனேஷியாவின் தலைநகரான ஜாகர்த்தாவுக்குப் போனோம். அங்கு இரண்டு நாள் தங்கிய பின் ரஸ்தா மார்க்கமாய் நூற்றிருபது மைல் தூரத்திலுள்ள பெண்டுங் நகரை அடைந்தோம். பெண்டுங்கிலிருந்து பிறகு நாங்கள் லெம்பாங் நகருக்குச் சென்றோம். போகும் வழியெல்லாம் ஓரே பசுமையான நெல் வயல்கள் கண்களைக் கவர்ந்தன. இதைத் தவிர அங்கு முட்டைகோஸ், உருளைக் கிழங்கு, காலிபிளவர், கியாரெட்டு போன்ற கறி காய் வகைகள் ஏராளமான அளவில் விளைகின்றன. நம் சென்னை மாகாணத்தில் ஒரு பெங்களூர்க் கத்திரிக்காயின் விலை இரண்டு அணாவாக இருக்கிறது. ஆனால் அந்த ஊரில் 100 கத்திரிக்காய்களின் விலை ஒரு ரூபாய்தான்! இதைப் போலவே மற்ற உணவுச் சாதனங்களும் மிகவும் மலிவாக இருக்கின்றன.

லெம்பாங் நகர் பெண்டுங்கிலிருந்து இருபத்தைந்து மைல் தூரத்தில் இருக்கிறது. அந்த இடம் மலைகளும் பள்ளத்தாக்குகளுமாக எங்கு பார்த்தாலும் ரம்மியமாக இருக்கிறது. மலைச் சரிவுகளில்கூட நெல் வயல்கள் அமைந்துள்ளன. சிறந்த நீர்ப்பாசன வசதி இருப்பதால், வருஷம் முழுவதும் ஓய்வின்றி நாற்று நடுகிறார்கள். வருஷம் முழுதும் அறுவடையும் நடை பெறுகிறது.

லெம்பாங்கில் கைத்தொழில் பொருள் காட்சி ஒன்றைத் திறந்து வைக்குமாறு எங்களை அதிகாரிகள் அன்புடன் அழைத்தார்கள். நானும் என் கணவரும் போனோம். கவர்னர், மந்திரிகள் உள்பட எல்லாப் பிரமுகர்களும் வந்திருந்து உபசரித்து வரவேற்றார்கள்.

திறப்பு விழா முடிந்ததும் எனக்கும் என் கணவருக்கும் கவர்னர் வீட்டில் விருந்து நடந்தது. அவர்கள் மிகவும் அன்பாக நடந்துகொண்டார்கள். அவர்களிடையே சிறிதும் ஆடம்பரம் கிடையாது. பெண்கள் கூட நகை உடை விஷயத்தில் ஆடம்பரமற்றவர்களாகவே இருக்கிறார்கள்.

அங்கிருந்து புறப்பட்டு நாங்கள் பாலிக்குச் சென்றோம். பாலியில் உள்ள ஹோட்டலில் எங்கள் ஜாகை வசதிக்கு முதலிலேயே ஏற்பாடு செய்திருந்தார்கள். அங்கு ஹோட்டலில் அறைகளைப் பூட்டும் வழக்கமில்லை! திருட்டுப் பயம் இராததே அதற்குக் காரணம் என்று அங்குள்ளவர்கள் சொன்னார்கள்.

இரவு சாப்பாட்டுக்குப் பிறகு பாலி நடனம் என்று உலகப் பிரசித்தி பெற்ற அந்த ஊர் நடனத்துக்குச் சென்றோம். எங்களுக்காகவே மேற்படி நடனத்துக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். டிக்கெட் கிடையாது. யாரும் வரலாம். அதனால் அன்று ஆறு மணி முதல் அந்த ஊர்க் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை சகலரும் அங்கு வந்து உட்கார்ந்து விட்டார்கள். அது அசல் இந்தியக் கிராமம் மாதிரி இருந்தது. நடனம் மிகவும் நன்றாக இருந்தது. ராமாயணத்தையே நடனமாகச் செய்து காட்டினார்கள். சுக்ரீவன்-வாலி சம்வாதங்கள் எல்லாம் சிலாக்கியமாக இருந்தன. பக்க வாத்தியம் எல்லாம் நமது ஊரில் இருப்பதைப்போல் ஜலதரங்கம், மத்தளம், ஜாலரா இவைதான். தாளம் மிகவும் சுத்தமாய் இருந்தது. பாலியில் பெண்கள் உள்பட சகலரும் இடுப்பில் நாலு முழத்தில் லுங்கி மாத்திரமே அணிந்து கொண்டிருக்கிறார்கள். சாப்பிடுவதற்கு வேண்டிய அளவு அரிசி, சோளம், கிழங்கு, தேங்காய், வாழைப் பழம், இதுபோல் வேண்டிய பொருள்கள் அவர்களுக்குக் கிடைக்கின்றன. எனவே அவர்களுக்குப் பஞ்சம் என்றால் என்ன என்பதே தெரியாது!

பாலியில், நமது ஊர்க் கோவிலைப் போல் பிரும்மா, விஷ்ணு, சிவன், கணேசர் எல்லா விக்ரகங்களும் வைத்திருக்கிறார்கள். சுவர் முழுதும் ராமாயண, பாரதக் கதைகள் எழுதப் பட்டிருக்கின்றன.

பாலிப் பிரதேசத்தில் இன்னும் நவீன நாகரிகம் ஊடுருவவில்லை. எனவே அங்குள்ளவர்கள் யந்திர வகைகளின் உதவியை நாடாமலே தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்கிறார்கள்.



வீர அர்ஜுனன்

# B.I.S.N. CO. LTD.

சென்னை - நாகப்பட்டினம் - பினங்கு - சிங்கப்பூர்

## S. S. "ரஜுலா"

சென்னை புறப்படும் தேதி — 1953 ஏப்ரல் 12உ.
நாகப்பட்டினம் புறப்படும் தேதி — 1953 ஏப்ரல் 13உ.

கப்பல் புறப்படும் தேதியன்று காலை 6 மணிக்கு மேல் சாமான்கள் ஏற்றப்பட மாட்டாது.
கப்பலேறுவதற்கான ஏற்பாடுகள்:

சென்னையிலிருந்து 12-4-53: *பெர்த் வசதியற்ற பிரயாணிகள் காலை 8 மணிக்கும் ஸலூன் பிரயாணிகள் வைத்திய பரிசோதனைக்கும், கப்பலில் ஏறுவதற்கும் பகல் 12 மணி முதல் பகல் 1 மணிக்கு மேற்படாமல் வந்துவிட வேண்டும்.*

நாகப்பட்டினத்திலிருந்து 13-4-53: *பெர்த் வசதியற்ற டிக்கட்டுள்ளோர் காலை 6 மணிக்கும், ஸலூன் டிக்கட் உள்ளவர்கள் 8 மணிக்கும் கப்பலேறலாம்.*

*சென்னையில் ஏறும் பிரயாணிகள் 12-4-53 பகல் 1 மணிக்கு மேல் வந்தால் வைத்திய பரிசோதனைக்கு தாமதமாகி விடும். ஆகையால் அவர்கள் கப்பலேற முடியாது.*

*பினங்கு, சிங்கப்பூர் துறைமுக சுகாதார விதிகளை அனுசரிக்க வேண்டி விருப்ப நால் எல்லா பிரயாணிகளும் சர்வதேச சுகாதார விதிகளின்படி அமைந்த பாரத்தில் அம்மை குத்தியதற்கான சர்டிபிகேட்டும், காலரா எதிர்ப்பு இனாகுலேஷன் செய்ததற் கான சர்டிபிகேட்டும் பெற்று, ஒரு சர்க்கார் அல்லது முனிஸிபல் ஹெல்த் ஆபீஸரின் அத்தாட்சியுடன் செல்லும்படியாகக் கூடிய நிலையில் கொண்டுவர வேண்டும்.*

| | |
|---|---|
| பின்னி & கோ., (மதராஸ்) லிமிடெட் | மதுரா கம்பெனி லிமிடெட் |
| 7, அரமனைக்காரத் தெரு, மதராஸ் | முதல் லைன் பீச்ரோடு, நாகப்பட்டினம் |

# பருக்களும் விகாரமான சருமமும் 24 மணி நேரத்தில் குணமடைகிறது


நிக்ஸோடெர்ம் (Nixoderm) கண்டு பிடித்தது முதல் யாரும் எக்ஸிமா, பரு, ரத்தக் கட்டி ஆகிய சரும வியாதிகளால் அவதியுறவும், உங்களுக்கும் பிறருக்கும் வெறுப்பு ஏற்படவும் வேண்டாம். ரஸாயன முறையில் தயாரித்த நிக்ஸோடெர்ம் (Nixoderm) உதவியால் சருமத்தை சுத்தமாக்குங்கள். அனுயாசமாக வைத்துக்கொண்டு பிறர் உங்களை வியாதியஸ்தரெனக் கருத இடம் தராதீர்.

### ஒரு புதிய சாதனம்

நிக்ஸோடெர்ம் (Nixoderm) ஒரு புதிய களிம்பு. ஆனால் நீங்கள் உபயோகித்த இதர களிம்பைப் போன்றதல்ல. பிசுக்கற்றது. மேலே தடவும் போதே ஒரு பவுடரைப்போல உணருவீர்கள். சருமத் துவாரங்களினூடே சென்று வியாதிக்கு மூலமான இடத்தை தாக்குகிறது. நிக்ஸோடெர்ம் (Nixoderm) மூன்று வழிகளில் உபாதையைத் தாக்குகிறது: (1) நோய்க்குக் காரணமாகும் கிருமிகளைக் கொல்லுகிறது. (2) அரித்து, எரிந்து வெந்து போவதை 7 முதல் 10 நிமிஷத்தில் தடுத்து சருமத்தை மென்மையாக்குகிறது. (3) இயற்கையாகவே ஆற்றி, சுத்தமாக மிருதுவாகப் பட்டுப் போல வழவழப்பாகவும் ஆக்குகிறது.

### விரைவில் பலனளிக்கிறது

சரும நோய்களை நிவர்த்திக்கவே விஞ்ஞான முறையில் தயாரான நிக்ஸோடெர்ம் (Nixoderm) மற்றதைவிட சீக்கிரம் வேலை செய்கிறது. நமைச்சல், எரிச்சலை சில நிமிஷத்தில் நிறுத்தி விரைவில் சருமத்தை சுத்தமாக ஆற்றி, மிருதுவாகவும் வழவழப்பாகவும் செய்கிறது. ஓரிரண்டு தினங்களில் கண்ணாடியில் பார்த்துக் கொள்ளுங்கள். தேடிய சஞ்சீவி—நாடிய வைத்தியம் கிடைத்ததை உணர்வீர்கள். நிக்ஸோடெர்ம் (Nixoderm) ஆயிரக்கணக்கானவர்களது சருமத்தைச் சுத்தமாக்கி



BEFORE AFTER

புஷ்டியாக்கியது. அவர்களில் ஒருவரான மிஸ்டர் R. K. கூறுகிறார். "12 வருஷமாக நமைச்சலும் எரிச்சலும் தரும் எக்ஸிமாவினால் கஷ்டப்பட்டேன். பல மருந்துகளுக்குப்பிறகு நிக்ஸோடெர்ம் (Nixoderm) உபயோகித்தேன். 10 நிமிஷத்தில் நமைச்சல் நின்று மறுநாளே சருமம் சுத்தமாகியது. என் தோற்றத்தின் மாறுதலைக் கண்ட நண்பர்கள் ஆச்சரியமடைந்தனர்."

### திருப்திக்கு உத்தரவாதம்

சருமம் திருப்தியாகாதவரை நிக்ஸோடெர்ம் (Nixoderm) மதிப்பை இழக்கிறது. இன்றே நிக்ஸோடெர்ம் (Nixoderm) வாங்குங்கள். தோற்றத்தில் ஏற்படும் அபிவிருத்தியைக் கண்ட ஆச்சரியப்படுவீர்கள். ஒரு வாரத்துக்கு உபயோகித்தால் சருமம் வழவழப்பாயும் மிருதுவாயும் சுத்தமாயும் வசீகரமாகவும் ஆவது நிச்சயம். இல்லையேல் காலிப் பெட்டியைத் திருப்பிக் கொடுத்து, கொடுத்த விலையை வாபஸ் பெறுங்கள். இன்றே நிக்ஸோடெர்ம் (Nixoderm) வாங்குங்கள். அதற்களித்த உத்தரவாதமே உங்களுக்கான உறுதி.

# ஒலிம்பியா எக்ஸ்பிரஸ்

பரிசுக்கதை: எச். ஷ்மிட் ஹென்னர் (ஜெர்மனி)

மொழிபெயர்ப்பு: வாஞ்ரீ

அப்போது சரியாக மணி 10-27. ஒலிம்பியா — ஸரியாவதா எக்ஸ்பிரஸ் ஹைவே ஜங்ஷனை நெருங்கிக் கொண்டிருந்தது.

இஞ்ஜின் டிரைவர் பிராண்ட்ஸ்ட்ராம் வண்டியின் வேகத்தைக் குறைக்கத் தொடங்கினன். அவனுக்கு உதவியாக உள்ள கரோல் வழக்கம்போல் விதிகளுக்கிணங்க 'வால்வ்' சரியாக இருக்கிறதா என்று பரிசோதித்துப் பார்த்தான். பிறகு வழக்கம்போல் தலையை வெளியே நீட்டி, பாதை சரியாக இருக்கிறதா என்று கண்காணித்தான்.

அவன் அவ்விதம் எட்டிப் பார்க்க வேண்டிய அவசியமே இல்லை. எப்போதும் பாதை யாதொரு இடையூறுமின்றிச் சரியாகத்தான் இருக்கும். அன்றும் அவ்விதம்தான் இருக்கும் என்ற எண்ணத்துடன் அவன் வெளியே நீட்டிய தலையை உள்ளே இழுத்துக் கொள்ள முற்பட்டபோது, திடீரென்று அவன் தலை சுழன்றது. மிகுந்த பீதியால் அவனது விழிகள் விரிந்தன.

ஜங்ஷனின் நடுவில், எக்ஸ்பிரஸ் போக வேண்டிய பாதையில் ஒரு குட்ஸ் ரயில் வண்டி நின்று கொண்டிருந்ததே அவனது பீதிக்குக் காரணம்.

இன்னும் ஒரு நிமிஷம் தாமதித்திருந்தால் எக்ஸ்பிரஸ் குட்ஸ் வண்டியுடன் மோதி யிருக்கும். குட்ஸ் வண்டிகள் தூள் தூளாகியிருக்கும். எக்ஸ்பிரஸ் வண்டிப் பிரயாணிகளுக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கும்.

நல்ல வேளையாக அத்தகைய விபரீதம் ஏற்படவில்லை. குட்ஸ் வண்டி ஜங்ஷனின் நடுவில் நின்றதைக் கவனித்ததும், கரோல் சிறிதும் தாமதியாமல் ஒரு வினாடியில் ஆபத்துக்கால ப்ரேக்கைப் போட்டு வண்டியைப் புது விசையின் உதவியால் அடுத்த பாதையின் பக்கம் திருப்பி விட்டான்.

அவ்விதம் செய்ததால் ஏற்பட்ட அதிர்ச்சியில் டிரைவரும் கரோலும் ஏக காலத்தில் இஞ்ஜினில் தொப்பென்று கீழே விழுந்து விட்டனர்.

கரோலின் செய்கை பிராண்ட்ஸ் ட்ராமுக்குப் புதிர்போல் இருந்தது. அவன் கரோலை வெறித்துப் பார்க்கவே, "நடுப் பாதையில் குட்ஸ் வண்டி நின்று கொண்டிருந்தது அதனால்தான்......" என்று பரபரப்புடன் கூறினன் கரோல்.

அப்போதுதான் எத்தகைய ஆபத்து கரோலின் சமயோசித நடவடிக்கையால் தவிர்க்கப் பட்டது என்பதை டிரைவர் பிராண்ட்ஸ்ட்ராம் தெரிந்து கொண்டான்.


உடனே இருவரும் எழுந்து பின்புறம் திரும்பிப் பார்த்தனர். அதிர்ஷ்டவசமாக குட்ஸ் வண்டி இருந்த இடத்திலேயே நின்று கொண்டிருந்தது.

அதே சமயம் அவர்களுக்கு அதைவிடப் பெரிய மற்றொரு அதிர்ச்சி காத்திருந்தது.

கரோல் வண்டியை வேறு பாதையில் செலுத்திய அதிர்ச்சியினுல் எக்ஸ்பிரஸ் இஞ்ஜினுக்குப் பின்புறம் பிரயாணிகள் உட்கார்ந்திருந்த வண்டிகளெல்லாம் இஞ்ஜினிலிருந்து பிய்த்துக்கொண்டு விட்டதைக் கவனித்தனர். அதன் விளைவாக, நிமிஷத்துக்கு நிமிஷம் இஞ்ஜினுக்கும் மேற்படி வண்டிகளுக்கும் இருந்த தூரம் வெகு துரிதமாக அதிகமாகிக் கொண்டே போயிற்று.

அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சியால் திக்பிரமை கொண்ட இருவரும் சிறிது நேரம் திகைத்து அப்படியே நின்று விட்டார்கள். பிரமை நீங்கியதும் பிராண்ட்ஸ்ட்ராம்





இஞ்ஜினை நிறுத்துவதற்காகப் பிரேக்கைப் போட்டான். பிரேக் பிடிக்கவில்லை. பிறகு கை பிரேக், ஆபத்துக்கால பிரேக் முதலியவற்றைப் போட்டான். துரதிர்ஷ்டவசமாக அவைகளும் பிடிக்கவில்லை.

கரோல் விழித்த கண் விழித்தபடி பரிதாபகரமாக நின்றான். பிராண்ட்ஸ்ட்ராமோ அந்தப் பேராபத்திலிருந்து தப்புவதற்கு இனி யாதொரு வழியும் இல்லை என்பதற்கு அறிகுறியாக 'கடவுளே' என்று கூறிக் கண்களை மூடிய வண்ணம் அசைவற்று நின்றான்.

கரோலுக்குத் தொண்டை அடைத்துக் கொண்டது. அவனால் பேச முடியவில்லை. கடைசியில் ஒரு வழியாகத் தன்னைச் சமாளித்துக் கொண்டு "என்ன, பிரேக்குகள் பிடிக்கவில்லையா?" என்று கேட்டான்.

"ஆமாம்" என்பதற்கு அறிகுறியாக பிராண்ட்ஸ்ட்ராம் தலையை அசைத்தான்.

"இஞ்ஜினுக்குக் கீழேயுள்ள பிரேக் யந்திரம் உடைந்து விட்டது என்று தோன்றுகிறது" என்று விளக்கினான் பிராண்ட்ஸ்ட்ராம்.

* * *

அப்போது மணி 10-35. எக்ஸ்பிரஸ் இஞ்ஜின் பறந்து கொண்டிருந்தது. நிமிஷத்துக்கு நிமிஷம் அதன் வேகம் அதிகமாகி வந்தது. வண்டியின் வேகத்தைக் காட்டும் முள் 49 மைலில் இருந்ததைப் பிராண்ட்ஸ்ட்ராம் கவனித்தான்.

இதுவரையில் அவன் இஷ்டப்படி அவனுக்குக் கட்டுப்பட்டு நடந்து கொண்ட இஞ்ஜின், தன்மீது வஞ்சம் தீர்க்க முற்பட்டிருப்பதுபோல் அவனுக்குத் தோன்றியது. அதை அடக்க, அதன் வேகத்தைக் குறைக்க அவனால் எதுவும் செய்ய முடியவில்லை.

சில நிமிஷ நேரத்தில் வேகம் அதிகமாகிக் கொண்டே போய் முன் 75 மைலில் நின்றது. சிறிது தூரத்தில் உள்ள ஓரிடத்தில் ரயில் பாதை வளைந்து செல்லுகிறது. இஞ்ஜின் அதே வேகத்தில் சென்றால் அந்த இடத்தில் இஞ்ஜின் பாதையிலிருந்து விலகி விடும். அப்போது அது வலது புறமாக விலகினால் மலைப் பாறையில் மோதிக் கொண்டு தூளாகிவிடும். இடதுபுறமாக விழுந்தால் பாதாளமான பள்ளத்தாக்கில் விழுந்து அதோகதியாக வேண்டியதுதான். எப்படி விழுந்தாலும் இனி அவர்கள் உயிர் தப்புவதற்கு வழியில்லை.

பிராண்ட்ஸ்ட்ராமும் கரோலும் ஏக காலத்தில் அவரவர் குடும்பத்தைப் பற்றிய சிந்தனைகளில் ஆழ்ந்தனர்.

கரோல் இஞ்ஜினுக்கு வெளியே பார்த்தான். மரங்களும் தந்திக் கம்பங்களும் பேரிரைச்சலுடன் அதி வேகமாகப் பறந்து சென்று கொண்டிருந்தன.

வேகத்தைக் காட்டும் முள் இப்போது 80 மைலில் நின்றது.

கரோல் பைத்தியம் பிடித்தவன் போல் ஆனான். அவன் வெளிப்புறமாகக் கையை நீட்டி உதவி புரியும்படி அலறினான்.

அவனது அலறல் யாருக்குக் கேட்கும்? அப்படியே கேட்டாலும் அந்த நிலைமையில் அவனுக்கு யார் வந்து உதவி புரிய முடியும்?

கரோல் திடீரென்று பிராண்ட்ஸ்ட்ராமை வெறிக்கப் பார்த்தான். அவனுடைய குரல் வளையை நெறிப்பதற்காகக் கைகளைக் கொண்டு போனான்.

கரோல் அவ்விதம் ஏதாவது செய்யக்கூடும் என்பது பிராண்ட்ஸ்ட்ராம் எதிர்பார்த்தது தான். உடனே அவன் ஒரே குத்தில் கரோல் குட்டிக்கரணம் போட்டுக் கொண்டு வண்டியில் விழும்படி செய்தான்.

"கோழைப் பதரே! தைரியத்தை இழப்பதால் போகப் போகும் உயிர் திரும்பி வந்து விடுமா? பேசாமல் இரு" என்று கடிந்து கொண்டான் பிராண்ட்ஸ்ட்ராம்.

இதைக் கேட்டதும் வெறி தணிந்தவன் போல் கரோல் எழுந்திருந்தான். அந்த ஆபத்தான சமயத்தில் பிராண்ட்ஸ்ட்ராமின் அமைதியும் பொறுமையும் கரோலுக்குத் தைரியத்தைக் கொடுத்தன.

நிற்காமல் போய்க் கொண்டிருக்கும் எக்ஸ்பிரஸை நிறுத்துவதற்கு ஏதாவது வழியிருக்கிறதா என்பது பற்றிப் பிராண்ட்ஸ்ட்ராம் தன் மூளையை உடைத்துக் கொண்டான். மறுபடியும் மறுபடியும் பிரேக்கைப் போட்டுப் பார்த்தான். பிரேக் சரியான நிலைமையில் இருந்தால் தானே!

ஒலிம்பியா—ஹியாவதா எக்ஸ்பிரஸ் இஞ்ஜின் ஒரு ஸ்டேஷனிலாவது நிற்கவில்லை என்ற செய்தி டெலிபோன் மூலம் ஒவ்வொரு ஸ்டேஷனுக்கும் பறந்து சென்றது.

"ஒலிம்பியா—ஹியாவதா எக்ஸ்பிரஸ் இஞ்ஜின் மாத்திரம் பிய்த்துக் கொண்டு ஒரு ஸ்டேஷனிலும் நிற்காமல் அதி வேகமாகச் சென்று வருகிறது. அதில் ஏதோ தவறு ஏற்பட்டு விட்டது. டிரைவரால் நிறுத்த முடியவில்லை என்று தோன்றுகிறது. எக்ஸ்பிரஸ் டிரைவர் கூறுவது எதுவும் காதில் கேட்கவில்லை. பாதையில் ஒரு வண்டியும் இராமல் பார்த்துக் கொள்ளுங்கள். ஜாக்கிரதை! ஜாக்கிரதை!"

இவ்விதம் ஒவ்வொரு ஸ்டேஷன் மாஸ்டரும் அடுத்த அடுத்த ஸ்டேஷனுக்கும் பரபரப்புடன் செய்தி அனுப்பிக் கொண்டிருந்தனர்.

"பிளாட்பாரத்தில் கூட ஜனங்கள் நிற்கக் கூடாது" என்றும் டெலிபோன் செய்திகள் அலறிக் கொண்டிருந்தன.

கரோல் நடுங்கிக் கொண்டே வேகத்தைக் காட்டும் முள்ளைப் பார்த்தான். அது 89 மைலில் நின்று கொண்டிருந்தது.

இஞ்ஜினில் ஆட்டம் சகிக்க முடியவில்லை. மேற்படி ஆட்டத்தில் இருவருக்கும் குடல் தெறித்து விடும்போல் தோன்றியது.

அச்சமயத்தில் பிராண்ட்ஸ்ட்ராம் சட்டைப் பையிலிருந்து ஒரு காகிதத்தை எடுத்து அதில் ஏதோ எழுதினான். அந்த ஆட்டத்தில் என்ன எழுத முடியும்? அவனுடைய மனைவிக்கு இறுதிக் கடிதம் எழுதினான் போலும்!

உடனே கரோல் தன் கால்சட்டைப் பையிலிருந்த நோட் புத்தகத்தை எடுத்து, அதிலிருந்து ஒரு தாளைக் கிழித்தான்.

"என் அன்பார்ந்த காதரைனுக்கு, நான் விடை பெற்றுக் கொள்கிறேன். என்னை மறந்து விடாதே. உன் அன்புள்ள,
கரோல்."

கரோல் மிகவும் கஷ்டப்பட்டு மேற்படி கடிதத்தை எழுதி முடித்தான். அவன் கண்களில் நீர் ததும்பியது.

இருவரும் தாங்கள் தாங்கள் எழுதிய கடிதங்களை மடித்து, வண்டிக்கு வெளியில் வீசி எறிந்தனர்.

அந்தக் கடிதங்களில் அவர்கள் தங்கள் மனைவிமாரின் விலாசத்தை எழுதியிருந்தால், அது அவர்கள் கைக்குப் போய்ச் சேர்ந்து விடும் என்ற நம்பிக்கை அவர்களுக்குப் பூரணமாக இருந்தது.

பிராண்ட்ஸ்ட்ராம் மற்றொரு காகிதத்தை எடுத்துக் கீழே வருமாறு எழுதினான்.

"பிரேக்குகள் முறிந்து விட்டன. அதனால் இஞ்ஜினை நிறுத்த முடியவில்லை. இஞ்ஜின் தொண்ணூறு மைல் வேகத்தில் சென்று வருகிறது. எங்கள் மீது எவ்விதத் தவறும் இல்லை. நாங்கள் விடை பெற்றுக் கொள்ளுகிறோம். பிராண்ட்ஸ்ட்ராம்,
ஒலிம்பியா—ஹியாவதா எக்ஸ்பிரஸ்."

ரயில்வே அதிகாரிகளுக்கு எழுதிய மேற்படி கடிதத்தையும் மடித்துப் பிராண்ட்ஸ்ட்ராம் இஞ்ஜினுக்கு வெளியே எறிந்தான்.

கரோல் மண்டியிட்டு இறைவனை வணங்க முற்பட்டான்.


ROBINSON'S
PEARL
BARLEY
சிறந்தது
சகல உபயோகங்களுக்கும்
ராபின்ஸன்ஸ் பெர்ல் பார்லி
கஞ்சி, கூழ், பாயசம், கறி, பார்லித் தண்ணீர் இவைகளுக்கு புதிய ருசிகரமான சத்துள்ள பெர்ல் பார்லி மிகச் சிறந்தது.
இப்போது எங்கும் கிடைக்கும்
அட்லாண்டிஸ் (ஈஸ்ட்) லிமிடெட்
தபால் பெட்டி 664, கல்கத்தா-1.
ARPX 1A-TM


மிருதுவான இளமைச்
சருமத்திற்கு
PALMOLIVE
PALMOLIVE
பாமோலிவ் அழகு சோப்
புஷ்பப் புதிய வாசனை • அடர்ந்த க்ரீம் நுரை • நீடித்து உழைப்பது
சோப்பு மட்டுமல்ல — ஓர் அழகு சாதனம்!

"இந்த உலகத்திலேயே இதற்கு முன் மரணத்தை நோக்கி இவ்வளவு வேகமாக யாரும் சென்றிருக்க முடியாது" என்று முணு முணுத்தான் பிராண்ட்ஸ்ட்ராம்.

அதற்கு முதல் நாள் நிகழ்ந்த ஒரு சம்பவம் அவனது ஹிருதயத்தையே பிளந்து கொண்டிருந்தது. முதல் நாள் அவன் வீட்டிலிருந்து புறப்படும்போது மனைவி அவனையே பார்த்தாள். அவன் சிறிது நேரத்துக்கு முன் அவளுடன் சச்சரவிட்டதால், அவனை ஏறெடுத்தும் பார்க்காமல் கதவைப் படீர் என்று சாத்திக் கொண்டு வந்துவிட்டான்.

ஒருநாளும் இல்லாமல் நேற்றுத்தானா அவன் மனைவியிடம் சொல்லிக் கொள்ளாமல் வரவேண்டும்? இதை நினைத்தபோது அவன் மனம் துடித்தது.

இனிமேல் அதை எண்ணி என்ன செய்வது? எந்த நிமிஷத்திலும் இஞ்ஜின் பூமியில் பாய்ந்து அவன் பலியாக நேரலாம்.

"இறக்கும்போது உன்னை நினைத்துக் கொண்டே இறந்தேன் என்று நான் உன்னிடம் சொல்ல முடியுமா?" என அவன் முணுமுணுத்தான்.

அந்த வார்த்தைகள் அவன் மனைவியின் செவிகளில் எங்கே விழப் போகின்றன?

* * *

எக்ஸ்பிரஸ் மில்வாகி சென்ட்ரல் ஸ்டேஷனைக் கடந்து சென்றது.

மேற்படி ஸ்டேஷன் மாஸ்டர் போலீஸ் ஸ்டேஷன்களுக் கெல்லாம் பரபரப்புடன் டெலிபோன் செய்தார்.

"சென்ட்ரல் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து பேசுகிறோம். ஒலிம்பியா—ஹியாவதா எக்ஸ்பிரஸ் கட்டுக்கு அடங்காமல் ஓடிக்கொண்டிருக்கிறது. பெரும் விபத்து நேரப் போகிறது. விரைந்து வாருங்கள்" என்று அலறினார் ஸ்டேஷன் மாஸ்டர்.

எந்த வினாடியிலும் மரணத்தை எதிர்பார்த்துக் கொண்டு கண்களை மூடிக்கொண்டிருந்த பிராண்ஸ்ட்ராம் மெதுவாகக் கண்களைத் திறந்தான்.

வேகத்தைக் காட்டும் முள்ளைப் பார்த்தான். அது 85 மைலில் நின்றது.

பிராண்ட்ஸ்ட்ராம் உடனே துள்ளி எழுந்தான். இதுவரையில் கண் கலங்காமலும் தைரியத்துடனும் இருந்த பிராண்ட்ஸ்ட்ராமினால் இப்போது கண்ணீரையும் விம்மலையும் அடக்க முடியவில்லை.

"கரோல்! கரோல்! வண்டியின் வேகம் குறைய ஆரம்பித்து விட்டது" என்று கூக்குரலிட்டான்.

கரோலோ, அதைக் கேட்டதும் திக்பிரமை பிடித்தவன் போல் நின்றான்.

வேகத்தைக் காட்டும் முள் 80, 70, 68, 60 என்று நகர்ந்து கொண்டிருந்தது.

"இப்போது நாம் இந்தியானா மலைச் சரிவில் ஏறி வருகிறோம். இப்படியே வேகம் குறைந்தால், நாம் அதிர்ஷ்டசாலிகள்தான்" என்றான் பிராண்ட்ஸ்ட்ராம்.

"இதுவரையில் எவ்வித விபத்தும் ஏற்படாததால், இனியும் யாதொரு விபத்துமின்றித் தப்பித்துக் கொள்ளலாம் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது" என்று தழுதழுத்த குரலில் சொன்னான் கரோல்.

வண்டியின் வேகம் குறையத் தொடங்கியதும் கரோலுக்குத் தைரியம் பிறந்து விட்டது!

வேகத்தைக் காட்டும் முள் 30-ல் நின்றது. அப்போது பிராண்ட்ஸ்ட்ராம் பின்புறமாக வெளியே பார்த்தபோது, பின் புறத்திலிருந்து ஒரு இஞ்ஜின் மேலே வேகமாக வந்து கொண்டிருந்தது தெரிந்தது.

ஒலிம்பியா எக்ஸ்பிரஸ் வண்டியின் வேகம் குறையக் குறைய, பின்புறத்தில் வந்த இஞ்ஜினின் வேகம் அதிகமாகி வந்தது.

கடைசியில் எக்ஸ்பிரஸ் நின்றதும் பின்புறமாக வந்த இஞ்ஜின் அதனுடன் மிகவும் மெதுவாக மோதியதால், இரண்டு இஞ்ஜின்களும் நின்றுவிட்டன. உதவிக்கு அந்த இஞ்ஜின் வந்திராவிடில் எக்ஸ்பிரஸ் இஞ்ஜின் பின் புறமாகக் கீழே வெகு வேகமாக இறங்கும்படி நேர்ந்திருக்கும்.

* * *

பிராண்ட்ஸ்ட்ராமும் கரோலும் அவசரம் அவசரமாகக் கீழே குதித்தனர்.

கரோல் பைத்தியம் பிடித்தவன் போல் சிரிக்கத் தொடங்கினான். பிறகு நடனம் செய்யத் தொடங்கினான்.

சில நிமிஷ நேரத்தில் அங்கு ஏராளமான ஜனங்கள் கூடி விட்டார்கள். கரோலுக்குச் சித்தப் பிரமை எதுவுமில்லை; மரணத்திலிருந்து தப்பியதால் ஏற்பட்ட சந்தோஷம் காரணமாக அவன் அப்படிக் கூத்தாடுகிறான் என்பதை அங்கு கூடியவர்கள் அறிந்து கொள்ளச் சிறிது நேரம் ஆயிற்று.

அப்போது திடீரென்று ஒருவர் அந்த இடத்தில் வந்து, கரோலின் தோளின் மேல் கையைப் போட்டுக் கொண்டு அவனை அப்பால் அழைத்துச் சென்றார்.

"இதோ இந்த ஐந்நூறு டாலரை எடுத்துக் கொள்ளுங்கள். நான் "ஈவினிங் போஸ்டு" பத்திரிகையின் நிருபர். ஒலிம்பியா எக்ஸ்பிரஸ் கட்டுக்கு அடங்காமல் போய்க் கொண்டிருந்த போது, உங்கள் மனத்தில் என்ன என்ன எண்ணங்கள் எழுந்தன என்பதைத் தாங்கள் என்னைத் தவிர வேறு யாருக்கும் கூறக்கூடாது. பிறகு இன்னும் ஐந்நூறு டாலர் தருகிறோம்" என்றார் இரகசியமாக.

அதே சமயம் கரோல் பிராண்ட்ஸ்ட்ராமைப் பார்த்தபோது, அவனையும் ஒரு நிருபர் இரகசியமாக அழைத்துச் சென்று டாலர் நோட்டுகளை அவன் கையில் திணித்ததைக் கவனித்தான்.

மரணத்திலிருந்து தப்பியதுடன், தாங்கள் பெரிய காரியத்தைச் சாதித்த வீரர்களாகக் கருதப்படுவதைக் கண்டதும் கரோலின் ஆனந்தம் எல்லை கடந்தது.



நாள் முழுவதும்
புத்துணர்ச்சி
அளிக்க...
குளுமையான நறுமணம் கொண்ட
ஹிமாலயா புக்கே
பௌடர்களை
உபயோகியுங்கள்
ஹிமாலயா புக்கே ஸ்னோ எல்லா சீதோஷ்ணநிலைகளிலும்
சருமத்தைப் பாதுகாக்கிறது.
HBP. 7-X30 TM

# விசைச் சக்தியின் வேகம்



நீங்களும் பெறுக

# வாட்டர்பரீஸ் காம்ப்பவுண்ட்





சிரமமான வேலை நிலையிலும், களைக்காது உணர்ச்சியிருக்கும் போதுதான் நீங்கள் திடமான ஆரோக்யம் உள்ளவரென்பதைக் குறிக்கும். களைக்காத உணர்ச்சி பெறுவதற்கு, பிரதி தினமும் போஜனத்தின் அங்கமாக வாட்டர்பரீஸ் காம்பவுண்ட் சாப்பிடுவதைத்தவிர சிறந்த தொன்றுமில்லை. தேக வலுவூட்டுவதற்கு அத்யாவசியமான பொருள்கள் நிறைந்த வாட்டர்பரீஸ் காம்பவுண்ட். வேலை செய்வதற்கான திராணியை பெருக்கி, சோர்வு, ஜலதோஷம், இருமல் மற்றும் இதர நிலைமைகளுக்கு இடங்கொடாதபடி தேகத்திற்கு எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கச் செய்யும்.
உங்கள் குடும்பம் முழுவதற்கும் இப்பொழுதே வாங்கி விடுங்கள்

*தயவுசெய்து கவனிக்கவும் :*

பக்கப் படத்தில் காட்டியுள்ள லேபிளில் சிறிது மாறுதல், தற்போது செய்யப் பட்டுள்ளது. மாறுதல் செய்யப்பட்டுள்ள லேபிளில் ஒரு ஜோடி கிளாஸ் டோர்ட்கள் உள்ளன. ஆனால் தயாரிப்பு முறையில் ஒரு மாறுதலும் இல்லை.

NAS 730

# யாருடைய பிள்ளை?



— புஷ்யன் —

"நீ என்ன சொல்கிறாய் காமாட்சி!" என்று கேட்டார் கோமதி நாயகம் தம் அருமை மனைவியைப் பார்த்து.

காமாட்சி உடனே பதில் தரவில்லை. அவள் அப்போது குழந்தை ராமுவை எதிரில் உட்கார வைத்துக் கொண்டு அவன் தலையை வாரிக் கொண்டிருந்தாள். கோமதி நாயகத்தின் கேள்வி உடனே பதில் சொல்லிவிடக் கூடிய படி அவ்வளவு சாமான்யமானதல்ல. அந்தக் கேள்விக்கு முன்னால் அவர் சொன்ன செய்தியைக் கேட்டு அவள் அப்படியே கல்லாய்ச் சமைந்து விட்டாள். அவள் உணர்ச்சி பெருக்கெடுத்தோடியது. "ராமு!" என்று கூவி அவனைத் தாவி எடுத்து மார்போடு அணைத்துக் கொண்டாள்.

கோமதி நாயகம் மௌனமாக ஈஸி சேரில் சாய்ந்தவாறு யோசனையில் ஆழ்ந்திருந்தார். அவர் இவ்விஷயமாக முன்பே தீர்மானத்துக்கு வந்துவிட்டிருந்தார். அதற்குப் பிறகு தான் அவர் காமாட்சியைக் கேட்டார். மூன்று நாட்களுக்கு முன்பே அவருக்கு அந்தக் கடிதம் வந்தது. தீர யோசித்து முடிவு செய்து விட்டார். அந்தக் கடிதத்தை ஒரு தடவை அவளுக்குப் படித்துக் காட்டிவிட்டு மேற்கண்ட கேள்வியைக் கேட்டார்.

கடிதத்தில் கண்ட அந்த இடத்துக்கு வந்ததும் காமாட்சி "ஐயோ!" என்று அலறினாள். அப்படியே செயலற்றுப் போய் விட்டாள்.

"அவர் கேட்டு இல்லையென்று எப்படிச் சொல்ல முடியும், காமாட்சி! அவர் இதுவரை நமக்கு எத்தனையோ நன்மை செய்திருக்கிறார். அவர் என்னை வளர்த்துப் பெரியவனுக்கி விட்டதற்காக அவருக்கு என்ன வேண்டுமானாலும் செய்யலாமே! அவர் இப்போது கேட்பதும் ஒரு விதத்தில் நமது நன்மைக்குத் தானே. ராமுவின் எதிர்காலம் எவ்வளவு பிரமாதமாக விளங்கப் போகிறது, பார்!" என்றார்.

"இதென்ன காசா, பணமா! — எடுத்துக் கொடுத்து விடுவதற்கு. நீங்கள் அம்மாதிரி முடிவுக்கு எப்படி வந்தீர்கள்! நீங்கள் ஒரு தாயின் மனத்துடன் இந்த விஷயத்தைப் பார்த்திருந்தால் நீங்களும் இப்படி அவர் வேண்டுகோளுக்கு ஒப்புக் கொள்ள ஒரு போதும் முடிவு செய்திருக்க மாட்டீர்கள்" என்றாள் காமாட்சி.

"நான் எல்லாவற்றையும் யோசிக்கவில்லை என்று நினைக்காதே! தீர யோசித்துத்தான் அவர் இஷ்டப்படியே செய்து விடலாம் என்று நினைக்கிறேன். அவர்களுடைய மனக் கவலையை இது எவ்வளவு மாற்றும் தெரியுமா! இது நம்முடைய கடமையுமாகும்" என்றார் கோமதிநாயகம்.

"பார்க்கலாம். அவ்வளவு சீக்கிரமாகப் பதில் சொல்லக் கூடிய விஷயமா இது!" என்று காமாட்சி ராமுவை எடுத்துக் கொண்டு, "என் கண்ணு! என் கண்ணு!" என்று கூவியவாறே கண்களில் நீர்மல்கச் சமையலறைக்குச் சென்றாள்.

★

கோமதிநாயகம் சிறு வயதா யிருந்தபோதே தாய் தந்தையரை இழந்து அனாதையானார். அவரை அவருடைய ஒன்றுவிட்ட சகோதரரான சேஷாசலம்தான் எடுத்துக் காப்பாற்றினார். அவரும், அவருடைய மனைவி பார்வதியும் மிகவும் தங்கமான குணம் படைத்தவர்கள். கோமதி நாயகத்தைத் தங்கள் செல்வம்போல் போற்றி வளர்த்தார்கள். தாய் தந்தையரல்லாத குறையை அவன் அறியாதபடி வளர்த்தார்கள்.

கோமதிநாயகம் இளமையில் ரொம்பவும் துடுக்காக இருந்தான். அவன் செய்த விஷமங்கள் கணக்கில் அடங்காதவை. தினமும் ஏதாவது சண்டையை வலுவில் வரவழைத்துக் கொண்டு யாரையாவது அடித்து விட்டும், அடிபட்டுக் கொண்டும் வருவான். இந்த வம்புகளை யெல்லாம் சமாளித்துத் தீர்ப்பதற்குள் அவர்களுக்குப் போதும், போதும் என்று ஆகிவிடும். இருந்த போதிலும் அவனைக் கடிந்து கொள்ளாமல் நல்ல தனமாய்ப் புத்தி சொல்லித் திருத்தப் பாடுபட்டார்கள். சிறு வயதில் அவன் அவைகளை யெல்லாம் அலட்சியம் செய்து வந்த போதிலும், வயதாக ஆக, அவன் மிகவும் பணிவு, அடக்கம், மரியாதை எல்லாம் அறிந்தவனாகி விட்டான். அவன் இம்மாதிரி மாறியதற்குக் காரணம் தமையனார் சேஷாசலமும், மனைவி பார்வதியும் தான் என்பதை நன்குணர்ந்து அவர்களை மனதில் வைத்து வணங்கி வந்தான்.

அவரை பி. ஏ. வரை படிக்க வைத்து அவருக்கு நல்ல இடமாகப் பார்த்துக் கல்யாணம் செய்து வைத்தார்கள். அவன் வந்த அதிர்ஷ்டம் அவருக்குச் சென்னையில் பாங்கி ஒன்றில் நல்ல உத்தியோகம் கிடைத்தது. அதைப் பார்த்துச் சேஷாசலமும், பார்வதியும் பூரிப்பெய்தினர்.

கோமதி நாயகம் உத்தியோகமாகிச் சென்னைக்குப் போய்விடவே அவர்களுக்கு இத்தனை நாட்களாக இல்லாத ஒரு குறை தென்பட ஆரம்பித்தது. அது பிள்ளை யில்லாக் குறை. கோமதி நாயகத்துக்கு விவாகமான இரண்டு வருடங்களுக் கெல்லாம் ஒரு பிள்ளைக் குழந்தை பிறந்தது. அதைக் கண்டதும் பார்வதிக்குப் பிள்ளையில்லாக் குறை பின்னும் அதிகமாகி விட்டது. நேற்று வந்தவள் ஸ்வர்ண விக்கிரகம்போல் ஒரு குழந்தையைப் பெற்று விட்டபோது தனக்கு விவாகமாகிப் பதினைந்து வருடங்களாகியும் தான் ஒரு பிள்ளைக்குத் தாயாக ஆகாமலிருப்பதை எண்ணும்போது அவளுக்கு நெஞ்சை யடைத்தது.

கோமதி நாயகத்தையும், காமாட்சியையும், குழந்தையையும் பார்க்கச் சேஷாசலமும், பார்வதியும் ஒரு தடவை சென்னைக்கு வந்திருந்தனர். அப்போது காமாட்சி தன் குழந்தையுடன் கொஞ்சி

மகிழ்வதையும், அவளுடைய முகத்தில் தாய்மையின் பெருமிதம் துள்ளுவதையும் கண்டபோது அவளுடைய ஏக்கம் பின்னும் பெரிதாகியது. தான் அவ்விதம் ஒரு நாள் கூட மகிழ முடியவில்லையே என்று தாபம் கொள்ள ஆரம்பித்தாள். அந்த எல்லையில்லாத ஆனந்தத்தை அடைய முடியவில்லையே என்று ஏங்கினாள். சேஷாசலம் அவளுக்கு எவ்வளவோ ஆறுதல் கூறியும் அவள் மனம் சமாதானமடையவில்லை.

இது போதாதென்று காமாட்சிக்கு அடுத்தடுத்து மூன்று குழந்தைகள் பிறந்து விட்டன. அவளுக்குக் காமாட்சியிடமும், குழந்தையிடமும் இருந்த இணையற்ற பாசத்துக்கு எவ்வித குறைவும் இல்லை. ஆனாலும் அவள் மனத்தில் யாரையும் பாதிக்காத ஒரு பாசம் உண்டாயிற்று.

நான்காவது பிள்ளைப் பேற்றுக்குப் பார்வதியின் வீட்டுக்குப் போனாள் காமாட்சி. அவள் பெற்றெடுத்த ராமுவைக் கண்டதும் பார்வதிக்கு இது வரை இல்லாத ஒரு உணர்ச்சி தோன்றியது. அவள் உள்ளம் அவனைக் கண்டதும் தவிப்புக் கொள்ள ஆரம்பித்தது. அவனுடைய சிறிய கரிய கண்களும், சிரித்தபோது விழுந்த குழிவுகளும், பிஞ்சு விரல்களும், எல்லாவற்றையும் விட அவன் மற்றவர்களை விடச் சிவப்பாகவும், அழகாகவும் இருந்தது அவளுக்கு ஒரு விநோத எண்ணத்தை ஊட்டியது.

குழந்தை ராமுவைப் பார்த்த போதெல்லாம் அவன் தன் வயிற்றில் பிறந்தது போலவே பார்வதி ஒரு உணர்வை அடைந்தாள். அவனை எப்போதும் எடுத்துக் கொஞ்சினாள். மார்போடு அணைத்துக் கொண்டாள். உச்சி மோந்தாள். அவளுக்கு அவன்மீது அபரிமிதமான வாத்ஸல்யம் உண்டாயிற்று. அவளுக்கு அவனைப் பிரிவது கடினம் என்று தோன்றிற்று. அவள் ஏன் ராமுவைத் தன்னிடமே வைத்துக் கொள்ளக் கூடாது என்ற ஓர் நூதன எண்ணம் கொண்டாள். இது நாள் வரை தன் வயிற்றில் ஒரு குழந்தை பிறக்கவில்லையே என்று ஏங்கி வந்தவள், ராமுவைக் கண்டதும் அவன் தன் வயிற்றிலேயே பிறந்ததாக எண்ணங் கொண்டாள். ராமுவைத் தானே வைத்துக்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் தோன்ற ஆரம்பித்து விட்டது.

காமாட்சி ஐந்துமாதம் ஆனதும் சென்னைக்குப் புறப்பட்டபோது பார்வதிக்கு உயிரே போய் விட்டது போல் இருந்தது. ஆனால் தன் உள்ளத்து உணர்ச்சிகளைத் தனக்குள்ளேயே அடக்கிக்கொண்டு காமாட்சியையும், ராமுவையும் இன் முகத்துடன் அனுப்பி வைத்தாள். அவள் கண்களில் நீர் பெருகி வழிந்து ஓடியது, அவனை ஏற்றிக் கொண்டு வண்டி புறப்பட்ட போது.

தன் எண்ணத்தை வெகு நாள் வரை மனத்தினுள்ளேயே வைத்து வருந்திக் கொண்டிருந்தாள். முன் போல் உற்சாகத்துடன் இல்லாமல் இருப்பதையும், உடல் நிலையிலும் அவள் கெட்டு வருவதையும் கவனித்து வந்த சேஷாசலம் ஒருநாள் அதைப் பற்றி அவளிடம் விசாரித்தார். அவள் முதலில் பதில் சொல்லவில்லை. சேஷாசலம் மேலும் வற்புறுத்திக் கேட்கவே அவள் தன் மனத்தைத் திறந்து கொட்டிவிட்டாள். "எனக்கு ராமு வேண்டும்; அவன் இல்லாமல் இனி என்னால் இருக்க முடியாது. நீங்கள் எப்படியாவது கோமதி நாயகத்தைக் கேட்டு அவனைத் தந்து எடுத்துக் கொள்ளுங்கள்" என்றாள்.

சேஷாசலம் அவளுடைய பேச்சைக் கேட்டு அப்படியே இடிந்து போனார். அவள் உள்ளத்தில் இந்த விதமான எண்ணம் இத்தனை நாட்களாக இருந்து வந்திருக்கிறது என்பதை எண்ணும்போது அவருக்கு ஒரே பிரமையாகவும், விளங்காத புதிராகவும் இருந்தது.

அவளுடைய எண்ணம், ஆசை நியாயமானதா என்று அவருடைய மனத்தைக் கேட்டுப் பார்த்துக் கொண்டார். "ராமுவைத் தந்துக் கொடுப்பானா கோமதி நாயகம்!" என்று யோசித்தார். ராமுவைப் பற்றி எண்ணும்போது அவருக்கும் ஒரு ஆனந்த பரவச உணர்ச்சி உண்டாயிற்று. இன்னும் இரண்டு வயதுகூட நிரம்பாத ராமுவைப் பிரிய மனம் வருமா காமாட்சிக்கு என்று எண்ணிப் பார்த்தார்.

"இதென்ன பைத்தியக்கார எண்ணம்! பார்வதி, அப்போதே கூறியிருந்தாயானால் அந்த எண்ணத்தை மறக்கும்படி முயற்சி எடுத்துக் கொண்டிருப்பேனே. உன் பழைய வியாதியை இப்படி விபரீதமாக வளர்த்துக் கொண்டு விட்டாயே! நான் என்ன செய்வேன்......" என்றார்.

"ஒன்றும் யோசிக்காதேயுங்கள். நீங்கள் கேளுங்கள். கோமதிநாயகம் உங்கள் பேச்சைத் தட்ட மாட்டான். அவன் குணம் எனக்குத் தெரியும். என்னால் ராமு இல்லாமல் இருக்க முடியாது" என்று தீர்மானமாகக் கூறினாள்.

வேறு வழியில்லாமல் சேஷாசலம் கோமதிநாயகத்துக்குக் கடிதம் எழுதினார். எல்லா விவரங்களையும் சாங்கோபாங்கமாக எழுதினார்.

அந்தக் கடிதத்தைக் கண்ட கோமதிநாயகம் வெகுநேரம் ஆழ்ந்து யோசித்தார். அவருக்குச் சேஷாசலத்திடம் இருந்த பக்தியும், விசுவாசமும், எப்படி மறந்துக் கூறுவது என்று யோசித்தது. ராமுவைப் பிரிவது என்பதைப் பற்றி எண்ணும்போதே அவருக்குப் பெருத்த வேதனையுண்டாயிற்று. ஆனாலும் தன்னை அரும்பாடு பட்டு வளர்த்த அண்ணனும், மன்னியும் கேட்கும்போது எப்படி மாட்டேன் என்று சொல்ல முடியும்! அண்ணா, மன்னியின் நிலைமையைப் பற்றி எழுதியிருக்கும்போது இதில் யோசிக்கிறதற்கு என்ன இருக்கிறது! உடனே அவர் இஷ்டப்படி ஒப்புக் கொள்ள வேண்டியதுதான் என்று நிர்மானித்தார். தனக்கு மேலும் மூன்று குழந்தைகள் இருக்கும்போது அதிகமாகக் கவலைப்பட வேண்டிய தில்லை. ராமுவும் பார்வதியிடம் மேன்மையுடன் விளங்குவான் என்றும் அவருக்குத் தோன்றிற்று. ஆகவே ஒருவழியாக அவர் முடிவுக்கு வந்து விட்டார். காமாட்சி இதற்குச் சம்மதம் கொடுக்க வேண்டியது ஒன்றுதான் பாக்கி.



கடிதம் வந்த இரண்டு நாட்கள் வரை அவ ளிடம் இதைப்பற்றிப் பேசவே யோசனை செய் தார். மனம் இடம் அடையவில்லை. மூன்றும் நாள் எப்படியோ மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு அவள் தனியாக இருக்கும்போது அந்தக் கடிதத்தைப் படித்துக் காட்டினார். அவள் அன்று சரியாகப் பதில் சொல்லவில்லை. அவர் மேலும் காரண காரியங்களை விளக்கி அவளை ஒரு வழியாகச் சம்மதிக்கச் செய்வதற்குள் போதும் போதுமென்று ஆகிவிட்டது.

*

"காமாட்சி, எனக்குக் கல்கத்தாவுக்கு மாற்றலாகி யிருக்கிறது. தலைமை ஆபீஸில் மானேஜர் பதவிக்கு உயர்த்தி யிருக்கிறார்கள். இன்னும் பத்து நாட்களில் போய் வேலை ஒப்புக் கொள்ள வேண்டும்" என்றார் கோமதிநாயகம் ஆபீஸிலிருந்து வந்து கொண்டே.

"கல்கத்தாவுக்கா!" என்று கேட்டாள் காமாட்சி சற்று கலவரத்துடன்.

"ஆமாம், ஏன் அப்படித் திகைக்கிறாய்! சம்பளம் ஐந்நூறு ரூபாயாகும்" என்று கூறினார் கோமதிநாயகம்.

"அது சரி. ஆனால் அப்புறம் ராமுவை அடிக் கடி பார்க்க முடியாதே......இப்போதே அவனைப் பிரிந்து ஆறுமாத மாகிவிட்டது. இனி எப்போது அவனைப் பார்க்க முடியும்! அவனை விட்டுப் பிரிந்து இருப்பது எவ்வளவு கஷ்டமாக இருக்கிறது! தின மும் அதே கவலையால் வாடிக் கொண்டிருக் கிறேன். அவனைத் தத்துக் கொடுப்பதற்கு ஏன் சம்மதித்தோம் என்று தினமும் நொந்து கொள் கிறேன். அப்போது எப்படியோ ஏதேதோ காரணங்கள் கூறி என்னை ஏமாற்றி விட்டீர்கள். இப்போது கல்கத்தாவுக்குப் போய் விட்டால் இனி அவனைப் பார்ப்ப தெப்படி! என்னால் முடியாது. பிரமோஷனும் வேண்டாம், ஒன்றும் வேண்டாம். இங்கேயே இருந்துவிடலாம்" என்று கூறினாள் காமாட்சி.


"சே! தானாக வரும் சீதேவியைத் தள்ளலாகாது. ராமுவைப் பற்றிக் கவலை ஏன் படுகிறாய்! அவன் சௌக் கியமாய் இருப்பான். மனத்தைக் குழப்பிக் கொள்ளாதே. மற்றவர்கள் இல்லையா! வருஷத்துக் கொரு தடவை வந்து விட்டுப் போனால் போயிற்று" என்றார் நாயகம்.

கல்கத்தாவுக்குப் போன பிறகு ஒரு தடவை திருச்சி வந்தார்கள், ராமுவைப் பார்த்து விட்டுப் போக. ராமுவுக்குப் பார்வதியையும், சேஷா சலத்தையும் அம்மா அப்பா என்று கூப்பிட்டுப் பழகிப் போய்விட்டது. கல்கத்தாவிலிருந்து வந்த காமாட்சி யைக் காட்டிப் பார்வதி, "சித்தி வந்திருக்கா பாருடா" என்று கூறி யதும் அவளுக்கு ஆயிரம் சம்மட்டி களைக் கொண்டு தன் தலையில் தாக் கியதுபோல் இருந்தது.

"நானா சித்தி!" உள்ளத்தில் அலறினாள். "நான்தான் உன் அம்மா. அடே ராமு. நான்தாண்டா உன் அம்மா" என்று கூறத் துடித்தாள். ஆனால் கோமதிநாயகம் அவளை முன் னமே எச்சரித்திருந்தார். ராமுவிடம் அவன்தான் அம்மா என்று கூறிவிடக் கூடா தென்றும், அப்படிக் கூறினால் ராமு உண்மை யைத் தெரிந்து கொள்வான். அதனால் அவன் உள்ளம் வாடும். மேலும் அம்மா, அப்பா என்று அவன் சேஷாசலத்தையும், பார்வதி யையும் அழைப்பதால் அவர்கள் கொண் டிருக்கும் மன ஆறுதலும் கெட்டுவிடுமென்று கூறி அவளை எச்சரித் திருந்தார். இங்கு வந் தும் ராமு பார்வதியையும், சேஷாசலத்தை யும் அம்மா, அப்பா என்று கூப்பிடுவதைச் சதா கேட்கும் போதும், அவர்களுடனேயே ஒட்டிக் கொண்டிருக்கும்போதும், அவளை அவன் சித்தி என்று கூப்பிடும்போதும் காமாட்சியின் மன வேதனை அதிகமாயிற்று. ராமுவுடன் ஒரு மாதமாவது கொஞ்சிக் குலாவ வேண்டுமென்று வந்தவள் ஒரு வாரத்துக்கெல்லாம் தன் கணவ னிடம் கல்கத்தாவுக்குத் திரும்ப வேண்டுமென்று நச்சரித்தாள். அவளால் ராமு ஓர் அந்நியன் போல் தன் எதிரிலேயே இருப்பதைத் தாங்க முடியவில்லை. கோமதிநாயகமும் அவளுடைய தாபத்தை உணர்ந்து சீக்கிரமே அங்கிருந்து கிளம்பி விட்டார்.

காமாட்சி திருச்சியிலிருந்து திரும்பி வந்தது முதல் பித்துப் பிடித்தவள் போலாகி விட்டாள். அடிக்கடி விக்கி விக்கி அழ ஆரம்பித்தாள். 'ராமு, ராமு' என்று கதற ஆரம்பித்தாள். ஒரு காரியமும் செய்யச் சக்தியற்றவளாகி விடுவாள். ராமுவுக்குத் தான் தாயில்லை என்பதை உணரும் போதெல்லாம் அவளுக்கு ஆறாத்துயரம் உண் டாவதுடன் கூடவே ஒரு விரக்தி பாவமும் உண்டாக ஆரம்பித்தது. தன்னை அவன் சித்தி, சித்தி என்று கூப்பிட்டதை நினைத்துத் தேம்பித் தேம்பி அழுதபோதெல்லாம் அவன்மேல் அவளையு மறியாமல் வெறுப்பு, உண்டாக ஆரம்பித்தது.

தன்னை அம்மா என்று கண்டு கொள்ள முடிய வில்லையே அவனால் என்று





"டிரைவர், வண்டியை வேகமாக விடு. அப்பா! ரொம்ப அவசரம் என்று சொன்னதும் இவ்வளவு மெதுவாகப் போகிறாயே!"

"அது சரிதானுங்க, காரை விட்டு இறங்கினால் நான் வேகமாக ஓடுவேன். காருக்குள்ளே இருந்து கொண்டே எப்படி வேகமாய்ப் போகிறது?"

அவன் மேல் கோபமும் ஆத்திரமும் அவள் தாயுள்ளத்தில் கொதித்தெழுந்தது.

அதற்குப் பிறகெல்லாம் கோமதிநாயகம் எப்போதாவது காமாட்சியிடம், "திருச்சிக்குப் போய்விட்டு வரலாமா, ராமுவைப் பார்க்கவேண்டாமா!" என்று கேட்டால் உடனே அவள், "எனக்கு அங்கே என்ன வேலை! எனக்கு யார் இருக்கிறார்கள் அங்கே!" என்று வெறுப்பும் அலட்சியமும் தோன்றப் பதில் கூறிவிடுவாள். அந்தப் பதிலுக்குப் பின் அவளுடைய மனத்தின் அடித்தளத்தில் எத்தனை வேதனை அடங்கிக் கிடக்கிறது என்பதைக் கோமதிநாயகம் அறியாதவரல்ல. அதற்குமேல் அவர் அவளிடம் ராமுவைப் பற்றிய பேச்சையே எடுக்கவில்லை.

★

இந்தியா பிரிவதற்கு முன் கல்கத்தா நகரமே திமிலோகப் பட்டது! அல்லோல கல்லோலப் பட்டது. குண்டர்களின் வெறியாட்டத்தின் இலக்காய் விளங்கினர் மக்கள். கல்கத்தாவில் அரசாங்கம் என்று ஒன்று இல்லையோ என்று எண்ணும்படி கொள்ளை, கொலை, வீட்டுக்குத் தீ வைத்தல் என்று சாதி வெறியர்கள் அட்டூழியம் புரிந்தனர். கல்கத்தா தெருவில் ரத்த ஆறு ஓடிற்று. வெறியர்கள் கைக்கு அகப்பட்டதைச் சூறையாடிக் கொண்டு போனார்கள். பச்சிளங் குழந்தைகளையும் ஈவிரக்கமின்றிக் கொன்றனர். பஞ்சமா பாதகர்களும் அஞ்சும்படியான கோர கிருத்யங்கள் மத வெறியை ஆதாரமாகக் கொண்டு நடைபெற்றன.

மக்கள் கூக்குரலிட்டு நடு நடுங்கி ஓடி ஒளியப் பிரயத்தனப் பட்டனர். அதில் வெற்றி கண்டு உயிர் பிழைத்தோர் வெகு சிலரே.

கோமதிநாயகம் குடியிருந்த பாகத்தில் இந்தக் கலாட்டா முதலில் ஆரம்பித்ததைக் கேள்விப் பட்டு ஆபீஸிலிருந்து அவசரம் அவசரமாக, பதை பதைத்து அவர் ஓடி வந்து பார்த்தபோது நிலைமை மிஞ்சி விட்டது. அவருடைய வீட்டை அடைவதற்குப் பெரும் பிரயத்தனப் பட்டார். ஒளிந்து ஒளிந்து வீட்டை யடைந்தார். உள்ளே சென்று கண்ட காட்சி அவருடைய ரத்தத்தை உறையச் செய்யும்படி யிருந்தது. வீடு முழுதும் ஒரே ரத்தக் காடாய்க் கிடந்தது.

"காமாட்சி! குழந்தைகள் எங்கே!" என்று அலறினார் கோமதிநாயகம்.

காமாட்சி முகத்தை மூடிக்கொண்டு ரத்த வெள்ளத்தைக் காண்பித்தாள்.

கோமதிநாயகம் ஒரு கணம் மரம்போல் நின்று கொண்டிருந்தார். அடுத்த கணம் "உம், காமாட்சி ஓடி வா. இங்கிருந்தால் நம் உயிருக்கும் ஆபத்து" என்று அவளை இழுத்துக் கொண்டு கண்ணை மூடிக்கொண்டு ஓடினார் தெருவில். எப்படியோ மறைந்து, மறைந்து ரயில்வே ஸ்டேஷனுக்கு வந்து சேர்ந்தனர். அங்கு அப்போதுதான் புறப் படவிருந்த வண்டியில் தொத்திக் கொண்டார்கள்.

வண்டி முழுதும் ஒரே ஓலம். சோகமயமாய்க் காட்சியளித்தது. மக்கள் அலறி அழுது கொண்டிருந்த காட்சி காணச் சகியாததா யிருந்தது. காமாட்சி மூர்ச்சை யடைந்து விட்டாள்.

★

திருச்சி வந்தடையும் வரை ஒரே அழுகையாய் அழுதாள் காமாட்சி. மூன்று மக்களையும், சொத்து சுகங்களையும் ஒருங்கே பறிகொடுத்து விட்ட அவள் கொடுந் துயரத்தை யாரால் வருணிக்க முடியும்! அவளைப்போல் அந்த வெறியாட்டத்தில் பரதவித்தவர்கள் எத்தனை பேர்களோ!

காமாட்சியைக் கட்டிக் கொண்டு மாலை மாலையாகக் கண்ணீர் விட்டாள் பார்வதி. கடைசியில் காமாட்சிக்கு ஆறுதல் கூறினாள். என்ன ஆறுதல் கூறி என்ன பயன்! அவளுடைய துக்கம் கரை காணாததாய் இருந்தது.

"ஐயோ மன்னி, நான் மகா துர்ப்பாக்கியவதி. என்னைப்போல் பாவி யாரும் இவ்வுலகத்தில் இருக்க மாட்டார்கள். நிறையப் பெற்றெடுத்தும் அம்மாவென்று அழைக்க ஆளில்லாமல் போய் விட்டேன்" என்று கூறிப் புலம்பினாள்.

பள்ளிக்கூடம் போயிருந்த ராமு வந்தான். யாரோ புதிதாக வந்திருப்பதைப் பார்த்துத் திகைப்புற்றான். அவன் பத்து வயது பாலகனாக வனப்புடன் விளங்கினான். அவனைக் கண்டதும் காமாட்சிக்கு அளவில்லாத பாசம் உண்டாயிற்று.

"யார் அம்மா அது!" என்று கொஞ்சிக் கேட்டான் ராமு, பார்வதியைப் பார்த்து.

"உன் சித்தியடா நான், தெரியவில்லையா!" என்று கூறி அவனைத் தன் அருகில் ஆவலுடன் அழைத்தாள் காமாட்சி.

"உன் சித்தி யில்லையடா. இவள்தான் உன் அம்மா" என்று கூறினாள் பார்வதி.

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் காமாட்சி திடுக்கிட்டாள். பிறகு, "வேண்டாம் மன்னி, அவன் உன் மகனாகவே இருக்கட்டும். நீ அவனை தத்தெடுத்துக் கொண்டதால் தானே அவன் இன்று உயிரோடு இருக்கிறான், இல்லாவிட்டால் ஐயோ அதைப்பற்றி நினைக்கக்கூடப் பயமாயிருக்கிறது" என்றாள் காமாட்சி பார்வதியின் தோளில் சாய்ந்தவாறு.

இந்தச் சமயத்தில் கல்கத்தாவில் அவர் வீட்டில் இன்னொரு போர்ஷனில் குடி இருந்த கோமதி நாயகத்தின் நண்பர் அவருடைய மூன்று குழந்தைகளுடன் உள்ளே நுழைந்தார்.

குழந்தைகளைப் பார்த்த காமாட்சி அப்படியே ஓடிப்போய் மூன்று குழந்தைகளையும் தாவிப் பிடித்து அணைத்துக் கொண்டாள்.

"கோமதி நாயகம்! கலகம் ஆரம்பித்தவுடனேயே நான் உன் குழந்தைகளையும் என் குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு ஊருக்குக் கிளம்பி விட்டேன். இங்கு உன் தமையனாரிடம் ஒப்படைத்து விட்டு உனக்குக் கடிதம் எழுத வேண்டும் என்றிருந்தேன்" என்றார் நண்பர்.

கோமதி நாயகமும் காமாட்சியும் அவரை நன்றி புணர்ச்சியுடன் கைகூப்பி வணங்கினர்.

கடும் கோடை வெப்பத்தைத் தவிர்க்க

# உஷா விசிறிகளை

நாடுங்கள்

உடனடியாக எங்கும் கிடைக்கும்

ஏ. ஸி. ஸீலிங் விசிறிகள்: 36", 48", 56" & 60" விட்டங்களில்

ஏ. ஸி. மேஜை விசிறிகள்: 16" விட்டம்

கறுப்பு, பச்சை, கிரீம் முதலிய வர்ணங்களில், நாற்புறமும் இயங்கும் விசிறிகளும், நிலைத்து நிற்கும் விசிறிகளும், நெருக்கமான அல்லது திறந்த வலை பொருத்தப்பட்டு கிடைக்கும்

ஏ. ஸி. காபின் & பெடஸ்டல் விசிறிகள்: 16" விட்டம்

தயாரிப்பவர்கள்

## ஜே இன்ஜினீயரிங் ஒர்க்ஸ், கல்கத்தா-31

சர்கிள் விற்பனைக் காரியாலயம்: 120, அரண்மனைக்காரத் தெரு, சென்னை-1

தென்னிந்தியாவின் ஸோல் ஏஜண்டுகள்:

## அலைட் இண்டஸ்ட்ரியல் டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் லிட்.

120, அரண்மனைக்காரத் தெரு, சென்னை-1

## கள்ளிக்கோட்டை பண்ட்ஸ் லிமிடெட்

(இந்தியாவில் ஸ்தாபிக்கப்பட்டது)

தலைமை ஆபீஸ்: கள்ளிக்கோட்டை | கிளை ஆபீஸ்: 9, செம்புதாஸ் தெரு, மதராஸ்-1

Phone: 85596

எங்கள் மாதாந்திரக் குறுகிய கால தவணைச் சீட்டுகள்

கவர்ச்சிகரமான ஏப்ரல் மாதச் சீட்டு வரிசை

உங்கள் இருண்ட எதிர்கால வாழ்வைப் பற்றி நீங்கள் பயந்தால், எங்களுடைய மகிழ்ச்சிகரமான சீட்டுகள் உங்களை உற்சாகப்படுத்தி, நம்பிக்கையோடும் தைரியத்தோடும் அந்தப் பயத்தை விரட்டியடிக்க உதவுகிறது. நூற்றுக் கணக்கானவர் சந்தோஷமடைந்துள்ளனர். நீங்களும் ஏன் அச்சித்தம் சந்தோஷம் அடையக் கூடாது?

விரைவில் மனுச் செய்து கொண்டு ஏமாற்றத்தைத் தவிருங்கள்

20 மாதங்கள் | 4-வது ஞாயிற்றுக்கிழமை ஏல வரிசை | 20 சந்தாதாரர்கள்

| வகுப்பு | மாதச் சந்தா | சீட்டுத் தொகை |
|---|---|---|
| C | ரூ. 100/- | ரூ. 2000/- |
| D | ரூ. 50/- | ரூ. 1000/- |
| E | ரூ. 25/- | ரூ. 500/- |
| F | ரூ. 20/- | ரூ. 400/- |
| G | ரூ. 15/- | ரூ. 300/- |
| H | ரூ. 10/- | ரூ. 200/- |


சந்தா செலுத்தும் கடைசி தேதி 17-4-53

முதல் ஏலத் தேதி 26-4-53

விலாசத்தைத் தெளிவாக எழுதி மனுச் செய்து கொள்பவர்களுக்கு விதிகளும், நிபந்தனைகளும் இலவசமாக அனுப்பப்படும். மற்ற விதிகள் வழக்கம்போல். சீட்டில் சேர்த்துக் கொள்ளும் உரிமை கம்பெனியைச் சேர்ந்தது.

(போர்டார் உத்திரவுப்படி) எம். வி. விஸ்வநாதன், மானேஜிங் டைரக்டர்

தந்தி: 'KALLIFUNDS'



என்ன புதுமை
என்ன மென்மை
.......என்னே அழகு!

குளுமையும் இனிய வாசனையும் பொருந்திய டாம்கோ ஓ டி கொலோனின் உதவியால் உங்கள் அழகை புதுமை யுறச் செய்து,மாலை வேளைகளில் உஷ்ணத்தின் தாபத்தை நீக்கி குளிர்ச்சியுடனும் உல்லாசத்துடனும் திகழுங்கள்.

டாம்கோ "ஓ டி கொலோன் சோப்பை உபயோகித்து உங்கள் கைகளையும் வனப்பையும் மென்மையாக, மழமழப்பாக, நறுமணங்கமழ வைத்துக் கொள்ளுங்கள்.


இவ்விரு அழகூட்டும் சாதனங்களும் உண்மையில் உங்களை பிரதி தினமும் அதிக கவர்ச்சியுறச் செய்வதுடன், நாள்தோறும் புதுமை குன்றாமல் வைத்திருக்கவும் செய்யும்.

டாம்கோ
**ஓ டி கொலோன்**
மற்றும்
**ஓ டி கொலோன்**
**சோப்**




TS 7362

டாடா ஆயில் மில்ஸ்
கம்பெனி லிமிடெட்




கல்யாணி தன் கணவன் நடராஜன் ஆபீசுக்குப் போனதும் வேலைகளை யெல்லாம் முடித்துவிட்டு, நிம்மதியாகப் படிக்கலாம் என்று உட்கார்ந்தாள். அப்பொழுது திறந்திருந்த ஜன்னல் வழியாக ஒரு சிட்டுக் குருவி அறைக்குள்ளே பறந்து வந்தது. அதைப் பார்த்ததும், அதைப் பிடித்துக் கையிலே வைத்துக் கொள்ள வேண்டுமென்ற ஒரு ஆசை அவள் உள்ளத்தில் துளிர்விட்டது.

அடுத்த கணம் கல்யாணி ஜன்னல் கதவைச் சாத்தி விட்டாள். சிட்டுக் குருவி இங்கு மங்குமாக அறைக்குள்ளே பறந்தது. மேலேயும் கீழேயுமாகப் பறந்து பறந்து சென்றது. அவளும் அதைத் துரத்திக் கொண்டே, அறைக்குள்ளே இங்கு மங்குமாக ஓடினாள். குருவி அவளை அலைக்கழித்தது. ஓரோர் சமயம் அவள் கையில் அகப்பட்டு விடுவது போல் தோன்றியது.

அப்பாடா! அவள் கையில் அது நன்றாகச் சிக்கிக்கொண்டு விட்டது. அவளுக்கு மேல் மூச்சு கீழ்மூச்சு வாங்கியது. முத்து முத்தாக வியர்வை முகத்தில் வழிந்தோடிக் கீழே சிதறியது. சிட்டுக்குருவியைக் கையில் பிடித்துக் கொண்டே. அவள் ஜன்னல் கதவைத் திறந்து விட்டாள். அவளுக்கு இப்பொழுது மட்டிலாத மகிழ்ச்சி.

"கிரீச், கிரீச்" என்று அவள் கையிலிருந்த சிட்டுக் குருவி பரிதாபமாக ஒலமிட்டது. "கிரீச், கிரீச்" என்று வெளியே இருந்து அதனுடைய ஜோடிப் பறவை அலறியது. வெளியில் இருந்த பறவை, கத்திக் கொண்டே, இங்கு மங்குமாகப் பறந்து பறந்து வந்தது. ஜன்னலிடம் வரும்போ தெல்லாம் "கிரீச், கிரீச்" என்று கோரமாகக் கத்தியது அது.

"சுவு இரக்கமற்ற பெண்ணே! எங்கள் சுதந்திர வாழ்வில் ஏன் குறுக்கிடுகிறாய்? எங்களைப் பிரிக்காதே" என்று சொல்வது போல் இரண்டு சிட்டுக் குருவிகளும் உள்ளேயும், வெளியேயு மிருந்து "கிரீச். கிரீச்" என்று ஒலமிட்டன. அவைகள் போட்ட சப்தம் நிமிஷத்திற்கு நிமிஷம் அதிகரித்துக் கொண்டிருந்தது.

"பிறர் மனசை நோகச்செய்யாதே. எல்லாருக்கும் நல்லதே செய்" என்ற வாசகத்தை அவள் நினைத்துக் கொண்டாள். அவள் தாய் மீனாட்சிக்குச் சின்னஞ் சிறு வயதில் சொன்ன பொன்மொழிகள்தான் அவை. அவள் சிட்டுக் குருவியை விட்டு விட்டாள். அது சிறகடித்துக் கொண்டே சுதந்திரமாய் வெளியே பறந்தது. மற்ற சிட்டும் அதோடு சேர்ந்து கொண்டது. இரண்டும் சேர்ந்து எதிர் வீட்டின்மேல் போய் உட்கார்ந்து கொண்டன. அவள் அந்த ஜோடிப் பறவைகளைப் பார்த்துக் கொண்டே யிருந்தாள்.

அவளுக்கு இப்பொழுது தன் அசட்டுத் தனத்தை நினைக்க, நினைக்க வெட்கமா யிருந்தது. அவள் முகத்தில் சிவப்பேறியது. அநியாயமாக, அந்தப் பறவைகளை வருத்தி விட்டோமே என்ற பச்சாதாபந்தான் அவளிடம் மிஞ்சி நின்றது. "நாம் செய்தது விளையாட்டுக்குத்தான். ஆனால் அதற்கு எங்கே தெரியப் போகிறது? அதன் நெஞ்சு என்ன பாடு பட்டதோ?" என்று அவள் வருந்தினாள். அவள் முகம் வாடித் தொங்கி விட்டது. அவள் சிந்தனைப் பறவை இப்பொழுது சிறகடித்துக் கொண்டு பறந்தது. அந்த நாட்கள் வாழ்வின் கசப்பேறிய நாட்கள்; — அவள் உள்ளத் திரையில் விழுந்தன.

• • •

அப்பொழுது கல்யாணி பத்து வயதுச் சிறுமி. சின்னஞ் சிறு வயதிலேயே தந்தையை இழந்து, தாய் மீனாட்சி அரவணைப்பில் அன்பாய் வளர்க்கப் பட்டாள் அவள். சொத்து சுதந்திரமின்றி ஏழையாய் இருந்தார்கள் அவர்கள். மீனாட்சி எங்கோ இரண்டு வீடுகளில் சமையல் செய்து, தன்னையும், தன் மகளையும் காப்பாற்றிக் கொண்டு வந்தாள்.

சுகம் என்பதோ, நல்லது கெட்டது எது என்பதோ — ஒன்றையும் அறியாதவளாய். அறிந்து அனுபவிக்க முடியாதவளாய்க் கல்யாணி வளர்ந்தாள்; வளர்க்கப் பட்டாள். வறுமையின் இரும்புப் பிடியில் தாயும் மகளும் வாழ்ந்து வந்தனர்.

கல்யாணி ஐந்தாவது வகுப்பில் படித்துக் கொண்டிருந்தாள். தன்னுடைய தோழிகள் சில பணக்காரவீட்டுக் குழந்தைகள் அடித்துக் கொள்ளும் பெருமையைக் கேட்கும்போது, அவள் மனம் குன்றிப் போய்விடும். தனக்கும் அவர்கள்போல் எதுவுமில்லையே என்ற ஏக்கமும், துக்கமும் அவளுக்கு ஏற்படும். ஆனால்

வீட்டுக்கு வந்தவுடன், தாயின் அன்பு மொழியில், அவள் எல்லாவற்றையுமே மறந்து விடுவாள். பள்ளிகூடத்துக்கு வந்து விட்டாலோ அதே ஏக்கம்தான் அவளுக்கு.

அப்படித்தான் ஒருநாள் மாலை கல்யாணி தன் தோழிகளுடன் பள்ளிக்கூடம் விட்டு வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தாள். அவள் தோழிகள் ஒவ்வொருவரும் தங்களுக்குக் கிடைத்த பிறந்தநாள் பரிசைப் பற்றிப் பேசிப் பேசிப் பிரமாதப்படுத்திக் கொண்டு வந்தனர். மற்றவர்கள் கல்யாணி ஏதாவது பேசுவாளா என்று அவளைத் திரும்பித் திரும்பிப் பார்த்தார்கள். கல்யாணிக்கு வாயடைத்துப் போய் விட்டது. அவளுக்குப் பேச என்ன இருக்கிறது? பிறந்தநாள் என்று இருப்பதும், அதற்குக் கொண்டாட்டமும், கிடைக்கும் பரிசும், இப்பொழுதுதான் அவள் அறிந்து கொள்ளும் புதிய செய்தி என்பதை அந்தப் பணக்காரக் குழந்தைகள் அறிந்திருக்க வழி யில்லை. வரும் வழியில் ஒருத்தி சொன்னாள். "எனக்குப் பணத்தோடு ஒரு மணி பர்சு கிடைக்கப் [போகிறது. என் தம்பிக்கு வேண்டிய விளையாட்டுப் பொம்மையாக வாங்கிப் போவேன்."

"எனக்குத்தான் கிடைக்கப் போகிறது" என்று மற்றவர்களும் ஒருவரோடு ஒருவர் போட்டி போட்டுக் கொண்டு சொன்னார்கள்.

"எனக்குத்தான் அது கிடைக்கப் போகிறது" என்று கல்யாணி அவர்களுக்கு முன் நடக்க ஆரம்பித்தாள்.

கொஞ்ச தூரத்தில், தரையில் மணி பர்சு போல் சுருண்டு விழுந்து கிடந்த ஒன்றைக் கல்யாணிதான் முதலில் போய் எடுத்தாள். மற்றவர்கள் ஆவலோடு என்னவென்று அதை ஓடி வந்து பார்த்தனர்.

"சீச்சீ, இந்த அற்பம்தான் உனக்குக் கிடைக்கும்" என்று மற்றவர்கள் எல்லோரும் 'கொல்' என்று சிரித்தார்கள்.

கல்யாணி எடுத்தது மணி பர்சு அல்ல; அது ஒரு பறவை; சிட்டுக் குருவி.



"நீங்கள் நாற்பத்தைந்து வருஷம் வேலை செய்ததாகச் சொல்லுகிறீர்கள், ஆனால் உங்கள் வயசு நாற்பது என்கிறீர்கள்! இது எப்படி ஸார், சரியாக இருக்க முடியும்!"

"சரிதான், ஸார்! தொழிற் சாலையில் 'ஓவர் டைம்' வேலை செய்ததையும் சேர்த்துச் சொன்னேன்!"

பறக்கச் சக்தியற்று, கீழே விழுந்து சுருண்டு கிடந்தது; அதற்கு என்ன வியாதியோ? அது இனி எடுத்து எத்தனை நாள் ஆயிற்றோ? அதற்கு உயிர் இருந்தது; ஆனால் பலவீனமாகப் பறக்க முடியாமல் அது சோர்ந்து கிடந்தது.

"அடி, கல்யாணி! நீ ஏன் இந்த அற்பப் பறவையைக் கையில் எடுத்து வைத்திருக்கிறாய்?" என்றாள் ஒருத்தி.

"நான் வளர்க்கப் போகிறேன்" என்று பளிச்சென்று பதில் சொன்னாள் கல்யாணி. அவளுக்கு அதனிடம் இரக்கம் உண்டாகியது.

"அந்த நன்றி கெட்ட பறவை. கொஞ்சம் தெம்பு வந்ததும் உன்னை விட்டே பறந்து போய் விடும்" என்று அவளுக்குப் புத்தி சொல்லி, அதை அப்படியே கீழே போட்டு விட்டுப் போகும்படி வற்புறுத்தினார்கள் அவர்கள். கல்யாணி கேட்கவில்லை.

சிட்டுக் குருவியை எடுத்துப் போய்த் தாயிடம் காட்டினாள் அவள். மீனாட்சி மகளின் இரக்க சிந்தனையைக் கண்டு, மகளை அணைத்துக் கொண்டு மகிழ்ந்தாள்.

தாயும் மகளும் அதற்குத் தீனி கொடுத்தார்கள். குருவிக்குக் கொஞ்சம் கொஞ்சமாகத் தெம்பு ஏற்பட்டது. பறந்து திரியத்தான் இன்னும் சக்தி ஏற்படவில்லை.

"பிறந்த நாள் கொண்டாட்டம், பரிசு என்று பேசிக்கிறார்களே. அப்படி என்றால் என்ன அம்மா?" என்று தாயைப் பார்த்துக் கேட்டாள் கல்யாணி.

"அதெல்லாம் பணக்காரர்களுக்குத்தான் கல்யாணி! நம்மைப் போன்ற ஏழைகளுக்கு அது இல்லை. இன்று கூட நீ பிறந்த நாள் தான்!" என்றாள். இதைச் சொல்லும்போது மீனாட்சியின் கண்கள் கலங்கின. அவள் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டாள்.

"அப்படி என்றால் எனக்குப் பரிசு கிடையாதா, அம்மா?" என்று கல்யாணி ஆவலோடு கேட்டாள்.

"யார் இல்லை யென்று சொன்னது? ஆதரவற்று, இறக்கும் நிலையில் உள்ள பறவை ஒன்றைக் காப்பாற்றி விட்டாயே. அதனால் ஏற்படும் திருப்தியே உனக்குக் கிடைத்த பிறந்த நாள் பரிசாக நினைத்துக்கொள் கல்யாணி! இந்தப் பரிசு கடவுளாகப் பார்த்து அனுப்பியது. 'யார் மனசையும் நோகச் செய்யாதே. எல்லாருக்கும் நல்லதே செய்'—இது உன் தாயின் பரிசு" என்று மீனாட்சி மகளுக்குச் சொன்னாள்.

"சரி, அம்மா!" என்றாள்.

கல்யாணிக்கும், அந்தச் சின்ன வயதிலேயே மனம் தெளிவு பெற்றது.

சிட்டுக் குருவி ஒரு வாரம் வரைக்கும் அவர்கள் பாதுகாப்பிலிருந்தது. ஒரு நாள் அதை வெளியில் கொண்டு போய்விட்டார்கள். அது பறந்து சென்றது. "ஒரு உயிரைக் காப்பாற்றி விட்டோம்" என்று தாயும் மகளும் திருப்திப் பட்டுக் கொண்டனர்.

கல்யாணி பள்ளிக்கூடம் போவதை நிறுத்திக் கொண்டு விட்டாள். கரைந்து சென்ற வருஷங்கள் கல்யாணியை அழகுத் தெய்வமாக உருவாக்கி யிருந்தன. இதைக் கண்ட மீனாட்சி பெருமூச்சு விட்டாள். மகளை யாரிடமாவது நல்லபடியாக ஒப்படைத்து, அவள் கழுத்தில் மூன்று முடிச்சுகள் விழ வேண்டுமே என்ற கவலைதான் அவளுக்கு.

அப்பொழுதுதான் மீனாட்சியின் தூரத்து உறவினர் ஒருவர், தம் மகன் நடராஜனை அவள் வீட்டிலிருந்து சாப்பிட்டு, காலேஜுக்குப் போகும்படி ஏற்பாடு செய்துவிட்டுப் போனார். மீனாட்சியும் அதற்குச் சம்மதித்தாள். அந்த உறவினர் அனுப்பி வந்த பணம் அவளுக்குக் கொஞ்சம் உதவியது.

கல்யாணி, நடராஜனைக் கண்டு, ஓடிப் பதுங்கவில்லை. அவனிடம் கள்ளங் கபடமின்றி, சகஜமாகப் பழகினாள். நடராஜனும் அவளுடன் மனம் விட்டுப் பேசினான். கல்யாணியின் அழகைக் கண்டு அவன் பிரமித்துப் போய்விட்டான். தனக்கு வாழ்க்கைத் துணையாகக் கிடைப்பவள் கல்யாணி போன்றவளாகவே இருக்க வேண்டும் என்று மனத்துக்குள்ளேயே எண்ணிக் கொண்டான்.

மீனாட்சி நடராஜனைக் கண்டதுமே, யோசித்தாள். அவன் தகப்பனார் சம்மதித்தால், படிப்பு முடிந்ததும் அவனுக்கே கல்யாணியைக் கொடுத்து, அவள் சுகப்படுவதைப் பார்த்து மகிழலாம் என்ற ஆசையும் அவள் உள்ளத்தில் எழுந்தது. நாளுக்குநாள் இந்த ஆசை அவளிடம் பலப்பட்டுக் கொண்டு வந்தது. "ஆனால் இது நடக்காத காரியம்" என்று பெருமூச்சும் விட்டாள் அவள்.

கல்யாணிக்கும் நாளடைவில், நடராஜனிடம் ஒரு அன்பும் ஆசையும் விழுந்து போயிருந்தது. "நடராஜனே தன் கழுத்தில் தாலி கட்டும் கணவனாக அமைய வேண்டும்" என்பதுதான் அவளுடைய நித்தியப் பிரார்த்தனையாக இருந்தது. அவளைப் போலவே, அவனும் "கல்யாணியே தனக்கு மனைவியாகக் கிடைக்கவேண்டும். அப்பாவும் அம்மாவும் இதற்குச் சம்மதிக்க வேண்டும்" என்று எண்ணி வந்தான்.

இப்படி நடராஜன் அவர்கள் மத்தியில் வந்து மூன்று வருஷங்கள் ஓடிப்போயின.

அவன் நாலாவது வருஷப் படிப்பு படிக்க ஆரம்பித்து விட்டான். படிப்பு முடிந்ததும் அவர்களை விட்டுப் போய் விடுவான். வேலையும் கிடைத்து, கல்யாணமும் ஆகி எங்காவது அவன் போகவேண்டியவன் தானே!

அன்று நடராஜனுக்குக்காலேஜ் விடுமுறை. மீனாட்சி எங்கோ வெளியில் போயிருந்தாள்.

கல்யாணி அறையில் உட்கார்ந்து கதைப் புத்தகம் படித்துக் கொண்டிருந்தாள்.

"கல்யாணி, கல்யாணி" என்று தோட்டத்திலிருந்து நடராஜன் கூப்பிடும் குரலைக் கேட்டு அவள் எழுந்து ஓடினாள்.



ஒருவர் (குடியானவனைப் பார்த்து):— வயது ஆக ஆக நீ கூனிக் குறுகிக் கொண்டே போகிறாயே! என்னைப் போல ஏன் உன்னால் நிமிர்ந்து நிற்க முடியவில்லை?

குடியானவன்:— அதோ வயலில் நிற்கும் பயிரைப் பாருங்கள். தானியம் முதிர்ந்து நிறைய இருப்பவை குனிந்து கொண்டிருக்கின்றன. தானியம் இல்லாத பயிர்கள் நிமிர்ந்து நிற்கின்றன!

நடராஜன் ஒரு சிட்டுக் குருவியைப் பிடித்துக் கையில் வைத்துக் கொண்டிருந்தான்.

"ஏது, இது எப்படி உங்கள் கையில் வந்தது?" என்று கேட்டாள் கல்யாணி.

நடராஜன் கிணற்றைக் காட்டினான்.

"இந்தச் சிட்டு கிணற்றில் உள் சுவரில் கூடு கட்டி யிருக்கிறது. உள்ளே போயிருந்த போது பெரிய துணியாய்ப் போட்டுப் பிடித்து விட்டேன். என்னிடமிருந்து தப்ப முடியுமா?" என்று தன் வீரப் பிரதாபத்தைக் கூறிச் சிரித்தான் அவன்.

அவர்களுக்கு எதிரே இருந்த மதில்மேல், அதனுடைய ஜோடிச் சிட்டு பரிதாபமாகக் கதறி, கத்திக் கொண்டிருந்தது.

அந்த இரண்டு சிட்டுக் குருவிகளின் பரிதாப ஓலத்தைக் கேட்டதும் அதனுடைய துடிதுடிப்பைப் பார்த்ததும் கல்யாணிக்குப் பரிதாபமாக இருந்தது.

"பெரிய சூரப்புலிதான் போங்கள்! அதை விட்டு விடுங்கள். அதோ பாருங்கள்! அந்த ஆண் சிட்டு கதறுகிறது" என்று அவள் சொன்னாள். அன்றொரு நாள் ஒரு சிட்டுக் குருவிக்கு உயிர் கொடுத்ததை அவன் அப்பொழுது நினைத்துக் கொண்டாள்.

"குருவியை விடமாட்டேன்!"

"விட மாட்டீர்களா? அதைத்தான் சற்று பார்ப்போமே."

கல்யாணி தைரியமாக அவன் கையிலிருந்த சிட்டுக் குருவியைத் தட்டி விட்டாள். சிட்டு பறந்து சென்றது. நடராஜன் சிரித்தான்.

கல்யாணிக்கு அப்பொழுதுதான் அவள் செய்த பிசகு புலப்பட்டது. "சிறுபிள்ளைத்தனமாக நடந்து கொண்டு விட்டோமே" என்ற வெட்கத்தோடு அவள் அறையில் வந்து கதவைச் சாத்திக்கொண்டு விட்டாள். மீனாட்சி வரும் வரையில் அவள் வெளியில் வராமல் அங்கேயே அடைந்து கிடந்தாள்.

அப்புறம் ஒரு வாரம் வரைக்கும் நடராஜனைப் பார்க்கக் கல்யாணிக்குத் தைரியமே ஏற்படவில்லை. அவன்கூட அவளிடம் பேசவில்லை. "கோபித்துக் கொண்டுவிட்டாரோ என்னவோ" என்று கல்யாணி அஞ்சினாள். பிறகு ஒரு நாள் நடராஜனே அவளிடம் பேசினான். அவளுக்கு நிம்மதி ஏற்பட்டது.

ஒரு நாள் நடராஜனின் தகப்பனார் ஊரிலிருந்து திடீரென்று வந்தார். மகனிடம் ஏதேதோ பேசிக் கொண்டிருந்தார். அவன் கல்யாண விஷயமாகத்தான் பேசிக் கொள்கிறார்கள் என்பது தாய்க்கும் மகளுக்கும் தெரிந்தது. கல்யாணி 'தன்னை எங்கே அவன் விட்டுப் போய்விடப் போகிறானோ?' என்று கவலைப் பட்டாள்.

"அப்பா! பணம், அது இது என்று பேசுவதை யெல்லாம் விட்டுவிடுங்கள். குணம், அழகு என்பதையும் பார்க்க வேண்டாமா? நீங்கள் சொல்லும் இடம் வேண்டாம். என் இஷ்டப்படி செய்வதா யிருந்தால், சொல்லுங்கள்" என்று நடராஜன் உரக்கச் சொன்னதை அவர்கள் கேட்டார்கள்.

"நடராஜா! உனக்கு எந்தப் பெண் பிடித்திருக்கு. அதையாவது சொன்னால் முடித்து வைக்கிறேன்" என்று அவன் தந்தை தம் தோல்வியை ஒப்புக் கொண்ட மாதிரி பேசினார். அவர் மறுநாளே திரும்பி விட்டார்.

நடராஜன் படிப்பு முடிந்ததும், நல்லதொரு நாளில், அவனுக்கும் கல்யாணிக்கும் சிறப்பாகத் திருமணம் நடந்தது.

நடராஜனுக்கு நல்ல உத்தியோகமாகக் கிடைத்தது. "கல்யாணியின் அதிர்ஷ்டம் தான் இது" என்று அவன் பக்கத்தில் பேசிக் கொண்டதைக் கேட்டு அவளும், மீனாட்சியும் கொண்ட மகிழ்ச்சிக்கு எல்லையில்லை. ஆனால் மீனாட்சி அதிக நாள் இருக்கவில்லை. மகளுக்குக் கல்யாணமான ஆறாவது மாதமே அவள் கண்ணை மூடிவிட்டாள்.

* * *

கல்யாணியின் சிந்தனை கலைந்தது. அவள் கண்களிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது. சென்ற ஆண்டு காலமான அன்னையைப் பற்றிய நினைப்பு அவளுக்குத் துக்கம் பீறிட்டுக் கொண்டு வரும்படி செய்து விட்டது.

கண்களைத் துடைத்துக் கொண்டு, ஜன்னல் வழியே தெருவைப் பார்த்தாள். அதே சிட்டுக் குருவி, தெருவில் தானிய மணிகளைத் தன் ஜோடிப் பறவையுடன் பொறுக்கிக் கொண்டிருந்தது. தூரத்தில் தன் கணவன் நடராஜன் கையில் பெரிய பொட்டலம் ஒன்றை எடுத்துக் கொண்டு வருவதைப் பார்த்தாள். அடுத்த கணம் சிட்டுக் குருவி போலப் பறந்து தெரு வாசல் பக்கம் விரைந்து ஓடினாள்.

# வட்ட மேஜை

"நன்றி மறப்பது நன்றன்று" என்று சொன்னார் திருவள்ளுவர். "உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு" என்றும் சொன்னார். "என்ன உலகமடா — இது நன்றி இல்லா உலகமடா!" என்று நவீன கவிஞர் பாடிவிட்டது சரியாய்த்தான் போச்சு. இரண்டு தினங்களாகச் சுதேசமித்திரனிலும் தினமணியிலும் சட்டசபை விவாதங்கள் விரிவாக வெளிவந்திருக்கின்றன. நண்பர்கள் படித்துவிட்டு மனம் ஆறாமல் விஷயத்தைச் சொல்லிப் பத்திரிகைகளைத் தந்தார்கள். படித்தோம். அதைப் படித்து நெஞ்சு பொறுக்கவில்லை.

சென்ற வருடம் இதே மாதங்களில் சென்னை அல்லோல கல்லோலப்பட்டது. ராஜாஜி வந்தார்கள். பொது ஜனங்கள் பெருமூச்சு விட்டு அப்பாடி என்று ஆசுவாசப்படுத்திக் கொண்டார்கள். சர்க்கார் நிர்வாகம் எவ்வளவோ சீர்பட்டிருக்கிறது. ரெவின்யூ அதிகாரிகள் மிக்க பயத்துடனும் நேர்மையுடனும் நடக்கிறார்கள். அக்கம் பக்கம் பார்த்து அளந்து பேசுகிறார்கள். எக்காளம் கொட்டின குமாஸ்தாக்களெல்லாம் பொது ஜனங்களிடம் பயத்துடன் நடக்கப் பழகுகிறார்கள். போலீஸ் அதிகாரிகளின் திறமையை இந்திரஜாலம் மகேந்திரஜாலம் என்று சொல்ல வேண்டும். ரிக்கார்டுக்கும் தம் தம் மனச்சாட்சிக்கும் ஒப்ப நிமிர்ந்து நடக்கிறார்கள்.

கடந்த ஐந்து வருட இருள் அகன்று அருணோதம்போலச் சர்க்கார் நிர்வாகம் காட்சி அளிக்கிறது. இன்னும் நாலு வருடம் இப்படி இருந்தால் நமது கலி நீங்கிவிடும் என்பதாகப் பொது ஜனங்கள் எண்ணியிருக்கும் வேளையிலே, "லஞ்சம் அதிகமாகி விட்டது" என்ற அபஸ்வரம் சட்டசபையில் கேட்கிறது. விஷயம் அறிந்த ஊர்க் குருவிகள் இந்த ஜில்லாவிலே வேறு ஒன்றும் பேசிக் கொள்கின்றன. "ஆந்திரா பிரிந்து விட்டது. தமிழ் நாட்டிலோ காங்கிரஸ் மெஜாரிட்டி இருக்கிறது. இனி நம்ம பிழைப்பில் மண்ணைப் போட்டுக் கொள்வானேன்! பெரியவரை அனுப்பிவிட்டால் கருப்புக்கட்டி லைசன்ஸும் பதனீர் லைசன்ஸும் வந்து நமது பைகளை நிரப்பும்" என்று எம். எல். ஏக்கள் சிலர் எண்ணி இம் மாதிரி அபஸ்வரத்தைக் கிளப்புகிறார்கள் என்று ஜனங்கள் பேசிக் கொள்கிறார்கள். நேற்று ஒரு தாலுகா ஆபீஸ் பியூன் சொல்கிறார் :—

"பார்த்தீரா அக்கிரமத்தை! மழை பெய்ய வில்லை என்றால் எப்படி மழை பெய்யும்! இவர்கள் தானே மனுவுக்கு இரண்டு ரூபாய் வீதம் வாங்கிக் கொண்டு ஒன்றரை ரூபாய் தங்களுக்கு வைத்துக் கொண்டு அரை ரூபாய்க் காசை எங்களிடம் விட்டெறிந்து விட்டு அப்படி ஆர்டர் போடு, இதைப் பைசல் செய் என்று அதிகாரம் பண்ணிக் கொண்டிருந்தார்கள்; இப்போது சட்டசபையில் போய்த் தாலுகா ஆபீஸ்களில் லஞ்சம் தலைவிரித்தாடுகிறது என்று கூக்குரல் இடுகிறார்களே! எப்படி மழை பெய்யும்!" என்று கேட்கிறார்.

நம்பிக்கைதான் வாழ்க்கையில் ஜீவன். ராஜாஜி பதவியிலிருந்து போய் விட்டால் அவர் தேகசுகத்துக்குச் சாலவும் நன்று. ஆனால் பல்லாயிரக் கணக்கான வாயில்லாப் பூச்சிகளான கிராமவாசிகளுக்குப் பெரும் துயரம். விஷம மூர்த்திகளுக்கும் ராவண நாதர்களுக்கும் கொண்டாட்டம்!

25—3—53
விட்டலபுரம்

வெங்கடாச்சாரி.



எல்லாவித பல்வலிகளுக்கும்

பல் வெண்மை தரும்.....

ஈறுகளுக்கு வலு தரும்

உபயோகியுங்கள்

குரங்கு மார்க்
கருப்பு பல்பொடி
(REGD)

எங்கும் கிடைக்கும்

3 விதமான சைசுகள்

NOGI & CO.,
87, CHINA BAZAAR Rd., MADRAS-1




---


மில்க் ஆப் மக்னீஷியா
மற்றுமொரு
ஐ.டி.எல். தயாரிப்பு.

வயிற்றிலுள்ள புளிப்பைப் போக்கி
மலசுத்தியை அளிக்கும்.

தயாரிப்பவர்கள்:
தி மைசூர் இன்டஸ்ட்ரியல் & டெஸ்டிங்
லேபரேட்டரி லிட்., மல்லேஸ்வரம், பெங்களூர்.




விற்பனை ஏஜண்டுகள்:

பெஸ்ட் & கோ. லிமிடெட்.,
தபால் பெட்டி நெ. 63
சென்னை


---


3 வாசனைக் கலாரத்னங்கள்

கம் கம் ஜவாஜ் * கம்பால் * கமகர்

அகர்பத்திகள்

டி.எஸ். சுகந்தாலயா,
வாசனைதிரவிய வியாபாரிகள், பெங்களூர்-2

# கரடி வேட்டையும் கல்யாணமும்

சிவசிதம்பரம்

தடதடவென்று யாரோ வேகமாகத் தெருக் கதவைத் தட்டும் சத்தம் கேட்டது.

தெய்வயானையும் குமரவேலும் ஒரு தரம் காது கொடுத்துக் கேட்டனர். அடுத்த கணம் தெய்வயானையின் கண்கள் மிரள மிரள விழித்தன. குமரவேல் மெதுவாகக் கைத்துப்பாக்கியை எடுத்துக் கொண்டு வாசல் கதவை நெருங்கி வந்தார். கதவின் இடுக்கு வழியாகக் கூர்ந்து பார்த்தார். அவர் முகத்தில் புன்முறுவல் தவழ்ந்தது. துப்பாக்கியைக் கீழே வைத்துவிட்டுக் கதவைத் திறந்தார்.

தெய்வயானையின் தகப்பனார் நின்று கொண்டிருந்தார். தந்தையைக் கண்ட தெய்வயானை, "நான் பயந்தே போய்விட்டேன்" என்று சொல்லிக் கொண்டே எழுந்து வந்து தந்தையை அழைத்துக் கொண்டு உள்ளே சென்றாள்.

குமரவேல் துப்பாக்கியைக் கையில் எடுத்துக் கொண்டு அவர்களைத் தொடர்ந்து பின்னால் சென்றார். இதைப் பார்த்த குமரவேலின் மாமனார் "என்ன! கதவு இடிக்கும் சத்தத்தைக் கேட்டதும் கரடி என்று நினைத்து விட்டீர்களோ!" என்று கேட்டுக் கலகலவென்று சிரித்தார்.

"ஆமாம், அப்படித்தான் நினைத்துப் பயந்து போனேன்" என்றார் குமரவேல்.

"இருந்தாலும் நீங்கள் இனிமேல் கரடி வேட்டைக்குப் போகக் கூடாது" என்று சொல்லி விட்டுக் குமரவேலையும் தெய்வயானையும் பார்த்து ஒரு பொருள் பொதிந்த புன்னகை பூத்தார்.

குமரவேலுக்குத் தம்முடைய கரடி வேட்டையின் நினைவு வந்து அவருக்கு ஒரு இன்ப உணர்ச்சியைக் கொடுத்துக் கொண்டிருந்தது.

* * *

சேர்வராயன் மலையிலுள்ள காப்பித் தோட்டங்களில் ஓர் அதிசயம்! அங்குள்ள வீடுகளின் கதவுகளை இரவில் கரடிகள் வந்து தட்டுவதுண்டு! அவ்வீடுகள் பெரும்பாலும் தோட்டச் சிப்பந்திகளின் வீடுகளே. காடுகளின் நடுவே காப்பித் தோட்டங்கள் இருப்பதால் அங்கே இருட்டியதும் கரடிகள் நடமாடுகின்றன. காலையில் கரடிகளின் அடிச்சுவடுகளைத் தோட்டமெல்லாம் காணலாம்.

சில சமயம் பகற்பொழுதிலும் கரடிகள் தோட்டங்களுக்குச் சிறிது தொலைவிலுள்ள இடங்களில் மாடு மேய்க்கும் சிறுவர் சிறுமியரைப் போய்த் தாக்க முயலுவதுண்டு.

கரடிகளின் தொல்லைகளிலிருந்து தங்களைக் காப்பாற்றிக்கொள்ளக் காப்பித் தோட்டத்துச் சிப்பந்திகளுக்குத் தெரியுமானாலும் அவர்களுக்கு எப்போதும் பயம் மட்டும் இருந்து கொண்டே இருக்கும்.

சிப்பந்திகளைக் கண்காணித்து வரும் மேஸ்திரிகள் தங்கள் மேல் அதிகாரிகளின் உதவியை நாடி அடிக்கடி காட்டுக்குள் புகுந்து கரடிகளை வேட்டையாடிக் கொன்று சிப்பந்திகளைக் கரடி பயத்திலிருந்து காப்பாற்றி வருவார்கள்.

அப்படிப்பட்ட மேல் அதிகாரிகளில் ஒருவர் தான் குமரவேல். அவர் காட்டிலாகா மேலதிகாரியாக வந்ததும், ரெட்டிக்காடு காப்பித் தோட்டத்தின் சமீபம் கரடிகள் தொல்லை ஏற்பட்டதாக அறிந்தார். அவர் ரெட்டிக்காட்டுத் தோட்டத்தில் இரண்டொரு நாள் முகாம் போடவும் கரடிகளை வேட்டை ஆடவும் முடிவு செய்தார்.

ரெட்டிக்காடு காப்பித் தோட்டம் அம் மலையின் முக்கிய ஊரான ஏர்க்காட்டிலிருந்து பத்து மைல். இரு இடங்களுக்குமிடையில் நல்ல சாலை ஒன்று இருக்கிறது. ரெட்டிக்காடு காப்பித் தோட்டத்தின் மேஸ்திரி பரமசிவம் காட்டிலாகா அதிகாரிக்கு உணவு, ஜாகை வசதிகளைச் செய்து வைத்தார். கரடி வேட்டையில் நன்கு தேர்ச்சி பெற்ற பழங்குடிகள் சிலரையும் தருவித்திருந்தார்.

அந்தக் காட்டின் நடுவில் காட்டிலாகா அதிகாரிகளுக்கென்று அமைத்திருந்த ஒரு பெரிய மாளிகையில்தான் குமரவேல் வசித்து வந்தார்.

இரவில் குமரவேல் வேட்டையில் தேர்ந்த பத்துப் பேருடனும் வேட்டை நாய்களுடன் காப்பித் தோட்டத்தைத் தாண்டிக் காட்டிற்குள் பிரவேசித்தார். காட்டின் அடர்ந்த பகுதிகளில் கரடிகளின் நடமாட்டம் அவற்றின் சலசலப்பு மூலம் தெரியக் கூடியதாக இருந்தாலும் சுடுவதற்கு வாய்ப்பு ஏற்படவில்லை. திறப்பான வெளியில் கரடி எதுவும் தென்படவுமில்லை. பத்துப் பேர் கூட்டமாக வந்திருப்பதை உணர்ந்தோ என்னவோ கரடிகள் அந்த வேட்டைக்காரர்களுக்குத் தரிசனம் தரவில்லை. கரடிகளை அறை கூவுவதுபோல் வேட்-

## பிரபல திருமணம்



தென் கன்னடத்தைச் சேர்ந்த புத்தூர் ஸ்ரீ கே. எஸ். பரமேசுவர சாஸ்திரி அவர்களின் குமாரி சௌபாக்கியவதி சியாமளாவுக்கும், குடகு ராஜ்யத்தைச் சேர்ந்த சொண்டிகோபா காப்பித் தோட்ட முதலாளி ஸ்ரீ ஜீ. எம். மஞ்சநாதய்யா அவர்களின் குமாரர் ஸ்ரீ ஜீ. எம். கோபாலகிருஷ்ணனுக்கும் புத்தூர் மணமகள் இல்லத்தில் சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது. திருமணத்துக்குத் தென் கன்னடம் குடகு ராஜ்யத்தைச் சேர்ந்த பிரமுகர்களும், நண்பர்களும், உறவினர்களும் விஜயம் செய்து மணமக்களுக்கு ஆசிகூறினார்கள். வாழ்க மணமக்கள்!

டைக்காரர் சிலர் கூச்சலிடுவது முதலிய சில தந்திரங்களைக் கையாண்டும் பார்த்தனர். வேட்டை நாய்களும் சுற்றிச் சுற்றிவிட்டு வாளாகத் திரும்பி வருவதாயிருந்தன. காட்டிலாகா அதிகாரி குமரவேள் ரெட்டிக் காட்டில் முகாம் போட்டிருப்பதை அறிந்து கரடிகள் வேறிடத்துக்கு முகாம் போட்டு விட்டன போலும்.

மறுநாள் பகலில் மீண்டும் கரடி வேட்டைக்குப் புறப்பட்டது, காட்டிலாகா அதிகாரி குமரவேளின் வேட்டைக் கூட்டம்.

குமரவேள் குதிரையில் ஏறிக் கொண்டு ரெட்டிக் காடு காப்பித் தோட்டத்துக்கு மேற்கே மலை அடிவாரத்துக்குச் செல்லும் சிறுபாதை வழியாக முன்னே சென்றார். அவரைப் பின் தொடர்ந்து இதர வேட்டைக்காரர்கள் சாவதானமாக வழி நடந்தனர். காட்டிலாகா அதிகாரிக்கு அந்தப் பிரதேசம் புதிதானாலும் நடை பாதை வழியாகவே செல்வதாக வாக்களித்துவிட்டுத் தனியே சென்றார். அந்த மார்க்கத்தில் வழிப் போக்கர்களைக் கரடிகள் தாக்குவதுண்டு. ஆனால் குதிரை மீது சவாரி செய்பவரை ஒன்றும் செய்வதில்லை. ஆகவே குமரவேள் தைரியமாகத் தனியே முன் சென்றார். பழக்கப்பட்ட இரண்டு வேட்டை நாய்கள் மட்டும் அவருக்குத் துணையாகச் சென்றன.

இரவில் தங்குவதற்கு மச்சு வீடுகள் அமைக்கச் சரியான மரங்கள் தேடிக் கொண்டிருந்ததால் இதர வேட்டைக்காரர்கள் பின்னடையவும், குமரவேள் நெடுந்தூரம் அவ்வழியே சென்று விட்டார்.

கரடியைப்போலவே காட்டில் சில மோகினிப் பிசாசுகள் தொல்லை கொடுத்து வருவதையும் அவர் கேள்விப் பட்டிருந்தார். அது நினைவுக்கு வந்ததும், தான் தன்னைத் தனியாக இருப்பதை எண்ணி ஒரு கணம் துணுக்குற்றார். என்றாலும் மோகினிப் பிசாசுகள் பகல் வேளையில் உலாவுவதில்லை என்ற எண்ணம் தோன்றவே அவருக்குத் தைரியம் உண்டாகி விட்டது. மேலே தொடர்ந்து சென்றார்.

பகல் இரண்டு மணி இருக்கும் அந்த வழியாக ஒரு மோகினி வருவதைக் கண்டார் குமரவேள்! அந்த மோகினியும் குதிரை மீது ஏறிக்கொண்டு காட்டிலாகா அதிகாரியுடன் போட்டியிட்டுக் கொண்டு கரடி வேட்டை ஆட வருவது போல் வேகமாக வந்து கொண்டிருந்தது.

குமரவேள் மிகவும் பயந்து போனார்; அவரை அறியாமலே உடம்பு நடுங்கியது. தாம் தனித்து வந்து விட்டதை நினைத்துத் தம்மைத் தாமே நொந்து கொண்டார்.

பயத்தால் என்ன செய்வதென்று தெரியவில்லை குமரவேளுக்கு. லகானை இழுத்தும் குதிரையோ நிற்கவில்லை. குதிரையை விட்டு இறங்கவும் பயந்தார். குதிரையோ மோகினி வரும் திசையை நோக்கி விரைந்து சென்ற வண்ணமாக இருந்தது!

பொதுவாக மலை அடிவாரத்துக்கு வந்து காப்பித் தோட்டங்களுக்கு வருவோர் இந்த மார்க்கமாகவே வருவார்கள். டோலியிலோ குதிரைமீது சவாரி செய்த வண்ணமோதான் மலைமீது ஏறுவதுண்டு. குமரவேள் பார்த்தது மோகினியும் அல்ல; பிசாசும் அல்ல. நடுக் காட்டில் எதிர் பாராத விதமாய் ஒரு யுவதியைக் கண்டதால் அவரது மனப்பிராந்தியே மோகினியைச் சிருஷ்டித்து விட்டது. மலையடிவாரத்திலிருந்து காப்பித் தோட்டமொன்றுக்கு வந்து கொண்டிருந்த பெண்தான் அவள். அவள் இந்த மார்க்கமாக அடிக்கடி பிரயாணம் செய்வதுண்டு. ஆகவே



பாகவதர்:—இப்படித்தான் என்னைப் பாடச் சொல்லி ஒன்னே ஒன்னு கேட்டு விட்டுப் போகிறேன் என்று வருவீர்கள். ஒன்னு கேட்பீர், பிறகு மெல்ல இரண்டு கேட்பீர், அப்புறம் என் அசோகா பாக்கையே கேட்டு விடுவீர்கள்! ஒன்னே ஒன்னு கேளுங்கள். எது வேண்டும்?

ரசிகர்:—எனக்கு அசோகா பாக்குத்தான் மட்டும் தான் வேண்டும்.

அவள், தன்னுடன் வந்தவர்களைப் பின்னே விட்டு விரைவாக முன்னே வந்து கொண்டிருந்தாள். அவள் குமரவேளைத் தொலைவில் கண்டதும் ஏதோ பழகிய மனிதர் போலிருக்கிறதே என்று நினைத்துக் கொண்டு வந்தாள். குமரவேளுக்கோ நிதானம் இன்னும் ஏற்படவில்லை.

இருவரும் ஏறியிருந்த குதிரைகள் கனைத்துக் கொண்டு ஒன்றை மற்றொன்று நெருங்க விரைந்தன. காட்டிலாகா அதிகாரியும் 'வனதேவதை'யும் மிகவும் நெருங்கி விட்டனர். குமரவேள் அதைரியத்தை விட்டு அப் பெண்ணை உற்று நோக்கினார். அவளும் அவரை உற்று நோக்கினாள். அடுத்த கணம் இருவர் மனக்கண் முன்பும் பழைய சம்பவங்கள் நினைவுக்கு வந்தன!

குமரவேள் கல்லூரியில் பயின்ற காலத்தில் பாரத சேவா சேனையில் சேர்ந்து பணி ஆற்றிக் கொண்டிருந்தார். அந்தச் சேனை ஒரு கிராமத்துக்குச் சாலை ஒன்று அமைத்தபோது குமரவேள் மண்ணை வெட்டிக் கூடையில் நிரப்பியும், குதிரை மீது வந்துகொண்டிருந்த 'வனதேவதை' அக்கூடையைச் சுமந்து சென்று சாலையில் மண்ணைக் கொட்டியும் இருவரும் பணியாற்றினர். அந்நாட்களில் இருவரும் ஒரு மனத்துடன் சேவையில் ஈடுபட்டது போல் வாழ்க்கையிலும் துணைவராகி வாழ இருவரது உள்ளமும் பெரிதும் விரும்பியது. ஆனால் இருவரும் தங்கள் விருப்பங்களைப் பரஸ்பரம் வாய்விட்டுத் தெரிவித்துக் கொள்ள வாய்ப்பு இல்லை. 'சேனை'யின் வீரர்களாயிருக்கும் காலத்தில் கடமையில்தானே கவனமிருக்க வேண்டும்!

ஆனால் குமரவேளும் தெய்வயானையும் ஒருவரை ஒருவர் சந்திக்கும் போதெல்லாம் அவர்களுடைய கண்கள் பேசிக் கொள்ளும். அவர்களுடைய



நண்பர்:—இன்று சமையல் ரொம்பப் பிரமாதம், ஸார்! அடாடா! உங்கள் வீட்டுச் சமையல்காரன் ரொம்பக் கெட்டிக்காரன் போலிருக்கிறதே! அவன் யார், ஸார்?

மற்றவர்:—நீங்கள் போன வாரம் வேலையை விட்டு நீக்கியதாகச் சொன்னீர்களே, அந்த சமையற்காரன்தான் இப்பொழுது என்னிடம் இருக்கிறான்! நீங்கள் இன்று சாப்பிட வருகிறீர்கள் என்று அவனிடம் சொன்னேன்!

செய்கைகள் ஒவ்வொன்றும் அவர்களுடைய உள்ளத்தை எடுத்துக் காண்பிக்கும்.

இதை உணர்ந்த கல்லூரியின் உபாத்தியாயர் அவர்களை ஒருதரம் பிரித்து விட்டு வேலை செய்யச் சொன்னார். அன்று அவர்கள் வேலைகளைக் கவனிக்காமல் தூரத்தில் இருந்தபடி ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டே இருந்தனர். மறுநாள் தங்களுக்கு உடல் சரியில்லை என்று லீவு போட்டு விட்டனர். இதனால் வேலைதான் தடைப்பட்டது.

இதை உணர்ந்து கொண்ட கல்லூரி உபாத்தியாயர் இவர்களைப் பிரிக்காமல் சேர்ந்தே பொது வேலையில் உற்சாகமாக ஈடுபட்டுப் பணியாற்றும் படி பணித்து விட்டார்.

இப்படியாக அவர்கள் காதல் வளர்ந்தது. இருந்தாலும் அவர்கள் தங்கள் உள்ளங்களைத் தங்கள் வாயாலேயே மனம் விட்டுப் பேசித் தெரிவித்துக் கொள்ளும் சந்தர்ப்பம் ஏற்படவில்லை.

கல்லூரி விடுமுறைக்கு அவரவர்களும் அவர்கள் ஊருக்குத் திரும்பிச் சென்றனர்.

ஊருக்குத் திரும்பிய குமரவேள் திரும்பவும் கல்லூரிக்குப் போகவில்லை. காட்டிலாகா அதிகாரி வேலைக்கு வந்து விட்டார். திடீரென்று கிடைத்த வேலையை விட மனமில்லாமல் வேலையை ஒப்புக் கொண்டார். ஆனால் அவர் மனத்தில் மட்டும் தெய்வயானையைப் பற்றிய காதல் நினைவு இருந்து கொண்டே இருந்தது.

எதிர்பாராத விதத்தில் தம்முடைய கல்லூரித் தோழி தெய்வயானையைப் பார்த்தவுடன் குமரவேள் குதிரையிலிருந்து இறங்கினார். தெய்வயானையின் குதூகலத்துக்கு அளவே இல்லை.

"தெய்வயானையா! உன்னைப் பார்த்து மோகினி என்றல்லவா பயந்து போய் விட்டேன்" என்று சொன்னார் குமரவேள்.

தெய்வயானையோ "நான் உங்களைக் காப்பித் தோட்டப் பயங்கரக் கள்வர்களில் ஒருவர் என்று நினைத்தல்லவா பயந்து போனேன்!" என்று சொல்லிக் கல கலவென்று சிரித்தாள்.

இதே சமயத்தில் யாரோ சமீபத்தில் நடந்து வரும் காலடிச் சத்தம் கேட்கவே, குமரவேள் திரும்பிப் பார்த்தார். வேட்டைக்காரன் ஒருவன் ஓடி வந்து கொண்டிருந்தான். அந்த ஆள் மிக முக்கிய சமாசாரம் கொண்டு வருவது போலிருந்தது. ஆம்! முக்கிய சமாசாரம்தான். இரண்டொரு கரடிகள் நடமாடும் இடத்தைக் கண்டு பிடித்து விட்டதாக அந்த ஆள் கூறினான்.

குமர வேளுக்கு இனி வேட்டையில் நாட்டம் செல்லுமா! ஏதோ சமாதானம் சொல்லி வேட்டைக்காரர்களை யெல்லாம் அங்கிருந்து திரும்பிப் போகும்படிச் சொல்லி விட்டார்.

குமரவேளின் இந்தத் திடீர் மாறுதலை உணர்ந்து கொண்ட வேட்டைக்காரர்கள் குமரவேளையும் தெய்வயானையையும் பார்த்துப் புன்னகை செய்து கொண்டே சென்றனர்.

இனிமேல் இவர் கரடி வேட்டைக்குக் கிளம்ப மாட்டார். நமக்கும் தொல்லையில்லை என்று நிம்மதிப்பட்டனர் சிலர்.

வேட்டைக்காரர்கள் சென்ற பிறகு குமரவேள் தெய்வயானையின் சமீபத்தில் நெருங்கி வந்தார். கல்லூரியில் நடந்த பழைய சம்பவங்களை நினை வூட்டிக் கொண்டு பேச ஆரம்பித்தார்.

அப்பொழுது மேஸ்திரி பரமசிவம் சிவ பூஜையில் கரடி புகுந்ததுபோலக் குமரவேளுக்கும் மோகினிக்கும் மத்தியில் வந்து நின்றார்.

திடீரென்று தோன்றிய பரமசிவத்தைப் பார்த்ததும் குமரவேளுக்குக் கோபம் கோபமாக வந்தது. ஒருதரம் பரமசிவத்தை நோக்கி விழித்துப் பார்த்தார். மறுகணம் அவரை அதட்டும் பாவனையில் ஏதோ சொல்ல ஆரம்பித்தார்.

அதுவரையில் வேறு ஏதோ கவனத்திலிருந்த தெய்வயானை குமரவேளுக்கு முன்னால் பயந்த வண்ணம் நின்று கொண்டிருந்த மேஸ்திரி பரமசிவத்தைப் பார்த்தாள். அடுத்த கணம் புள்ளி மான்போல் துள்ளி ஓடி "அப்பா! நீங்களும் வந்திருக்கிறீர்களா!" என்று கேட்டுக் கொண்டே தன் தந்தையை அணைத்துக் கொண்டாள்.

இந்தக் காட்சியைப் பார்த்த குமரவேளுக்கு ஒன்றும் புரியவில்லை. தம் இடத்திலே வேலை பார்க்கும் மேஸ்திரி பரமசிவத்தின் மகளா தெய்வயானை! என்று எண்ணிக்கொண்டே தம்மை மறந்து நின்று கொண்டிருந்தார்.

அதற்குள் பரமசிவத்தின் காதில் தெய்வயானை ஏதோ குசுகுசுவென்று சொன்னாள்.

"உங்களைக் குறித்து தெய்வயானை அடிக்கடி கூறுவதுண்டு. என் மகள் மிகவும் பாக்கியசாலிதான்" என்ற மேஸ்திரி பரமசிவத்தின் வார்த்தையைக் கேட்ட குமரவேள் தம் உணர்ச்சி பெற்றுப் புன்முறுவல் புரிந்தார். அவருக்குப் பக்கத்தில் வனமோகினி போல் நின்று கொண்டிருந்த தெய்வயானையைப் பார்த்துப் பூரித்துப் போனார்.

அத்துடன் காட்டிலாகா அதிகாரி குமரவேளின் கரடி வேட்டையும் நின்று விட்டது.

*   *   *

அடுத்த சில வாரங்களில் குமரவேளுக்கும் தெய்வயானைக்கும் திருமணம் நடந்தேறியது.


தெய்வயானையின் அழகிய முகத்தைப் பார்க்கும் போதெல்லாம் குமரவேளுக்குத் தம்முடைய கரடி வேட்டையும் நினைவுக்கு வந்துவிடும்.

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" press
No. 20, Dr. Guruswamy Mudaliar Road, Kilpauk, Madras – 10


தினசரித்தொல்லையான அழுக்கிலுள்ள
கிருமிகளிலிருந்து உங்கள் ஆரோக்கியத்தைக்
காப்பாற்றிக்கொள்ளுங்கள் ...
லைப்பாயின்
பாதுகாக்கும் நுரையினால்!
நீங்கள் எவ்வளவு ஜாக்கிரதையாயிருந்தாலுங்கூட, தினசரித்தொல்லையான அழுக்கிலுள்ள கிருமிகளின் அபாயத்துக்குள்ளாக நேரிடும். லைப்பாய் சோப் உபயோகித்துத் தவறாமல் ஸ்நானம் செய்து உங்கள் ஆரோக்கியத்தைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள். லைப்பாய் சோப்பின் பாதுகாக்கும் நுரை அழுக்கிலிருக்கும் கிருமிகளை விரட்டுகிறது. உங்களை நாள்முழுவதும் புத்துணர்ச்சியுடன் இருக்கச் செய்கிறது.
LIFEBUOY
லைப்பாய் சோப்

L. 220-50 TM

REGD. No. M. 4392
*Registered as a newspaper in Ceylon*



நாளுக்கு நாள்
அதிக தெளிவான,
எழிலோங்கும் சருமம்



ரெக்ஸோனாவிலுள்ள **கேடில்** இந்த அற்புத
வேலையைச் செய்யட்டும்



ரெக்ஸோனாவின் கேடில் கலந்த நுரையை உங்கள் சருமத்தில் மெதுவாகத்தேய்த்து, பிறகு கழுவுங்கள். உங்கள் சருமம் நாளுக்கு நாள் அதிக மழமழப்பும் தெளிவும் பெறுவதைக் காண்பீர்கள்.




ரெக்ஸோனா
கேடில்* கலந்த சோப் இது ஒன்றே

* சருமத்திற்கு ஊட்டமளித்து மிருதுவாக்கும் எண்ணெய்களின் பிரத்தியேகக் கலவையின் ரெஜிஸ்டர் செய்யப்பட்ட பெயர்.

RP 107-50 TM　ரெக்ஸோனா ப்ரொப்ரைட்டரி லிமிடெட்டுக்காக இந்தியாவில் தயாரித்தது.